4

உமா

ஆசிரியர். ஜி. உமாபதி

UMA

As 4 அணா

JULY. 57.


சரும வியாதிகளுக்கு
சிராய்ப்புகள், வெட்டுகள், படை, சொரி, கரப்பான், கட்டிகள், கடி, விஷக்கடி, சதைத் தடிப்பு, முகப்பரு போன்ற இதர சரும உபாதைகளுக்கு
எக்ஸிமா
கட்டிகள்
பருக்கள்
வெட்டுக்காயம் புண்கள்
Germex
ஜெர்மெக்ஸ்
குளோரோபில் கலந்தது
லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் & பார்மசூடிகல்ஸ் லிட்., மதராஸ்-1

சென்னையில்
சித்ரா, பிரபாத், காமதேனு, ஸரஸ்வதி
மற்றும் தென்னுடெங்கும் வெற்றிகரமாக நடைபெறுகிறது

ஜுபிடர்

கற்புக்கரசி

அற்புதமானதோர்
கற்பனைக் களஞ்சியம்

டைரக்ஷன்: A.S.A.சாமி

கலை அழகு மிகுந்து கவர்ச்சிகரமாகத் திகழ "பாக்கேஜிங்"



நீங்கள் தயாரிக்கும் சரக்குகளை விற்பனைக்கு அனுப்புவதற்கு முன்பாக, அழகுறச்செய்ய ஏன் "பாக்கேஜிங்" நிபுணர்களைக் கலந்து ஆலோசிக்கக்கூடாது?

உமா பிரிண்டர்ஸ் எந்தச் சரக்கிற்கும் ஏற்ற எழிலான தோற்றமும், பாதுகாப்புடன் கூடியதுமான, எல்லாவித அட்டைப் பெட்டிகள் தயார் செய்யத் தேவையான இயந்திர வசதி படைத்தவர்கள். நெடு நாளைய அனுபவம் உடையவர்கள். அவர்களைக் கலந்து ஆலோசியுங்கள். உங்கள் பணிபுரிய என்றும் உற்சாகத்துடன் இருப்பவர்கள்

உமா பிரிண்டர்ஸ்

ஸ்தாபிதம்: 1945

உமா இல்லம், சென்னை-1, (தமிழ்நாடு).

தென்னிந்தியாவில், அச்சிட்ட கலர் 'கார்ட்டன்'கள், அட்டைப் பெட்டிகள் தயாரிப்பதில் முதன்மையானவர்கள்.

எங்களிடத்தில் ஓவியம், பிளாக்குகள் மற்றும் அச்சுவேலைகளுடன், ஆப்செட் பகுதியும் உள்ளது.



EP

போன்: 2200. தபால் பெட்டி: 1377. தந்தி: ATTAPOTTY

இந்தியன் பாங்க்

வரும் ஆகஸ்டில்

பொன் விழா

கொண்டாடுகிறது

1907-ல் துணிவும் தூரதிருஷ்டியும் படைத்த நபர்களால் சிறிய அளவில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்தியன் பாங்கியின் விவேகமான நிர்வாகப் பலனுகவும், வர்த்தகத்தில் விவேகத்துடன் ஈடுபட்டதாலும், இன்று உறுதியும் வலிமையும் அடைந்திருக்கிறது. ரூ. 64,70,045-க்கு செலுத்தப்பட்ட மூலதனத்துடனும் ரூ. 32·26 கோடிகளுக்கு டிபாசிட்டுகளுடனும் ரூ. 54·91 கோடிகளுக்கு செலாவணி நிதிகளுடனும், முக்கிய பகுதிகளில் கிளைகளுடனும் பாங்க் அதன் வாடிக்கையாளர்களுக்கு சகலவித பாங்க் சேவை அளிக்க எல்லா வசதிகளையும் பெற்றிருக்கிறது.

டி. பி. பார்த்தசாரதி,
காரியதரிசி.



தலைமைக் காரியாலயம் :
சென்னை.

தென்னுடு முழுவதிலும் மற்றும் இந்தியா, சிலோன், மலேயா நாடுகளில் முக்கிய நகரங்களிலும் கிளைகள்.

உமா

ஆசிரியர்: ஜி. உமாபதி

பொருளடக்கம்

செடி 5 மலர் 3	ஜூலை, 57	ஏவிளம்பி-ஹூ ஆடி - மீ

தமிழினத்தின் பொறுமையை
அதிகமாகச் சோதிக்காதீர்கள் (தலையங்கம்) 7
வாழ்க ம. பொ. சி. பல்லூழி! 8
வள்ளுவர் – ம. பொ. சி. – பண்டாரநாயகா 9
பண்பு வெட்கப்படுகிறது (தம்பிக்கு) 10
உங்களுடன் ஒரு கணம் 12
கூண்டுக் குருவி 15
வாடா விளக்கு (தொடர்கதை) 18
மணி என்ன? 23
அதிசயம் 29
நெஞ்சின் நிலை 31
வெள்ளிச் சிலம்பு 33
வளரும் தமிழ் (மதிப்புரை) 37
நினைவு அலைகள் 38
முருகன் முன் நிற... 45
கற்புக்கரசி (பட விமரிசனம்) 49
ஒளி மீண்டது 52
பொன்னான சந்தர்ப்பம் 57
என்று காண்போம்? (கவிதை) 59
சந்தித்தோம்—சிந்தித்தோம் 60
எங்கள் இதயங்கள் பேசுகின்றன 67
கதை கதையாம்...! (பாப்பா உமா) 69
இவர்கள் எழுதுகிறார்கள் 71
திருட்டுப் பையன் 72

19729

'உமா'வில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே. சம்பவங்களும் கற்பனையே.

துணை ஆசிரியர்
பூவை எஸ். ஆறுமுகம்

தமிழினத்தின் பொறுமையை அதிகமாகச் சோதிக்காதீர்கள்!

தமிழகத்தின் அமைச்சர்களே! இன்னும் எவ்வளவு காலம்தான் தமிழ் இனத்துக்கு ஏற்படும் இன்னல்களுக்குப் பரிந்து பேசாமல் இருக்கப் போகிறீர்கள்?

ஐந்தாண்டுத் திட்டத்தின் நமக்கு முக்கிய தேவையான தொழில் வளங்களைப் பற்றியோ, உண்ண உணவு பற்றாக்குறை பற்றியோ, உடுத்தும் ஆடைகளைப் பற்றியோ, இருக்க இடத்தைப் பற்றியோ கேட்க மறந்து போனீர்கள்.

தேவிகுளம், பீர்மேடு, செங்கோட்டை பற்றியும் அவையிலே ஆதாரம் காட்டிப் பேசி, வாங்கியே முடிப்போம் என்றெல்லாம் முழக்கமிட்டு, பிறகு முயற்சித்து முடிக்கமுடியாமல் சும்மா இருந்துவிட்டீர்கள்.

மத்திய ஆட்சியிலே தமிழினத்துக்குக் கிடைக்க வேண்டிய முக்கியமான பதவிகள் கொடுக்கப்படாத பரிதாப நிலையைக் கண்டும் பதறாமல் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறீர்கள்.

இமிழ்கடல் வரைப்பில் தமிழகம் என்று பெருமை பேசும் நாம் கல்வி, கலை, கலாச்சாரம், வீரம் இவை யாவும் ஒருங்கே அமையப் பெற்ற நமக்கு இத்துறையிலும் நியாயமான நீதி அளிக்கப்படவில்லை. இவைகளைப்பற்றியும் ஏன் என்று கேட்காமல் இருக்கிறீர்கள்.

இவற்றில் பல விஷயங்கள் கடந்து போனவை. இதோ, நடக்கவிருக்கும் வடக்கெல்லையின் நீதியை எதிர்பார்த்து ஏங்கி நிற்கிறோம். எங்களுக்கு நீங்கள் அமைச்சர்களல்லவா? பின், ஏங்கி நிற்காமல் என்ன செய்வோம்?

தெலுங்கினத்தின் அமைச்சர்கள் மட்டும்தானா? கட்சி, மத, இன சார்பற்று விளங்க வேண்டிய பாராளும் மன்றத்தின் சபாநாயகர் உள்பட அந்த மக்களிடத்தில் அன்பு காட்டுகிறார்கள். அவர்கள் கோரிக்கை அநியாயமானது என்று தெரிந்தும்கூட பரிந்து பேசும் நிலையைக் காண்கிறோம்.

இதோ, உங்களிடம் நாங்கள் உண்மையான – சரித்திர சம்பந்தமான தமிழினத்தின் பிரதேசத்தைக் கேளுங்கள் என்று ஞாபகமூட்டினோம்; முறையிட்டோம்; முடிவில் உங்களால் சிறைக்கு அனுப்பப்பட்டோம். இத்தனை செய்தும், நீங்கள் எங்களுக்குப் பரிந்து பேசாவிட்டாலும், அவர்கள் பேசும் பொய்யுரைகளுக்காவது மறுப்பு தந்திருக்கலாம். ஆனால், நீங்கள்தான் என்ன சொல்கிறார்கள் என்று பார்க்காமல், யார் சொல்கிறார்கள் என்று பார்க்கிறீர்களே!– எங்கே செய்யப் போகிறீர்கள்? இவை யாவும் மக்கள் மறந்து மன்னிக்க படாஸ்கர் நீதி அநீதியாக இருந்தால், மறுத்துப் பேசி மாகாணத்தின் உரிமையைக் காப்பாற்றுங்கள். அல்லது நீங்களும் அவர்களுடன் சேர்ந்து தமிழினத்தின் பொறுமையை அதிகமாகச் சோதிக்காதீர்கள்.

வாழ்க ம. பொ. சி. பல்லூழி

'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்திற்கு ஒரு சிலம்புச்செல்வர்' என்று பெருமையாகப் பேசப்படும் அழியாப் புகழுக்குப் பாத்திரமான தனித்தலைவர் திரு ம. பொ. சி. — அவர்களின் ஐம்பத்தோராவது ஆண்டு நிறைவு விழா கடந்த மாதம் 26-ம் தேதியன்று கோகலே மன்றத்தில் மிகவும் சிறப்பாக நடந்தது.

தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் தேச சேவைக்கெனக் காணிக்கை வைத்த செந்தமிழ்ச் செல்வரின் தியாகசீலம் பற்றியும், தேசிய கலாசாரம் பொருந்திய தமிழரசுக் கழகத்தைத் தோற்றுவித்து இலக்கியம், பண்பாடு, கலாசாரம் முதலானவற்றை வளர்த்து வரும் அவருடைய தொண்டு குறித்தும், தமிழகத்தின் தலைநகரைக் காப்பாற்றிக்கொடுத்துப் பின்னர் தெற்கெல்லையை மீட்டுத் தந்து, இப்பொழுது வடக்கெல்லையை மீட்கப் பாடுபட்டு வரும் அன்னாரது பொதுநலப்பணியைப் பற்றியும், தமிழ் அரியாசனம் ஏற அவர் அல்லும் பகலும் உழைத்ததைக் குறித்தும் எல்லாக் கட்சிகளையும் சார்ந்த நல்லறிஞர்கள் பலர் சொற்பெருக்காற்றித் தங்களது நன்றிக்கடனைத் தீர்த்துக் கொண்டார்கள்.

தமிழ் மண் கடமை தவருத— நன்றி மறவாத நாடாக என்றென்றும் விளங்க வேண்டும். ஆகவே, சிலம்புச் செல்வர் அவர்கள் கன்னித் தமிழ் போல பல்லூழி காலம் வாழ அருள் புரியுமாறு தமிழ்ச் சக்தியை நாமும் பணிவன்புடன் வேண்டுகின்ருேம்.

உலகம் சுற்றும் நேரு

அரிசி அரசியலில் முக்கிய அங்கம் வகித்துள்ள நேரம் இது; அணுகுண்டுபிரச்சினை அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா ஆகிய மூன்று நாடுகளையும் கடந்து உலகப் பிரச்சினையாகிப் பயமுறுத்திக் கொண்டிருக்கும் இக்கட்டான பொழுது இது; சிக்கனத்தின் அவசியம் ராஜ்யங்கள் தோறும் ஒலி பரப்பப்படும் சங்கடமான வேளை இது; 'முன்னேடி' என்ற புகழ் பெற கேரளம் பாடுபடும் அதிசயமான நேரம் இது.

இத்தகைய குழப்பங்கள் உருவாகிவிட்ட துன்பச் சூழ்நிலையிலே பாரதப் பிரதமர் நேருஜி மறுபடி தம்முடைய அயல் நாட்டுப் பயணத்தைத் தொடங்கி யிருக்கிருர்.

சிரியா போன்ற நாடுகள் இந்தியாவின் தனிப் பெருந் தலைவரை அமோகமாக வரவேற்றன என்பதற்குப் பத்திரிகைச் செய்திகள் ஆதாரம் தருகின்றன. 'மக்களுக்கு நம்பிக்கையூட்டும் சமாதான தூதுவர்' என்று கௌரவம் அளித்திருக்கிருர்கள். ஆனந்தப் பட வேண்டிய தகவல்தான்.

ஆனல், இம்மாதிரிப் பிரயாணங்கள் இந்தியாவின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் எந்த வகையில் பயன் படுமென்பதைப் பொது மக்கள் உணரும் வண்ணம் நேருஜியின் திக்விஜயம் அமைய வேண்டும்.

தமிழ் எழுத்தாளர் மாநாடு

ஐந்தாவது தமிழ் எழுத்தாளர் மாநாடு சென்னை ராஜாஜி மண்டபத்தில் கடந்த 22, 23 தேதிகளில் வெகு விமரிசையாக நடந்து முடிந்தது. நீதிபதி திரு எஸ். வரதாச்சாரியார் தலைமையில் முதுபெருந் தமிழ்த் தொண்டர்களான திரு சம்பந்த முதலியா

ருக்கும் திரு சோமசுந்தர பாரதிக்கும் கேடயங்கள் வழங்கப்பட்டன.

தமிழ் எழுத்தாளர்கள் பிற மொழிகளிலும் இடம் பெற வேண்டும் என்றும் பேசப்பட்டது. மகிழ்ச்சியுடன் வரவேற்கப் பட வேண்டிய செய்தி இது. ஆனால் இப்பேச்சு சொல் வடிவில் மாத்திரம் நின்று விடக் கூடாது என்பது நம் எச்சரிக்கையாகும்.

சென்னை ராஜ்யத்திற்கு 'தமிழ் நாடு' என்று பெயரிடுக எனவும் இம் மாநாடு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. ஆட்சிப் பொறுப்பாளர்கள் செய்ய வேண்டிய கடமையை நிறைவேற்றுவதில் எழுத்தாளர் சங்கம் முழு மூச்சுடன் பணி புரிந்தால், இந்தப் பணி தமிழ்ச் சரித்திரத்தில் இடம் பெறும்.

''தமிழ் எழுத்தாளர் ஒவ்வொருவரும் தமிழ் மறையான திருக்குறளைப் படித்தறிய வேண்டும்; பிறர் மனம் புண்படாமலும் அதே நேரத்தில் அவர்கள் மதி திருந்தி நேர்வழி நடக்க உதவுவதாகவும் எழுத்துக்கள் அமைய வேண்டும். பண்பட்ட நிலையில் நின்று எழுத வேண்டும். எழுத்தாளர் தங்கள் எழுத்துக்களைச் செங்கோலாகவும், வேலாகவும் பயன்படுத்த வேண்டும்,'' என்று ம. பொ. சி. அவர்கள் பேசினார்கள்.

பேராசிரியர் திரு கல்கி அவர்கட்கும் திரு தேவன் அவர்களுக்கும் ஞாபகச்சின்னம் அமைத்து, அந்த நினைவு மண்டபத்திலேயே அடுத்த ஆண்டு மாநாடு நடந்தால், எழுத்தாளர் சங்கத்தின் அரிய சாதனையை அனைவரும் போற்றிப் புகழ்வார்களென்பது உறுதி. நல்ல செயல்களைச் சாதிக்கவேண்டும் என்பதற்கு இச்செயல் மற்றவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகவும் அமையும்.

திருவள்ளுவர்—ம. பொ. சி—பண்டாரநாயகா

சாதி, மதம், காலம், தேசம், மொழி முதலியவற்றால் உண்டாகும் வேற்றுமைகளைக் களைந்து, உலகத்துள்ள மக்கள் அனைவரும் ஒப்ப ஏற்றுக் கொண்ட முறையில் இயற்றப்பட்ட நூல் திருக்குறள். இதனை உலகத்தின் பல்வேறு மொழிகளிலும் பெயர்த்து எல்லா மக்களும் போற்றிப் புகழ்கின்றனர். இத்தகைய தனிப்பெருமை வாய்ந்த தமிழ் மறையைப் படைத்த தெய்வப் புலவர் திருவள்ளுவரின் விழா கடந்த மாதம் தமிழ் நாட்டிலே கோலாகலமாகக் கொண்டாடப் பட்டது. விழாவின் வெற்றி வள்ளுவரின் வெற்றி; தமிழின் வெற்றி.

இலங்கைத் தமிழ் மறைக் கழகத்தினர் ஆண்டுதோறும் திருக்குறள் மாநாடு நடத்தி வள்ளுவர் விழாவைச் சிறந்த முறையில் கொண்டாடி வருகிறார்கள். இம் முறை மேற்படி விழாவுக்குச் செந்தமிழ்ச் செல்வர் தலைவர் ம. பொ. சி அவர்களை அன்புடன் அழைத்திருந்தார்கள். ஆனால், இலங்கைப் பிரதமர் திரு பண்டாரநாயகா, சிலம்புச் செல்வருக்குத் தடை விதித்து விட்டார். இது தமிழுக்கு விதித்த தடை, தமிழ் மொழிக்குச் செய்த அநீதி என்பதை ஊரும் உலகமும் அறிந்து கொண்டன; தமிழ்ப் பற்றுக் கொண்ட பத்திரிகைகள் எல்லாம் இலங்கைப் பிரதமரின் அடாத செயலைக் கண்டித்துத் தலையங்கங்கள் தீட்டியிருக்கின்றன.

காரணம் காட்டாமல் ம.பொ.சி அவர்களுக்கு பண்டார நாயகா விதித்த தடை, அவர் பங்கு கொண்ட பஞ்ச சீலத்திற்கு

விரோதமானது. தமிழக அமைச்சர்கள் தடை விதித்த இந்த அநீதியை யாருக்கு விதித்தார்கள் என்று பார்த்தார்களே தவிர, எதற்கு—எந்த இனத்திற்கு விதித்தார்கள் என்று பார்க்க மறந்து போனார்கள். இந்த அநீதிக்குப் பரிகாரம் கோரும் பொறுப்பு நம்முடைய சென்னை அரசாட்சியின் கடமை; அத்துடன் இவ்விஷயத்தில் மத்திய ஆட்சியாரும் தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டு ஆவன செய்ய வேண்டும். இல்லையென்றால், இலங்கையின் அரசியல் கண்ணோட்டத்திலே இந்தியா தாழ்ந்தே காணப்படுமென்பதையும் நினைவூட்டுகின்றோம்.

இலங்கை வாழ் தமிழர்களின் போராட்டம் சுமுகமான வழியில் தீர்வு காணும் நிலை ஏற்படுவதாகத் தெரியவில்லை. 'சிங்களம் மாத்திரமே அரசாங்க மொழி' என்ற சட்டத்தை எதிர்த்துப் போராடி வரும் இலங்கைத் தமிழர்கள் ஆகஸ்டில் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப் போகின்றனர். இலங்கை அரசாட்சியில் தமிழ் மொழிக்கும் சிங்கள் போன்று அரசாங்க அந்தஸ்து சமநிலையில் ஏற்பட்டால்தான் மேற்படி போராட்டம் ஓய்வு பெறும். எனவே, திரு. பண்டாரநாயகா மேலும் மேலும் தமிழர்களின் மனக் கசப்பைச் சம்பாதித்துக் கொண்டே போகாமல், தம்முடைய மனச்சாட்சியின் கண்களைத் திறந்து, தமிழ் மக்களின் மொழிப் பிரச்சினை-பிரஜா உரிமைப் பிரச்சினை ஆகிய இரண்டையும் நேர்மையான முறையில் தீர்த்து, அவர்களின் துன்பக் கண்ணீரைத் துடைத்துத்தான் தீர வேண்டும். இல்லையென்றால், கோரிய உரிமைகளை வெற்றியுடன் பெறும் வரை தமிழ் மக்கள் உறங்க மாட்டார்கள். பழைய தமிழ்ச் சரித்திரம் விளக்கிக் கொண்டிருக்கும் முடிவு இது. ★



தம்பிக்கு

'பதி'

பண்பு வெட்கப்படுகிறது!

அன்புள்ள தம்பி!

நம்முடைய நாட்டு மக்கள் கலாசாரத்தை ஒழித்து அழிவுப் பாதையை நோக்கிச்சென்று கொண்டிருக்கிறுர்கள். இந்த நேரத்தில் நம்முடைய கடமையைச் செய்தால்தான் இந்தப் பழம் பெரும் தமிழகத்தின் பெருமையைக் காப்பாற்ற முடியும். இல்லையெனில் அவர்களையும் மீள வைக்க முடியாமல் நாமும் அதிலே அழிந்து போவோம்.

பார் தம்பி! நம் நாட்டில் ஒரு பெண் கற்பின் பெருமையை உணரா விட்டால், அவள் சமுதாயத்தில் ஒரு தீண்டப்படாதவளாகவும் மதிக்கத் தகாதவளாகவும் குறைத்து வைத்து, கற்பின் சிறப்பை காப்பாற்றி வந்தார்கள். ஆனுல், இப்பொழுதோ கற்பிழந்தவர்கள்தான் அரசியல் வட்டாரங்களிலும் கலைத்துறையிலும் கனவான்கள் வீட்டிலும் காட்சியளிக்கிருர்கள். அவர்கள் இல்லத்திற்கு அமைச்சர்கள், நீதிபதிகள், அரசியல் தலைவர்கள், உயர்தர உத்தியோகஸ்தர்கள், ஏன், சமுதாயத்திலுள்ள எல்லாப் பெரிய மனிதர்களுமேதான் அங்கு சென்று சிறப்பிக்கிருர்கள்.

இதைப் பார்க்கும் கற்பரசிகள் ஒரு சிலர் கற்பின் பெருமை இது தானு என்று பெருமூச்சு விட்டு, பாதை தவறுவதிலே இன்றைய சமுதாயத்தில் பங்கம் ஒன்றும் வரவில்லை என்பதாக நினைத்து, சறுக்கி விழ முயற்சிக்கிருர்கள். அப்போது அவர்களிடம் அந்தக் கற்பு ''என்னைக் காப்பாற்றுங்கள்'' என்று கெஞ்சுகிறது. கற்பரசிகளின் உயர்வை இமயத்தின் சிகரத்தைவிட—கற்பனைக்கும் எட்டாத அளவுக்கு—நம் நாட்டின் கடந்தகால இலக்கியகர்த்தர்கள் உயர்த்தி இருந்தார்கள். ஆனுல் இன்று அந்தக் கற்பு வேதனைப் படுகிறது.

இப்போது, கற்பின் திண்மையும் அதன் பெருமையும் இன்று வெட்கப்படுவது போல் காட்சியளிக்கலாம். இன்றைய சமுதாயத்திலேயே மீண்டும் பழைமைக்கே பெருமை தந்து மதிக்கும் நிலை வளர்ச்சி பெற்று வருகிறது. நளாயனி, அருந்ததி, அனசூயை, சாவித்திரி, கண்ணகி கதைகள் கற்பரசிகளின் சக்தியைக் காட்டி, கற்பின் பெருமையைக் காப்பாற்றி வந்தன. அவைகள் நம்ப முடியாத கற்பனையென்றும் பகுத்தறிவுக்கு எட்டாத வெறுங்கதைகள் என்றும் சொல்லி, அதன் பெருமையைக் குறைக்க முயலுகிருர்கள்.

ஆனுல் இவர்களின் இன்றையப் படைப்பான அற்பாயுள் இலக்கியங்கள் சமுதாயத்தையும் அழித்து, அவையும் அழிந்து போகின்றன.

குறை சொல்லும் இவர்கள் அதைவிடச் சிறந்த இலக்கிய இதிகாசங்களைப் படைத்து நாட்டின் பெருமையை உயர்த்த முற்பட்டிருந்தால், உண்மையாக மக்களின் நிரந்தரமான வரவேற்பு கிடைத்திருக்கும்.

ஆனுல் காலத்தாலும் அழிக்க முடியாத சிரஞ்சீவித் தன்மை படைத்த இத்தகைய இலக்கியங்கள்தான் மீண்டும் தேவையென்பதைப் பலரும் புரிந்துவருகிருர்கள்.

இப்படித்தான் ஆண் மக்கள் ஒரு சிலர் பஞ்சமாபாதகங்கள் அனைத்தையும் செய்கிருர்கள். குறுக்கு வழியிலே சென்று பணத்தைத் திரட்டுகிருர்கள். சமுதாயத்தின் எதிரிகளான இவர்கள் இப்படி தற்காலிகமாக உயர்ந்து மாடமாளிகைகளுடனும், வாகன வசதிகளோடும் வாழ்கிருர்கள். இதைப் பார்க்கும் பண்புள்ளம் படைத்தவர்கள் தமக்கே உரித்தான உயர்ந்த பொக்கிஷமாகக் கருதும் பண்பை இழக்கயோசிக்கிருர்கள். பண்பு அப்போது பரிதாப

நிலையை அடைகிறது. இவை யாவும் நாம் பார்க்கும் போது, என்ன காண்கிருேம்? ஒழுக்கத் தோடும் உயர்ந்த பண்போடும் வாழ்வோரின் வாழ்க்கைத் தரம் உயராது என்ற தவருன முடிவுக்கு வந்து விடுகிருேம். இன்றைய சூழ்நிலை தரும் காட்சி அது.

ஆனல் தம்பி, பாதை தவறிச் சென்றவர்கள் பலகாலம்உயர்ந்து வாழ்ந்ததாகச் சரித்திரச் சான்று களில் இது வரையில் நாம் காண வில்லை. குறுக்குப் பாதையிலே உயர்ந்த அரசியல் தலைவர்கள் பலர் இன்று இருக்கும் இடம் தெரியாமல் மறைந்து போனர்கள். சொந்தச் சரக்கு இல்லாமலே போலி அறிஞர்களக நடித்தவர் கள் பின்னே அவர்கள் வேஷம் கலைக்கப்பட்டு வெறும் மனிதர்க ளாக ஆக்கப்பட்டார்கள். மற்றவர் களின் அறிவுத் திறன்களை யெல் லாம் பணத்தின் மூலம் தனதாக்கி சிந்தனைச் சிற்பிகளாக வாழ ஆசைப் பட்டவர்கள், பின்னே சிரிப்பிற்கு ஆளாக்கப்பட்டார்கள்.

இவர்களை ஒழிக்க உண்மைச் சக்தி படைத்தவர்கள் எல்லாம் வெளிவர அஞ்சுவதனல்தான், அக் கிரமக்காரர்களும், அயோக்கியர் களும், அடிமைப் புத்தி படைத்த வர்களும், நாகரீகத் திருடர்களும், நயவஞ்சகர்களும் நாட்டிலே பெருத்துப் போனர்கள்.

ஆதலால், இதிலேயிருந்து இவர் களைப் பற்றி நாம் புரிந்துகொள்ள வேண்டியது இன்னெரு முக்கிய விஷயமும் உள்ளது. குறிப்பிட்ட ஒரு துறையிலே மிகுந்த ஆற்ற லும் அறிவும் பெற்றிருந்தால் மட் டும் போதாது; பொது அறிவும் பொதுச் சேவையும் சரளமாகப் பழகும் சுபாவமும் படைத்தால் தான் சமுதாயத்திலே அவர்கள் சக்தி பூரணமாக வெளிப்படும் என்பதையும் நீ புரிந்து கொள்ள வேண்டும்.

செங்கோல்

அச்சக அமைப்பில் சில மாறு தல்கள் செய்யவேண்டியிருப்ப தால், இவ்வார 'செங்கோல்' வெளிவரவில்லை. அடுத்த இதழ் வழக்கம்போல் ம. பொ. சி அவர் களின் சிலப்பதிகாரக் கட்டுரைத் தொடருடன் வெளிவரும்.

போலீஸ்காரன் மகன்

திரு பி. எஸ். ராமையா உடல் நலமின்றியிருப்பதால், மேற்படி தொடர்கதை இவ்விதழில் இடம் பெறவில்லை. இனி தொடர்ந்து இடம் பெறும். —ஆசிரியர்.

முன் சொன்ன கேடுகளைப் போக்கி,பண்டையத்தமிழகத்தின் பெருமையை உயர்த்த அன்புத் தலைவர் ம.பொ.சி. தமிழரசு இயக் கத்தைத் தோற்றுவித்தார். பத் தாண்டுகளாக அவரோடு நாமும் சேவை செய்து வருவதிலே பெருமை அடைகிருேம். அந்த மாசற்ற சேவைகளை தமிழி னத்தின் துரோகிகளைத் தவிர, மற்ற எல்லோரும் மனமார வாழ்த்தியும் மதித்தும் வரு கிருர்கள். இன்னும் நம்முடைய சேவை இந்நாட்டிற்கு மிக மிகத் தேவை என்ற சூழ்நிலை உரு வாகி விட்டது. அதற்கு ஆவன செய்ய காஞ்சீபுரத்தில் நமது மாநிலத் தமிழரசுக்கழக பொதுக் குழு கூடுகிறது. அங்கே அங்கத்தி னர்களும் பிரதிநிதிகளும் நம்மை ஆதரிக்கும் அளவற்ற ஆதரவாளர் களும் கூடப் போகிருர்கள். அதற்கு நீயும் நம் மீது அன்பு கொண்டவர்களை அழைத்துக் கொண்டு தவருமல் வரவும். அங்கு வருவது, பேசாமல் உட்கார்ந்து கொண்டு இருப்பதற்காக அல்ல; இனி எப்படி நாம் தீவிரமாகச் செயல்ப் படவேண்டும் என்று உனக்குத் தெரிந்த யோசனை களைத் தைரியத்தோடு சுருக்க மாக அங்கே எடுத்துச் சொல்ல வேண்டும்.

இதோடு நின்று விடாமல் இனித் தான் நீ நிறைய வாசகசாலைகள் அமைக்க முயற்சி செய்ய வேண் டும். மற்றவர்களைப் படிக்கத் தூண்டும் வகையில் முன்னே நீயும் அக்கறையோடு அவசிய மான நூல்களைப் படித்து அவை யிலே தைரியமாகப் பேசப் பழக வேண்டும். உன் போன்ற இளை ஞர்களின் வளர்ச்சியை எதிர் காலத் தமிழகம் ஆவலோடு வர வேற்கக் காத்திருக்கிறதென்பதை மறந்து விடாதே.

உன் அன்புள்ள தமையன்.

உங்களுடன் ஒரு கணம்..!

புத்தம் புதிய விளம்பரம் உங்கள் கண்களைத் தன்வயப்படுத்திக் கொண்டிருக்கும் நிலையிலே நீங்கள் இந்தச் சில வரிகளை இப்போது படிக்கத் தொடங்கியிருக்கிறீர்கள். 'இலக்கியச் சுவை'– படிக்கவும் கேட்கவும் சுவை பரப்பும் அழகுச் சொற்றொடர் இது. '' இலக்கியச் சுவை 'யில் இலக்கியத்தைப் படித்து அனுபவிப்பதற்கான முறைகள் பற்றி–இன்றைய இளைஞரும் மாணவ-மாணவியரும் பொதுவாக எழுப்பும் கேள்விகளுக்கு விடைகளை உள்ளடக்கி–சிறு சிறு கட்டுரைகளாக எழுத நினைக்கிறேன். எளிமையான பொருளமைப்புடன் இந்த இலக்கியத்தொடர் அமையும்.''-தமிழ்ப் பேராசிரியர் திரு ம. ரா. போ. குருசாமி அவர்கள் எங்களுக்குத் தபாலில் சேர்த்த கடிதத்தின் ஒரு பகுப்பு இது. தீந்தமிழ் இலக்கிய விருந்தை அனுபவிக்க முப்பது நாட்கள் மட்டும் ஆவலுடன் காத்திருக்கும்படி தமிழார்வம் கனிந்த இதயங்களுக்குச் செய்தி தருகிறோம்.

'வாடா விளக்கு' தொடர்கதை ஏற்ற பணியை ஏற்றம் தரும் வகையில் செய்து வருகின்றது. பூவை, குகப்ரியை, வசுமதி ராமசாமி–இம்மூவரும் சந்தித்தார்கள்; சிந்தித்தார்கள். ஏழு பக்கங்களிலும் இலக்கிய மணம் கமழ்கிறது.

சிறுகதைகள், கட்டுரை, கவிதை முதலியவற்றின் கீழ் பெரும்பாலும் அறிமுகமான பெயர்களே காணப்படுகின்றன; நாங்கள் வைத்த பரீட்சையில் மேற்படி எழுத்துக்கள் தேர்வு பெற்றன; எனவே, 'அறிமுகம்' என்ற சொல் உங்களுக்கும் நிறைவு தருமென்பது எங்கள் துணிபு.

பிரபல கதாசிரியர் திரு வல்லிக்கண்ணன் குழந்தை மனத்தைத் தத்துவக் கண் கொண்டு பார்த்துப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார். திரு அ. வேதாசலத்திற்கு ஆதரவாளர்கள் சேர்ந்து வருகிறார்கள். தாயுள்ளத்தைப் புதுக் கோணத்தில் நிறுத்திப் பேசவைக்கிறது அவரது சிந்தனைப் பேனா. கவிஞர் திரு மு. சண்முகம் புனைந்த பாடல் அழகுச் சொற்களின் தொகுப்பு; நல்ல கற்பனைக்கு ஆதாரம். 'இரண்டாவது அம்மா'வை அறிமுகம் செய்கிறார் திரு 'ஸ்ரீவத்ஸன்.'

''புராணம் திரும்புகிறது,'' என்று நாங்கள் சொன்னோம். ஓவிய மன்னர் திரு கே. மாதவன் அவர்கள் 'மெய்தான்,' என்று நிரூபித்திருக்கின்றார். ஆயர்குலத்துதித்த மாயனின் அந்த அஞ்சன வண்ணத்தினைப் பார்த்துக்கொண்டிருந்தாலே போதும், நம் வயிறு பசியை மறந்துவிடும்!...ஆனால், அதோ, அபலை ராதை சிந்தை திறந்து பேசுவதை நாம் மறக்க முடியுமா? 'நேசம் மறக்கவில்லை நெஞ்சம்–எனில் நினைவு முகம் மறக்கலாமோ?' என்று கேட்கிறாள். உடனே வேய்ங்குழல் நாதம் எழுப்ப, விந்தைச் சிரிப்புடன் ஓடி வந்து 'மாயம்' செய்கிறான் அந்தப் பேசருந் தெய்வம். ஆஹா, ராதை பாக்கியவதி!

வணக்கம்.

ஆசிரியர். ★

ஜூன் 29உ முதல்
சென்னை:
மற்றும்
தென்னாடெங்கும்
பத்மினி பிக்சர்ஸாரின்
தங்கமலை
ரகசியம்
வேடிக்கை, வினோதம், வியப்பு
அத்தனையும் நிறைந்த
நற்போதனைச் சித்திரம்
வசனம்
ப.நீலகண்டன்
தயாரிப்பு & டைரக்ஷன்
B.R.பந்துலு
கதை
சின்ன அண்ணாமலை
லட்சுமணன்
ஸ்டூடியோ
ரேவதி

வாய் பேசத் தெரியாத குருவி. வாய் பேசத் தெரிந்த சிறுவன். இருவரையும் பிணைத்துச் செல்லும் ஒரு தந்தை உள்ளம். கூண்டுக் குருவி நாடிக் குழலைப் பின்னணியாகக் கொண்டது!

கூண்டுக் குருவி

'கோபிஸகன்'

"அப்பா, அப்பா!" என்று கூவினான் குமார்.

நான் திரும்பிப் பார்த்தேன். அவன் அவசரமும் பதட்டமும் எனக்குப் பிடிபடவில்லை. "என்னடா?" என்றேன்.

"அங்கே பாரப்பா!"

அவனது பிஞ்சுக் கைகள் குறியிடும் திக்கை நோக்கினேன்.

ஒரு குருவி உடல் தீய்ந்து அடிபட்டுக் கீழே விழுந்து துடித்துக் கொண்டிருந்தது. மேலே கம்பி மாலையிட்டிருந்த தந்தி மரம் எனக்கு உண்மையைச் சிறிதளவு உணர்த்திற்று. அருகில் ஓடினேன். அது துடிக்கும் பரிதாபம் என் நெஞ்சை அள்ளியது.

"அப்பா, அதுக்கு என்னப்பா?"

அவனுக்கு என்ன பதில் சொல்வது என்று எனக்குப் பிடிபடவில்லை. அதை இரண்டு கைகளாலும் அள்ளி எடுத்தேன். வெளியே தவிக்கவிட என் மனம் ஒப்பவில்லை. அதன் வாழ்விலே வலிவற்ற நிலையிலேயே ஒவ்வொரு கணமும் பூனையும் நாயும், கழுகும் மனிதனுமாக எண்ணற்ற எதிரிகள் அதன் அழகையும் ஆவியையும் சூறையிடும் வேதனைக்கெல்லாம் ஈடு கொடுத்தல்லவா அது இவ்வளவு நாட்கள் வளர்ந்து விட்டது! ஆனால் இனி?

அது 'கிரீச், கிரீச்' என்று கத்தியது; கதறித் துடித்தது.

"அதை விட்டுடப்பா," என்று கத்தினான் குமார்.

"பேசாமல் இரு. அதை நாம் வெளியே விட்டுட்டா யாராவது மிதித்தோ அல்லது பூனையோ, நாயோ இழுத்திட்டு போயிடும்."

அவன் பேசாமல் இருந்து விட்டான். அதன் வலியையும், பலவீனத்தையும் அவன் உணர்ந்திருக்க வேண்டும்.

அதை ஒரு சிறிய தூக்குக் கூடையினுள் வைத்தேன். அக்கூடையை ஒரு கைப்பையினுள்ளே வைத்தேன். நான் கிளம்பி விட்டேன்.

"அப்பா, எங்கேப்பா போறே?" என்று அழத் துவங்கினான் குமார்.

"பேசாமல் இரு. இப்போ நேரா ஆஸ்பத்திரிக்குப் போய் அதுக்கு ஒரு கட்டுப் போட்டுட்டு வரேன். அது வரையிலும் சமத்தா இருக்கணும்."

"நானும் வரேம்பா!"

"கப்சிப்! அப்புறம் அது செத்துப் போயிடும்!"

அவன் பதில் பேசவில்லை.

* * *

"நீங்கள் வளர்க்கும் குருவியா?" என்று அன்பாக விசாரித்தார் அந்த டாக்டர்.

"இது தேறும் வரையில் மட்டும் என்னுடனேயே வைத்துக் கொள்ளலாம் என்று நினைத்திருக்கிறேன்," என்றேன் நான்.

"நான் கேள்விப்பட்டதே இல்லை' ஸார். உலகத்திலே இந்த ஜீவன்கள் தங்கள் வாழ்க்கைக்கு மனிதனை நம்புவதில்லை. அவற்றின் போக்கே தனி!" என்று அவர் சிரித்துக் கொண்டே கூறினார்.

என் ஜீவகாருண்யம் என் மனத்திலேயே புல்லரிப்பைத் தந்தது.

அவர் கை பட்ட பொழுது அது கதறிய காட்சியை என்னாலேயே பொறுக்க முடியவில்லை. டாக்டர் என்றவுடன் குமாரின் முகம் போன போக்கை நான் சிந்தையில் மறுபடி கொணர்ந்தேன். எனக்கு உடல் சிலிர்த்தது.

சிறிது நேரத்திற்கெல்லாம் பெட்டிக் குருவியாக அது அடங்கி விட்டது. பிளாஸ்திரி கொண்ட அதன் புது உடலையும் தொங்கிய தலையையும் நோக்க எனக்கு என்னவோ போலிருந்தது.

குருவிக் கூண்டொன்று கிடைத்தது. அதிலே குதித்து விளையாடியது. உடல் உரம் பெறப் பெற அதன் உதிரமும் சிலிர்த்திருக்க வேண்டும். 'கிரீச்' என்ற அதன் சத்தம் கேட்டு நான் அதை வளைய வளைய வந்தேன். இரவு பகல் அதன் மீதே சிந்தனை.



"அதற்குக் குணமாயிடுத்தாப்பா?" என்றான் குமார்.

"இப்பத்தான் கொஞ்சம் கொஞ்சமாக குணமாயிட்டிருக்குது." என்றேன் நான்.

"முழுக்க ஆனப்புறம் என்னப்பா பண்ணுவே?"

"அதுக்கு இப்போ என்னடா அவசரம்?"

"அதை விட்டுவிடலாம், அப்பா....!"

"நீ பேசாமல் போகமாட்டே?" என்று கோபித்தேன்.

கூண்டுக்குள்ளேயே அக்குருவி சிறகடித்தது. வைத்த உணவை எடுக்க மறுத்தது. நன்றி கெட்டு வெளியே போகத் துடித்தது. அதை நான் கெஞ்சினேன்; கொஞ்சினேன். அதைத் 'தாஜா' செய்து உணவு கொள்ளச் செய்வதற்குள் எனக்குப் போதும் போதுமென்றாகி விட்டது. ஆனால் அந்த அனுபவம் எனக்குக் கொள்ளை மகிழ்ச்சியைக் கொடுத்தது.

"போதுமே இந்த ரோதனை!" என்றாள் மைதிலி.

"ஏன், அது உன்னை என்ன செய்தது?"

"என்னை என்ன செய்ய வேண்டும்? அது குணமான பிறகாவது விட்டு விடாமல் வைத்துக் கொண்டிருந்தால் அந்தப் பாவத்திற்கு யார் ஆளாவது?"

"பாவமாவது, புண்ணியமாவது! கொஞ்சம் கூடப் புத்தியில்லாதபேச்சு" என்று அவள் வாயை அடக்கி விட்டேன்.

"இல்லேப்பா, உள்ளேயேஇருந்தா அதுக்கு வலிக்காதப்பா?" என்றான் குமார்.

"யாருடா வலிக்கும்னு சொன்னாங்க?"

"அதான் சத்தம் போடறதே, தெரியலையா?"

"நீயும்தான் அடிக்கடி சத்தம் போடறே, அப்போதெல்லாம் உனக்கு வலிக்கறதுன்னு அர்த்தமா?"

"போப்பா...!"

அவன் முணுமுணுத்தபடி மறைந்து விட்டான். நாளாக நாளாக குருவியும் பணிந்துவிட்டது. என் வெற்றியில் எனக்கு இறுமாப்பே எழுந்தது.

ஒன்று, இரண்டு, மூன்று என்று மாதங்கள் கழிந்தன. ஒரு நாள்

பகல் இரண்டு மணி. ஆபீஸில் அரை நாள் வேலை முடிந்திருந்த சமயம். திடீரென ஞாபகம் வந்தது. காலை உணவு கொடுத்த பிறகு கூண்டுக் கதவைச் சரியாக மூடவில்லை. என் மனம் நிலை கொள்ள மறுத்தது. என் நினைவெல்லாம் அதைச் சுற்றியே பறந்தது.

தலைவலி என்று அரை நாள் லீவு எடுத்துக் கொண்டு வீட்டைப் பார்க்க ஓடினேன்.

அங்கே குமார் அழுதவாறே வாயிலில் நின்றுகொண்டு என்னை வரவேற்றான். அவனது ஆச்சரியமான போக்கு எனக்குத் திகைப்பைத் தந்தது.

''என்னடா?'' என்றேன் நான், சற்று அதட்டியவாறு.

''குருவி செத்துப் போச்சு அப்பா!''

''என்ன?''

''ஆமாம்ப்பா, குருவி திடீர்னு வெளியே வந்துச்சு. அதைச் சுத்திப் பத்துப் பன்னிரண்டு குருவி வந்து அதைக் கொத்திப் போட்டுடுச்சு. ஏம்ப்பா, அது என்ன பண்ணிச்சுது, அப்பா?''

எனக்கு மூச்சு நின்று விட்டது போல் ஆகிவிட்டது.

* * *

மனிதர் கைப்பட்ட பிறகு அக்குருவியை மற்றவை தங்களுடே சேர்ப்பதில்லை என்று யார் யாரோ சொன்னார்கள். ஒருவேளை அதுவாகவே கதறியபொழுது, நான் வெளியே விட்டிருந்தால் பிழைத்திருக்குமோ, என்னவோ....?

வெறிச்சோடிக் கிடந்த அந்தக் கூண்டையும், அதனருகே உயிரற்றுக் கிடந்த அதன் உடலையும் பார்த்துப் பொருமினேன்.

என் குற்றமே என் நெஞ்சைப் பிளந்தது. நான் அழுதேன்...! ★

வாடா விளக்கு

மாயாவி

அத்தியாயம் – 17

பாவூர்ப் பரமசிவன்

தென்காசியிலிருந்து சுமார் ஆறு மைல் கிழக்கு நோக்கி ரெயிலிலோ, காரிலோ சென்றால், பனங்காட்டின் நடுவே ஒரு பசுஞ் சோலையைக் காணலாம். அந்தப் பசுஞ்சோலையின் பெயர் பாவூர்ச் சத்திரம். பாவூர்ச் சத்திரம் ஒரு ரெயில் 'கெடி' என்பதைத் தவிர அந்த ஊருக்கு வேறு மவுசு ஒன்றும் கிடையாது.

மங்கம்மாள் மதுரையை ஆண்ட காலத்தில் திருநெல்வேலிச் சீமையும் அவள் குடையின் கீழ் இருந்தது. மக்களின் நலனில் கண்ணும் கருத்தும் கொண்ட அவள் தன் நாடெங்கும் போக்கு – வரவுக்கான சாலைகளை அமைத்தாள்; சத்திரங்களையும் சாவடிகளையும் கட்டினாள். அந்தக் காலத்தில் ரெயில் ஏது? 'தபால் வண்டி' எனப்படும் மாட்டு வண்டி 'ஸர்வீஸ்'தான் அப்பொழுது உண்டு. பெரிய கூண்டு வண்டி. ஆடி அசைந்து கொண்டு ஆமை வேகத்தில் போகும். அதில் பிரயாணிகள் நெருக்கி யடித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பார்கள். ஓர் ஊரிலிருந்து இன்னோர் ஊருக்குப் போகவேண்டுமென்றால் உயிரைக்

கையில் பிடித்துக் கொண்டுதான் போக வேண்டும். வழி நெடுகத் திருடர் பயம். இருந்தாலும் நெடுந் தொலை போக வேண்டியவர்கள் அக்காலத்தில் இத் தபால் வண்டி களைத்தான் தஞ்சமடைய வேண்டி யிருந்தது. இவ்வண்டிகள் நாள் ஒன்றுக்குப் பதினைந்து இருபது மைல்கள்தான் செல்லும். ஒவ் வொரு ஆறு 'கல்'லுக்கும் (மைலுக்கும்) மாடு மாற்றுவார் கள். அநேகமாக அங்கே ஒரு தங் கல் இருக்கும்.

இந்தக் காலத்தில் ரெயில் பாதை அமைக்கிறார்களே, இவர்களுக்குச் சற்றும் சளைத்தவர்கள் அல்ல, அக்காலத்தில் ரஸ்தா அமைத்த வர்கள். அவர்கள் மலைக்காகவும் மடுவுக்காகவும் மாத்திரம் ரஸ் தாவை அங்கும் இங்கும் கொஞ்சம் வளைத்தோ, சுற்றியோ அமைத் தார்களே தவிர, மனிதர்களுக்காக அல்ல. "திருநெல்வேலியிலிருந்து தென்காசிக்குப் பாதை போட வேண்டுமா? சரி, கிழக்கு—மேற் காக ஒரு நூலைப் பிடித்துப் பாதை யைப் போடு!" என்றவாறுதான் அவர்கள் ரஸ்தா அமைத்திருக்க வேண்டும். ஆகவே, அந்த நூல் வழியில் எந்த எந்த ஊர்கள் இயற்கையாக இருந்தனவோ அவைதாம் பாக்கியம் செய்தவை. மற்றப்படி ரஸ்தாவின் இரு பக்கங் களிலும் சற்றுத் தள்ளியிருந்த ஊர்க்காரர்கள் தாங்களாகவே தங்கள் ஊருக்கும் இந்தப் பிரதான ரஸ்தாவுக்கும் தனியாக ஓர் ஒற்றையடிப் பாதையோ, வண்டிப் பாதையோ அமைத்துக் கொண் டார்கள்.

இம்மாதிரி அருகிலுள்ள ஊர்ப் பாதை பிரதான ரஸ்தாவைச் சந் திக்கும் இடங்களில், தபால் வண்டி நின்று, பிரயாணிகளை ஏற்றியும் இறக்கியும் செல்லும். பெரும்பாலும் இம்மாதிரி ஊரை ஒட்டிய சந்திப்புக்களில் இவ்வண்டி களை இழுக்கும் எருதுகளை மாற் றிக் கொள்ளுவதும் உண்டு. இதற் காக அங்கே ஒரு மாட்டுக் கொட் டில் இருக்கும். வண்டிக்காக வந்து காத்திருக்கும் பிரயாணிகள் தங்கு வதற்கு ஒரு சாவடி இருக்கும். இவற்றுக்குத்தான் அக்காலத்தில் 'கெடி' என்று பெயரிட்டார்கள். மக்களின் போக்கு—வரவு வசதிக் காகச் சாலைகளையும், சாவடிகளை யும் அமைத்துக் கொடுத்த ராணி மங்கம்மாள், இம்மாதிரிக் கெடி களுள் முக்கியமானவற்றில் ஒவ் வொரு சத்திரத்தையும் கட்டிவைத் தாள். அந்தச் சத்திரங்களில் சில, அருகிலிருக்கும் ஊரின் பெயரை முன்னால் தாங்கியிருக்கும். அப் படித்தான் பாவூர்ச் சத்திரம் என்ற பெயர் ஏற்பட்டது. ஆம், அதற்கு இரண்டு மைல் வடக்கே, சத்திரத் துக்குப் பெயர் தந்த பாவூர் இருக் கிறது. ஒன்றல்ல; இரண்டு பாவூர் கள் உள்ளன. மேலப் பாவூர்தான் நம் கதையுடன் சம்பந்தப்பட்டது.

மேலப் பாவூர் அக்காலத்தில், ஏன், இக்காலத்தில்கூட சின்னஞ் சிறு ஊர்தான். நம் கதையின் நிகழ்காலத்தில் அவ்வூரின் மக்கள் தொகை இரண்டாயிரத்துக்கும் குறைவாகத்தான் இருந்தது. ஊர் வாசிகளில் பெரும்பான்மையோர், வயல்களில் உழைக்கும் குடியான வர்கள். மற்றவர்கள் சைவ வேளா ளர்கள். இதர ஜாதியினரும் ஒரு சிலர் இருந்தனர்.

மேலப் பாவூரில் மூக்கையாப் பிள்ளை என்றால் ரொம்பப் பிர சித்தம். அக்காலத்தில் அவ்வூரி லிருந்த ஒரே 'காரை வீடு' அவரு டையதுதான். இதன் காரணமாகக் 'குடிபடைகள்' அவரைக் 'காரை வீட்டுக்கார ஐயா' என்றுதான் குறிப்பிடுவார்கள். அப்பொழு தெல்லாம் ஒருவர் காரை வீடு கட் டிக் கொண்டு வசிக்க வேண்டு மென்றால் பெரிய பணக்கார ராகவே இருக்கவேண்டும். மூக்கை யாப் பிள்ளை பாவூரிலேயே பெரிய பணக்காரர்தான். ஊர்ப் புறவில் இருந்த நிலங்களில் பெரும் அளவு அவருக்கே சொந்தமானவை. கையிலும் கணிசமான 'ரொக்கம்' உண்டு என அவ்வூரில் யாரைக் கேட்டாலும் சொல்லுவார்கள். ஆனால் பிள்ளைவாளைப் பார்த்தால், பணக்காரர் என்று யாரும்

சொல்ல மாட்டார்கள். ஆசாமி பெரிய கருமி. வயிற்றுக்குக்கூடச் சரியாகச் சாப்பிட மாட்டார். நல்ல துணி மணிகளை அவர் உடுத்து அந்த ஊரில் யாரும் பார்த்தது கிடையாது. மனிதருக்கு எப்பொழுதும் பணம், பணம், பணந்தான் குறி. இப்படியெல்லாம் பணம் சேர்க்கும்படி அவருக்குக் குழந்தை குட்டிகளாவது நிறைய உண்டா? அதுவும் இல்லை. 'ஒண்ணே ஒண்ணு; கண்ணே கண்ணு' என்றவாறு மருந்துக்கு ஒரு மகன். பரமசிவன் என்று பெயர். பரமசிவன் செக்கச் செவேலென்று பார்வைக்கு மன்மதன்போலத்தான் இருப்பான். பாவூரில் அன்று ஆங்கில அறிவு படைத்த ஒரே ஆள் அவன்தான். தென்காசி போர்டு ஹைஸ்கூலில் மூன்றாவது படிவம் வரையில் அவன் படித்திருந்தான். அதற்கு மேல், அந்த ஸ்கூலில் வருஷத்துக்கு எட்டு மாதங்கள், மாதத்துக்கு ஐந்தேகால் ரூபாய் வீதம் சம்பளம் கட்ட வேண்டுமென்று அறிந்தபோது, மூக்கையாப் பிள்ளை, "போதும்லே நீ இங்கிலீசுப் படிச்சதெல்லாம். மூதி, என்ன சம்ணையா கட்டி ஆளப் போகுது? இருக்கதெல்லாம் இந்த காலேரைக்காக் கோட்டை வெதப்பாடுதானே: (பிள்ளைக்கு உண்மையில் 'புறவில் பாதி' இருந்த போதிலும், அவர் பேசும் போது தமக்கு நிலமே இல்லாதது போல்தான் பேசுவார்) இதுக்கு மாசம் அஞ்சேகால் ரூவாயில்லா சம்பளமாம். அந்த அஞ்சேகால் ரூவாயிருந்தா ஒனக்கு ஒரு மாசத்துச் சோத்துக்கு ஆச்சேலே!" என்று கூறி மேலே படிக்க விடாமல் நிறுத்தி விட்டார். இருந்தாலும் பரமசிவனுக்குப் போதுமான ஆங்கில அறிவும், தமிழ் அறிவும் இருந்தன. ஆனால் பையனுக்கு 'புத்தி ஒரு மாத்து கட்டை!'. அப்படியென்றால் அவன் அரைப் பைத்தியம் என்று சொல்லி விடுவதற்கும் இல்லை. அவனிடம் ஒரு குறை இருந்தது. தான் சகலகலா வல்லவன் என்ற நினைப்பு அவனுக்கு. தனக்குத் தெரியாததையும் தெரிந்ததாகச் சாதிப்பான் அவன். சாதிப்பதோடு நின்றுவிட்டால் பரவாயில்லையே! அதை நிரூபிக்க வேறு கிளம்பி விடுவான். மொத்தத்தில் அவனுக்கு 'வீராப்பு' ஏற்படச் செய்துவிட்டால், என்ன செய்கிறோம் என்பதே தெரியாமல் நடந்து கொண்டு விடுவான். எத்தனையோ தடவை, இப்படித் தெரியாத காரியங்களைத் தெரிந்ததாக அடித்துப் பேசி, நிரூபிக்கப் புகுந்து பல் உடைபட்டிருக்கிறான். இருந்தாலும் அவனுக்குப் புத்தி வரவில்லை. வயது இருபதுக்கு மேல் ஆகியும் இந்த வீண் டம்பமும், இதனால் ஏற்படும் அவதிகளும், அவனிடம் சற்றுக்கூடக் குறையவேயில்லை.

> அறிவாளிகள் எப்போதும் வலுவான சக்திகள் படைத்தவராய், சிந்தனை ஒருமிப்புடனும், தளராத உறுதியுடனும், சீரான போக்குடனும், நிர்வாணத்தை அடைகின்றனர். அந்த நிர்வாணமே அதி உன்னதமான ஆனந்தம்.
>
> —புத்தர்

பரமசிவனின் இந்த விநோதப் போக்கைத் தெளிவாக்க ஓரிரண்டு உதாரணங்களை மாத்திரம் பார்த்துவிட்டு மேலே செல்வோம். ஒரு சமயம் மேலப் பாவூருக்குக் கழைக்கூத்தாடி ஒருவன் வந்திருந்தான். அவன் செய்த பல வேலைகளில் ஒன்று, பத்தடி உயரத்தில் இரு கம்பங்களை நாட்டி, அவற்றின் இடையே ஒரு கயிற்றைக் கட்டி, அதில் நடந்தும், ஓடியும் காட்டியது. பாவூருக்கு இது அதிசயமான வேலைதான். எல்லோரும், "பிரமாதம்! பிரமாதம்!" என்று ஆர்ப்பரிக்க, நம்முடைய பரமசிவன் மாத்திரம், "என்னடே பிரமாதம்? நான் நடந்து காட்டட்டா இவனெவிட ஜோரா?" என்று மார் தட்டினான். இப்படி டம்பம் அடிக்கும்போது, அவனைக் கிளப்பிவிட்டு வேடிக்கை பார்க்கும் கோஷ்டி ஒன்று அவ்வூரில்

தோன்றியிருந்தது. அவர்களில் சிலர் அன்று, "ஆளைப் பாரு. நடந்துடுவாரமில்லே...எங்கே நடந்து காட்டு பாக்கலாம். பத்து ரூவா பந்தயம்" என அவனுக்கு வேகத்தைக் கிளப்பி விட்டார்கள். அவ்வளவுதான்; பையன் ஆலோசிக்கவே இல்லை. வேட்டியைத் தார் கட்டிக்கொண்டு, குரங்கு போல் கம்பத்தில் ஏறி, கயிற்றிலும் நடக்க ஆரம்பித்து விட்டான். ஆனால் முதல் அடியிலேயே தள்ளாடி விழுந்து 'முட்டாஞ்சில்' உடைந்துங்கூட அவன் என்ன சொன்னான் தெரியுமா? "அந்தக் கூத்தாடிப் பய நடந்து நடந்து கயிறு தொஞ்சு போச்சு; அதுனாலேதான் 'லாத்திடிச்சு!'" என்றான்.

> அதிக நாள் நெருங்கிப் பழகிவிட்டதற்காக வஞ்சகனை நம்பிவிடாதே! நீண்ட காலம் கூடவே வளர்ந்திருந்தாலும் பாம்பு எப்போதாவது கடிக்கத்தான் செய்யும்!
>
> —பஞ்சதந்திரம்

இன்னொரு சமயம். பரமசிவனும் சில நண்பர்களும் பாவூர் சத்திரத்துக்கு நடந்து சென்றார்கள். பாவூர்ச் சத்திரம் ரெயில் 'கெடி'யான பிறகு அங்கே சில ஹோட்டல்கள் முளைத்திருந்தன. மாலை வேளை. ரெயிலிலும், பஸ்ஸிலும் நிறையக் கூட்டம் வரும் சமயம். அப்பொழுதுதான் அந்த ஹோட்டல்களில் நல்ல வியாபாரம் நடக்கும். அங்கேயிருந்த ஹோட்டல்களில் சவுரியப்ப பிள்ளை என்பவரின் காப்பிக்கடைக்குத்தான் அதிக மவுசு. அவருடைய கடை சுக்குக் காபி, சுந்தரபாண்டியபுரம், சுரண்டை வரை (பாவூர்ச் சத்திரத்திலிருந்து சில மைல்கள் வடக்கேயும், வடகிழக்கேயும் உள்ள இரு சிற்றூர்கள்) மணக்கும் என்பார்கள். அந்தச் சுக்குக் காப்பியில் 'பத்து லோட்டா குடிச்சுப் போடுதாக'ப் பந்தயம் பேசி, குடித்தும் காட்டிவிட்டான் பரமசிவன். ஆனால், பிறகு, காலராக் கண்டவன் மாதிரி வாந்தியும் பேதியும் எடுத்துப் பத்து நாள் அவதிப்பட்டான். ஆயினும் உடம்பு தேறி வந்ததும், "அந்தச் சவுரியப்ப பிள்ளை 'லொத்தியைக் களட்டணும்'டே! பாவி மனுசன் மூணு நாளைக்கு முன்னே போட்ட பழைய சுக்குத் தண்ணியைக் கொடுத்தில்லா என் வயித்தெக் கெடுத்துட்டான்!" என்று, 'கிழே விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லையே!' என்ற கணக்கில் பேசினான் என்றால் பையனின் போக்கு எப்படிப்பட்டது என்பதை நீங்களே ஊகித்துக் கொள்ளலாம்.

இந்த ஒரு கெட்ட குணத்தைத் தவிர்த்து, பையன் மணியானவன்தான். அவனுக்குக் கல்யாணப் பிராயமாகி விட்டது. 'சல்தியா ஒரு கட்டுப் போட்டுடணு'மென்று மூக்கையாப் பிள்ளை தீவிரமாக முனைந்திருந்தார். இதற்காக அவரும் அவர் மனைவி ஆவுடையம்மையும் தென்காசிக்கு ஒரு பெண்ணைப் பார்க்க வந்து போனதைக்கூட, முன் அத்தியாயம் ஒன்றில் மாசித் தெரு மகாலிங்கப் பட்டருக்கும், சங்கரலிங்கம் பிள்ளை என்பவருக்கும் இடையே நடந்த ஒரு சம்பாஷணையின் மூலம் நாம் அறிவோம்.

* * *

நெல்லையப்பனுக்கும் காந்திமதிக்கும் கல்யாணம் நடக்கப் போகிறதில்லை; தனக்குக் காக்காய் வலிப்பு இருப்பதால் அவன் இக்கல்யாணத்துக்குச் சம்மதிக்கவில்லை; இப்பொழுது அப்பெண்ணுக்கு வேறு வரன் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற விவரங்கள் தென்காசியின் 'பிராட்காஸ்டிங் ஸ்டேஷ'னான சவுந்தரத்தாச்சி மூலம் ஊர் முழுவதும் பரவிவிட்டது. அன்று ஆனைப் பாலத்துப் படித்துறையில் அவன் வலிப்பு வந்தவன் போல் விழுந்தபோது, அங்கு கூடியிருந்த பெண்டிரில், நமக்கு ஏற்கனவே அறிமுகமா

யிருக்கும் சங்கரலிங்கம் பிள்ளையின் மனைவி எட்டயபுரம் எசக்கி அம்மாளும் ஒருத்தி. 'என்னமோ பாவம்! அவ அளகம்மை வவுத்திலே பொறந்த தலைப் புள்ளைக்கு இப்பிடியா ஒரு கரும நோயி வந்து சேரணும்?'' என்று எல்லோரையும் போல் அவளும் அச்சமயம் அங்கலாய்த்துக் கொண்டே வீட்டுக்குச் சென்றாள். வீட்டில் கணவனிடம் இந்தச் 'சங்கதி'யைக் கூறி, ''இதுனாலேதான் அந்தக் கோமதி யக்கா மகளுக்கு வேறே மாப்பிள்ளை பாக்கச் சொல்லிட்டாளாம்' என்று அவள் முடித்தபோது சங்கரலிங்கம் பிள்ளைக்குச் சட்டென்று, 'அப்பிடன்னா அந்தப் புள்ளெ காந்தியெ நம்ம பாவூர் மாமா மகனுக்குக் கேக்கச் சொல்லலாமே?' என்று தோன்றிற்று. அவர் உடனே பாவூருக்கு ஒரு 'காயிதம்' எழுதிப்



போட்டார். மூக்கையாப் பிள்ளையும், ஆவுடையம்மையும் மற்றொரு முறை தென் காசிக்கு வந்தனர். நெல்லையப்பனைச் சந்தித்தனர். நெல்லையப்பனுக்குப் பரமசிவனைக் கொஞ்சம் தெரியும். அவன் ஸ்கூலில் படித்துக் கொண்டிருந்த போது பரமசிவன் அவனுக்கு இரண்டொரு வகுப்பு கீழே படித்துக் கொண்டிருந்தான். நெல்லையப்பன் அவனோடு பழகியதில்லை. இருந்தாலும், பையன் அழகன் என்பதைக் கவனித்திருந்தான். அவன் பணக்கார வீட்டுப் பிள்ளை என்பதும் நெல்லையப்பனுக்குத் தெரியும். ஆகவே, இவனை விட உயர்ந்த வரன் காந்திமதிக்கு எங்கே தேடினாலும் அகப்பட மாட்டான் என்று அவனுக்குத் தோன்றிற்று. அத்தை கோமதியாச்சியிடமும் அவன் அப்படியே சொன்னான். “சதிதான்லே; ஏங்கிட்டே ஏன் இதையெல்லாம் சொல்லுதே? ஒனக்குப் புடிச்சிருந்திச்சின்னு முடிச்சுப் போடு,” என்று அவள் கூறிவிட்டாள்.

இப்படியாகக் காந்திமதிக்கும் பரமசிவனுக்கும் கல்யாணம் குதிர்ந்து விட்டது. சித்திரை மாதம் எட்டாம் தேதி முகூர்த்தம் பார்த்து விட்டார்கள். வழக்கத்துக்கு மாறாக, பெண் வீடாகிய தென்காசியிலுள்ள தன் வீட்டிலேயே இக்கல்யாணம் நடக்க வேண்டும் என்று சொன்னான் நெல்லையப்பன். ஏனென்றால், என்னதான் காந்திமதியின் கல்யாணத்தை முடித்துவிட அவன் தீவிரமாக இருந்தாலும், மனசின் ஒரு மூலையில் அந்த ஜோஸ்யத்தைப் பற்றிய பீதி அவனுக்கு இருந்து கொண்டுதான் இருந்தது. ‘இசை கேடாக ஏதாவது நேரிடுவதாக இருந்தால், அது அயலூரில் ஏற்பட வேண்டாம்; நம் ஊரிலேயே ஏற்படட்டும்’ என்பதுதான் கல்யாணத்தைத் தென்காசியில் நடத்த வேண்டுமென்று அவன் வற்புறுத்தியதற்குக் காரணம்.

பாவூர்ப் பண்ணை மூக்கையாப் பிள்ளைதான் படு கஞ்சப் பேர்வழி

யூதக் கதை:

மணி என்ன?

ஓடிக் கொண்டிருக்கும் புகை வண்டியில் அவசரமாக ஓர் இளைஞன் தாவி கிழவன் ஒருவன் பக்கத்தில் அமர்ந்தான்.

“இப்பொழுது நேரம் எவ்வளவு?” என்று கேட்டான் இளைஞன்.

“ரெயில் கார்டிடம் கேட்டு அறிந்து கொள்,” என்றான் கிழவன்.

“கையில் கைக்கடிகாரம் கட்டிக் கொண்டு மணி சொல்லத் தயங்குகிறீர்களே? வெள்ளையர்கள் நிரம்பியிருக்கும் இவ்விடத்தில் ஒரு சக யூதனிடம் இவ்விதம் இங்கிதமில்லாமலா பேசுவது? அல்லது உமது கடிகாரம் ‘ஸ்ட்ரைக்’ செய்து விட்டதா?”

“நான் உன்னிடம் சரளமாகப் பேசினால், இதிலிருந்து நம்மிடையே சம்பாஷணை தொடங்கும். பின்னர் நான் எவ்விடம் வசிக்கிறேன் என்று நீ வினவுவாய். நான் உன்னை என் இல்லம் வரும்படி அழைப்பேன். அங்கு எனது அழகிய மகளைச் சந்தித்துக் காதலாகி திருமணத்துக்கு ஒப்பும்படி என்னிடம் இறைஞ்சுவாய். நான் உன்னிடம் எவ்வளவோ சகஜமாகவும் அன்பாகவும் பழகிவிட்டு, கடைசியில் திருமணத்துக்கு ஒப்புதல் கேட்கும் பொழுது ‘கேவலம், ஒரு சொந்தக் கைக்கடிகாரம் வைத்திருக்காதவனுக்கா என் மகளை முடித்துக் கொடுப்பேன்?’ என்று சொல்வதைக் காட்டிலும், இப்போதே மணி சொல்லாமலிருந்தால் இவை யாவற்றையும் தடுக்கலாம் என்றுதான் நான் மணியைச் சொல்லவில்லை,” என்றார் கிழவர்.

—நா. மு. குமாரசிங்கன்

ஆயிற்றே! 'அந்த மட்டும் கல்யாணச் செலவு மிச்சம்' என்று அவரும் இதற்கு இணங்கி விட்டார்.

கல்யாண ஏற்பாடுகள் கன வேகமாக நடந்து கொண்டிருந்தன.

அத்தியாயம் – 18

ஜோசியம் பலித்தது

கல்யாணம் பெரிய எடுப்புத் தான். நெல்லையப்பன் 'தலை யெடுத்த' பின்பு அவன் வீட்டில் நடக்கும் முதல் சுப நிகழ்ச்சி யல்லவா? ஆகவே ஏற்பாடுகள் ஆடம்பரமாகவே செய்யப்பட் டிருந்தன. வடக்கு மாசித் தெரு வில் பாதியை 'அடைத்து' அழ கிய விதானத்துடன் கூடிய பந்தல் போடப்பட்டிருந்தது. மதுரையில் இருந்த பெரிய நாகசுரக்காரர் ஒருவருக்கு அட்வான்ஸ் கொடுத் திருந்தார்கள். தென்காசி ஊர் அடங்கலாக எல்லாச் சைவப் பிள்ளைமார்களுக்கும் சாப்பாடு போட ஏற்பாடாகியிருந்தது. 'மூ' வன்னா 'சை'யன்னா ஜவுளிக் கடையை ஒரு திருப்புத் திருப்பி, மாப்பிள்ளை பெண் அடங்கலாக எல்லோருக்கும் உயர்தர ஜவுளி கள் வாங்கப்பட்டிருந்தன. தஞ்சா வூரிலிருந்து சந்தனமும், மதுரையி லிருந்து பச்சை ஏலக்காய், கிராம்பு, ஜாதிக்காய் முயலியவை களும், பந்தல் முகப்பு அலங்காரத் துக்கான குலைவாழை, கமுகுப் பனை, விசிறி வாழை போன்ற பல அலங்காரப் பொருள்களும் 'தர வழைக்க'ப் பட்டிருந்தன.

இவ்வளவு பிரமாதமான ஏற் பாடுகள் அனைத்தையும் திட்ட மிட்டவன் நெல்லையப்பனே; ஆயி னும் அவனுடைய நண்பர்களும், உறவினர்களும் வலிய வந்து ஆளுக்கு ஒரு வேலையாகப் பொறுப் பேற்றுக் கொண்டிருந் தனர்.

பாவூரிலிருந்து மாப்பிள்ளை வீட் டுக் கோஷ்டியாக ஒரு பட்டாளமே கிளம்பி வந்திருந்தது. அவர்களைத் தெப்பக்குளத் தெருவில் ஒரு பெரிய வீட்டில் இறக்கியிருந்தார் கள். அப்பொழுது கல்லூரி 'அடைத்'திருந்ததால், திருமலை தென்காசியில்தான் இருந்தான். அவன் இன்னும் விளையாட்டுப் போக்கான பிள்ளையாகவே இருந் தாலும், இக்கல்யாணக் காரியத் தில் ஒரு பெரிய பொறுப்பை ஏற் றுக் கொண்டிருந்தான். அதுதான் மாப்பிள்ளை வீட்டுக்காரர்களை உப சரிக்கும் பணி.

தன் அண்ணுச்சிக்கும் காந்திக் கும் கல்யாணம் நடக்கப் போகிற தில்லை என்பதை அறிந்ததும் திரு மலை முதலில் திடுக்கிட்டுத்தான் போனான். ஆனால், அன்று ஆனைப் பாலத்துப் படித்துறையில் அவ னுக்கு ஏற்பட்ட விபத்து கால் சறுக்கி விழுந்ததால் ஏற்பட்ட தல்ல; அது காக்காய் வலிப்பால் ஏற்பட்ட விபத்து; தன் அண்ணனை அந்தக் கொடிய–மாற்ற முடியாத நோய் பற்றியிருக்கிறது; அதனால் தான் அவன் காந்திமதியை மணக்க முடியாது என்று கூறி விட்டு அவளுக்கு வேறு மாப் பிள்ளை பார்த்துக் கல்யாணத்தை நடத்தப் போகிறான் என்ற விவரம் தெரிந்ததும், அவன் மனம் ஒரு பக்கம் அண்ணனின் அபாக்கிய நிலைக்கு வருந்தினாலும், மறுபக்கம் அவனுடைய நேர்மையையும், தியாக உணர்ச்சியையும் எண்ணி வியந்தது. இதன் காரணமாகத் தானோ என்னவோ, அவன் தன் விளையாட்டுத்தனத்தையெல்லாம் ஏடு கட்டி விட்டு, இக்கல்யாணக் காரியத்தில் அண்ணுச்சிக்கு வலது கையாக நின்று உதவியளித்தான்; மாப்பிள்ளை மற்றும் அவரைச் சார்ந்தவர்களை உபசரிக்கும் மகத் தான பொறுப்பை ஏற்றுக்கொண் டான்.

மாப்பிள்ளை பரமசிவனைத் திரு மலைக்கு ரொம்பப் பிடித்துவிட்டது. அவனுடைய சவடால்கள் சிறிது அதிகமாகப்பட்டாலும், இவ்வளவு அழகும் இளமையும் உடைய பணக்காரக் கணவன் கிடைத்தது

காந்திமதியின் அதிர்ஷ்டம் என்றே அவன் நினைத்தான். ஒன்றும் இல்லாவிட்டாலும், 'தன் அத்தை மக காந்தியின் புருசன்' என்ற தகுதியே அவனுக்குப் பரமசிவத்திடம் அபார மதிப்பு ஏற்படச் செய்தது. அவன் எப்பொழுதும் மாப்பிள்ளையுடனே இருந்தான். "அத்தான், அத்தான்" என்று அன்போடு அழைத்து ஆசார உபசாரங்கள் செய்தான். ஏன்? அவனைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு கூத்தாடினான் என்று சொன்னால்கூடத் தவறில்லை.

கல்யாணத்துக்கு முன்னாள் மாலையில் காப்பி சாப்பிட்ட பின்னர், திருமலை, "ஏன் அத்தான், சும்மா இப்படி ஒரு 'வாக்' போயிட்டு வரலாம், வாரீகளா?" என்று பரமசிவனைக் கேட்டான்.

"சரி, போவோமே. சீட்டுக் கட்டு இருந்தா எடுத்துக்கிடுங்க. காலாற ஸ்டேசன் வரைக்கும் போயி, அங்கனே எங்கேயாவது இருந்து ஒரு ஆட்டம் போட்டுட்டு வரலாம்," என்றான் பரமசிவன்.

சம்பந்தி வீட்டாரில் 'இளவட்ட'மான இன்னும் இரண்டு பையன்களையும் சேர்த்துக்கொண்டு அவர்கள் புறப்பட்டார்கள்.

ஸ்டேஷன் ரோடு வழியே நடந்துகொண்டிருந்தபோது, வழியில் சேதுவும் அவனுடைய சகாக்களில் சிலரும் எதிர்ப்பட்டனர். சேது, காந்திமதியிடம் தவறாக நடந்துகொள்ள முயன்று தன் அண்ணனால் அடித்து விரட்டப்பட்ட விவரம் திருமலைக்குத் தெரியாது. ஆகவே தன் அண்ணனின் நண்பன் என்ற முறையில் சேதுவைச் சந்தித்ததும், "என்ன ஐயா, கண்ணிலே காங்கலையே?" என்று சம்பிரதாயமாக விசாரித்தான்.

"அட திருமலையா? என்னப்பா சொகந்தானா? காலேஜிலே படிக்கிறியாமே? எப்போ வந்தே திருநெல்வேலியிலிருந்து?" என்றான் சேது — திருமலையின் பக்கத்தில், ஸில்க் ஷர்ட், இடையில் பட்டு

கிராப் தலை: "ஏம்பா முனியா, காளி கோயில் திருவிழாவுக்கு நீ உன்னோட மாமனார் வீட்டுக்குப் போகணுமில்லே?"

குடுமித் தலை: "ம், போகத்தான் வேணும். ஆனா, அந்தப் பட்டிக்காட்டிலே எப்படிப் பொளுதை ஓட்டறதுன்னுதான் புரியலை."

கிராப் தலை: "ஓஹோ! பட்டணம் பேசுதாக்கும், இப்போதான் ஞாபகம் வருது!"

வேட்டி, மேலே விசிறி மடிப்பு மயில் கண் அங்கவஸ்திரம், கையிலே கடிகாரம் — தங்கச் சங்கிலி, கழுத்தில் மெல்லியதாக ஒரு மைனர் செயின், காதில் வைரக் கடுக்கன்கள் சகிதம் தனக்குப் போட்டியாக மற்றொரு மைனர்போல் நின்றுகொண்டிருந்த பரமசிவனை நோட்டம் விட்டுக்கொண்டே.

"வந்து ஒரு வாரம் ஆச்சுது ஐயா; வீட்டிலே கல்யாணமில்லே? அதினாலே வெளியே வரவே 'டயம்' இல்லை!" என்றான் திருமலை.

"யாருக்குடே கல்யாணம்? ஒன் அண்ணாச்சிக்கா?"

"அண்ணாச்சிக்கு இல்லே ஐயா; எங்க காந்திக்கு. இவர்தான் மாப்பிள்ளை. மேலப்பாவூர் பண்ணையாரின்னு சொல்லுவாகளே, அவுக— மூக்கையாப் பிள்ளை மகன்."

காந்திமதிக்குக் கல்யாணம் என்ற செய்தி சேதுவின் மனத்தில்

எரிந்து கொண்டிருந்த தீக்கு எண்ணெய் ஊற்றிற்று. ஆம்; அன்று நெல்லையப்பனிடம் உதை தின்றதை அவன் மறந்துவிடவில்லை. அந்த அடி அவன் மனசில் அடங்கா வெறி ஒன்றைக் கிளப்பி விட்டிருந்தது. ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில், எப்படியாவது இவர்களைப் பழி வாங்க வேண்டும் என்று அவன் காத்திருந்தான். ஆகவே இந்தச் செய்தியைக் கேட்டதும் அவனுடைய விபரீத மனம் விபரீத வழியில் செல்ல ஆரம்பித்தது.

"அப்படியா? சந்தோஷம்; கல்யாணம் எண்ணிக்கு?"

"நாளைக்குத்தான். கட்டாயம் வந்திடுங்க," என்றான் திருமலை.

"என்னைக்கூடக் கூப்பிடவா வேணும்? நான்தான் ஒங்க ஆளாச்சே அப்பா!" என்று விஷமமாகச் சிரித்தான் சேது.



"ஐயா யாரு?" என்று மெல்லக் கேட்டான் பரமசிவன்.

"இவுக நம்ம அண்ணாச்சிகூடப் படிச்சவுக."

"அண்ணாச்சிகூடப் படிச்சவுகன்னா நமக்குத் தெரிஞ்சிருக்கணுமே? நான் ஸெகண்ட் பாரம் படிச்சிக்கிட்டிருந்தபோதுதானே மச்சினரு 'போர்த்'திலே படிச்சுக்கிட்டிருந்தாக. ஐயா பேரு?"

"சேதுராமலிங்கம்."

"சதி, சதி; இப்பொம் வெளங்கிடிச்சு. வெறகுக் கடை ஐயர்வாள் மகன்தானே நீங்க?"

"ஆமா."

"அப்பொம் நமக்கும் தெரிஞ்சவுக ஆயிட்டீக. நாளைக்குக் கண்டிஷனக் கல்யாணத்துக்கு வந்திடணும்."

"கட்டாயமா வரேன். அது சரி: எங்கே தூரமா?"

"சும்மாதான் ஒரு 'வாக்' போகலாம் இன்னுக; பொறப்பட்டோம்."

"சரி வாங்க, நாங்களும் வரோம். இப்படி இடைமலைக் கொளம் பக்கமாப் போயுட்டு வரலாம்," என்றான் சேது.

அவர்கள் அனைவரும் ரெயில்வே 'கேட்'டுக்கு வந்து 'லைன்' வழியாக மேற்கே நடந்தனர்.

இடைமலைக் குளம் புதுத் தண்ணீர் வந்து பெருகி யிருந்தது. ஸ்டேஷன் வட்டாரத்தில் இருப்பவர்கள், இக்குளம் பெருகியிருக்கும்போது இங்கேதான் குளிக்க வருவார்கள். காலையிலிருந்து இரவு வரையில் யாராவது இங்கே குளித்துக் கொண்டே இருப்பார்கள். இன்றும் அங்கே சிலர் குளித்துக் கொண்டிருந்தனர்.

இடைமலைக் குளத்தின் வடக்குக் கரையில் ரெயில் பாதை போகிறது. அந்தப் பாதையின் நடுவே ஒரு சிறு பாலம். அதன் கிராதியில் இவர்கள் அனைவரும் வந்து அமர்ந்தனர்.

"கொளமின்னு பெரிய கொளமாயிருக்குமின்ணில்லா நெனெச்சுக்கிட்டிருந்தேன்? இது எங்க பாவூர்க் கொளத்துக்கு அரைக்காவாசிகூட இருக்காதே!" என்றான் பரமசிவன்.

"அப்பிடி நெனெச்சுக்கிடாதிங்க, அத்தான். கொளம் சின்னதாயிருந்தாலும் ஆளம் சாஸ்தி," என்றான் திருமலை.

"ஒங்க பாவூர்க் கொளம் பத்து வருசத்துக்கு ஒரு தபாத்தானே பெருகும்?" என்று கேலியாக நகைத்தான் சேது.

"பத்து வருசமில்லே; இருபது வருசத்துக்கு ஒரு வாட்டி பெருகினாலும், கடலா இல்லே தண்ணீ 'தெத்தல்' அடிக்கும்? நாங்க கொஞ்சமா நீஞ்சுவோம் அங்கனே!"

"அப்பொம் அத்தானுக்கு நீச்சலடிக்கவும் வருமின்னு சொல்லுங்க."

"அதென்ன லேசாக் கேட்டுட்டீக மச்சினரே? ஐயாவாள் ஒரு முக்குளி போட்டேன்னு அக்கரையிலே போய்த்தானே தலையெ மேலே தூக்குவேன்."

"நம்ப சேது ஐயாகூட நீஞ்சு வாகன்னு அண்ணச்சி சொல்லும். ஏன் ஐயா, அப்பிடித்தானே?"

"ஆமா, ஏதோ கொஞ்சம். ஆனு எனக்கெல்லாம் ஒங்க மாப்பிள்ளை யைப் போலே தண்ணியில்லாத கொளத்திலே நீஞ்சத் தெரியா தப்பா."

"அட, தண்ணியில்லாத கொளமாமில்லே! அப்போ நான் என்ன பொய்யா சொல்லுதேன்? வேணும்னு பாக்கேகளா, இந்தா இப்பிடியே இங்கனேயே ஒரு முக் குளி போட்டுக் காட்டுதேன். என்ன பந்தயம் கட்டுதீக?"—பரம சிவன் தன் பிறவிக் குணத்தைக் காட்ட ஆரம்பித்து விட்டான்.

"இதெல்லாம் எதுக்குப் பிள்ளை வாள் வெட்டிப் பேச்சு? நீங்க

நீச்சலடிக்கத் தெரிஞ்சவராகவே இருக்கலாம். முக்குளிக்கத் தெரிஞ்சவராகவே இருக்கலாம். ஆனா இந்தச் சேதுகூடப் போட்டி போட மாத்திரம் ஒங்களாலே முடியாது,'' என்றான் சேது.

'' முடியாதாமில்லே, முடியாது! அதத்தான் பார்த்துப் போடுவோமே!''

'' என்னத்தைப் பாக்க?''

''ரெண்டு பேரும் இங்கனேயிருந்து ஒண்ணா முக்குளிச்சுப் போக வேண்டியது. யாரு சிக்கிரமா ரொம்பத் தூரம் போயித் தலையெத் தூக்குதாகளோ, அவுகளுக்கு மத்தவுக அம்பது ரூவா கொடுத்துடணும். ஏன் திருமலை சரிதானே?'' என்றான் பரமசிவன்.

''அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம், அத்தான். இது புதுத் தண்ணி. ஒங்க ஒடலுக்கு ஒத்துக்கிடாது,'' என்று திடுத்தான் திருமலை.

'' ஆமாம் பரமு; 'ஐயா'வுக்குத் தெரிஞ்சிச்சுன்னா கோவப்பட்டுக்கிடுவாரு. விடியாமக் கல்யாணத்தெ வச்சுட்டு, நீ இங்கனே முளுகித் தடுமம் புடிச்சுக்கிடப் போகுது,'' என்று அவர்களுடன் வந்திருந்த பாவூர்க்காரப் பையன் ஒருவனும் சொன்னான்.

'' அட சும்மா இரிடே. தண்ணியாம் தண்ணி. இது மாதிரி எத்தனை தண்ணியைப் பாத்திருக்குது இந்தச் சிங்கம்! அவரு என்னமோ நம்பளுக்கு ஒண்ணும் தெரியாதது கணக்காப் பேசுதாரு. இந்தப் பாவூர்ப் பரமசிவன் எப்படிப்பட்ட இல்லாடிங்கறத்தெ அவருக்குக் காட்டிட வேண்டாம்?''

திருமலையும் மற்றவர்களும்மீண்டும் பரமசிவனைத் தடுத்துப் பார்த்தனர். ஆனால் அவனுக்கு வீராப்பு ஏற்பட்டுவிட்ட பிறகு யார்தான் நிறுத்த முடியும்? சட்டை—வேட்டி முதலிய துணிகளைக் களைந்துவிட்டு, திருமலையின் மேற்துண்டை உடுத்துக் கொண்டு, குளத்தில் குதித்து விட்டான் பரமசிவன்.

சேதுவும் துணி மாற்றிக் கொண்டு நீரில் விழுந்தான். இருவரும் ஒன்றாக நீரில் மூழ்கி மறைந்து நீந்திச் சென்றனர்.

ஒரு நிமிஷம், இரண்டு நிமிஷம், மூன்று நிமிஷங்களும் சென்றுவிட்டன. கரையில் நின்றவர்கள் ஆவலுடன் வெற்றி தோல்வியை அறியக் காத்திருந்தனர். நான்காவது நிமிஷத்தில் சேதுவின் தலை நடுக்குளத்தில் முதலில் மேலே வந்தது.

'' தோத்துட்டாரு! நம்ம பரமு அக்கரையிலே போயித்தான் வெளியே வருவான்!'' என்று கொக்கரித்தான் பாவூர்ப் பேர்வழிகளில் ஒருவன்.

ஆனால்.... ஆனால்....?

சேது திரும்பி நீந்திக் கரை வந்து சேர்ந்த பிறகும், மாப்பிள்ளை பரமசிவனின் தலை வெளியே கிளம்பக் காணோம்!

ஆம், அது கிளம்பவே இல்லை. கிளம்பாத இடத்தில் போய்ச் சிக்கிக் கொண்டு விட்டது!

பத்து நிமிஷங்கள் பார்த்த பிறகு, எல்லோரும் கூக்குரலிட ஆரம்பித்தனர். கூட்டம் சேர்ந்தது. திருமலை அடித்துப் புடைத்துக் கொண்டு, இந்த அவலச் செய்தியைக் கூறக் கல்யாண வீட்டை நோக்கி ஓடினான்!

(தொடரும்)

★

தலைவர்களுக்குக் கீழ்ப்படியும் நற்குணத்தை நீ கற்றுக் கொள். ஆனால் உன்னுடைய நம்பிக்கையை மட்டும் கைவிட்டு விடாதே. தலைவர்களுக்குக் கீழ்ப்படியாமல் சக்திகளை ஒன்று திரட்ட முடியாது. தனி மனிதர்களின் சக்திகள் ஒன்று சேராத வரையில் எந்தப் பெரிய காரியமும் செய்ய முடியாது.

—விவேகானந்தர்.

அதிசயம்!

சு. ரா.

அந்தப் பெண்ணைப் பார்த்து விட்டு, "நீயா? இன்றைக்கு அரைக்க ஒன்றுமில்லை. செவ்வாய்க் கிழமை வா. மிளகாய் தயார் செய்து வைக்கிறேன். பொடி அரைக்க வேண்டும்," என்றாள் என் மனைவி சரஸ்வதி.

"சரியம்மா!" என்று அவள் போய் விட்டாள். நாங்களிருவரும் உள்ளே வந்தோம்.

"யார் அந்தப் பெண்?" என்று சரஸ்வதியை விசாரித்தேன்.

"தேவு என்று சொல்வேனே, அவள் தான்! ஏதாவது அரைக்க வேண்டுமானால் அவளிடம் தான் தருகிறேன். ஒவ்வொரு தடவையும் அரைத்து வர அரையணாக் கூலி," என்றாள்.

"இவளேதான் சாமான்களும் வாங்கி வருகிறாளா?" என்று கேட்டேன் நான்.

"இல்லை; இவள் அதெல்லாம் செய்வதில்லை. மில்லுக்கு மட்டும் தான் அரையணாக் கூலியுடன் போய்க் கொண்டிருக்கிறாள்."

"அது ஏன் அப்படி? எல்லாக் காரியங்களையும் செய்து விட்டு

மொத்தமாக ஏதாவது வாங்கிக் கொள்ளக் கூடாதோ?''

"நான் கூட ஒரு நாள் சொல்லிப் பார்த்தேன். அவள் மறுத்து விட்டாள்,'' என்ருள் என் மனைவி.

கோயில் மணி அடித்தது.

''சும்மாதானே இருக்கிறீர்கள்? கொஞ்சம் மில் வரைப் போய் வருகிறீர்களா? அவசரமாகக் கோதுமை மாவு வேண்டியிருக்கிறது. மத்தியானத்துக்கு டிபன் செய்ய வேண்டுமல்லவா?'' என்று கூறிக் கொண்டே வந்தாள் சரஸ்வதி.

''சரி, கொண்டு வா!'' என்று கூறிச் சட்டையை மாட்டிக்கொண்டேன். அச்சமயத்தில் நண்பன் கஜ்ரோல்கர் வந்து சேர்ந்தான். என் அலுவலேச் சொன்னேன்.

''என்னேடு வா. அடுத்த தெருவில் தான் 'மகாலக்ஷ்மி மில்' இருக்கிறது. கூட்டமே கிடையாது. போனேம், வந்தோம் என்று திரும்பி விடலாம்,'' என்ருன் அவன்.

அவன் கூறியபடி 'மில்' வெகு அருகில் இருந்தது. உள்ளே போனேம்.

ஒரு பலகையின் மீது பலவிதப் பாத்திரங்கள், டின்கள், பைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

ஒரு டப்பாவில் கோதுமை; ஒரு பையில் ஏதோ தானியம்; ஒரு அகன்ற பாத்திரத்தில் கொஞ்சம் அரிசி – யாவும் அரைக்கப் படுவதற்காகக் காத்திருந்தன. ஆனல் அங்கே இயந்திரத்தை ஓட்டிக் கொண்டிருந்தவனைத் தவிர வேறு ஆளரவமே இல்லே.

எங்களேக் கண்ட அவன், ''வாங்க; என்ன அரைக்கணும்?'' என்று கேட்டுக் கொண்டே கையிலிருந்த பையை வாங்கிக் கொண்டான்.

''மாவு அரைக்க வேண்டும்,'' என்றேன் நான். கொடுத்த ஐந்து நிமிஷங்களுக்குள் மாவு கைக்கு வந்து விட்டது. கூலியைக் கொடுத்து விட்டு வெளியே வந்தோம். எங்களேத் தாண்டிக் கொண்டு தேவு ஒரு பாத்திரத்துடன் மில்லுக்குள் நுழைந்தாள்.

கஜ்ரோல்கர் என்னிடம், ''நான் சொன்னபடியே கூட்டமே இல்லே, பார்த்தாயா?'' என்ருன்.

''ஆமாம், அங்கே பலகைமேல் நிறையப் பாத்திரங்கள் வைக்கப் பட்டிருந்தனவே! அவையெல்லாம் என்ன?'' என்று கேட்டேன்.

''அவைதான் அவனுடைய வியாபாரம். எல்லாம் அரைப்பதற்காக வந்தவை.''

''ஆனல் ஆள் ஒருவரையும் காணவில்லேயே?''

''இப்போது நம்மைத் தாண்டிக் கொண்டு உள்ளே போனளே, அவளேக் கவனித்தாயா?''

''ஓ, அவளே நான் முன்பே பார்த்திருக்கிறேனே! என் வீட்டுக்கே வந்திருக்கிருள். தேவு என்று பெயராம்... அவளா இவ்வளவு வீடுகளிலிருந்தும் கொண்டு வருகிருள்!'' என்று கேட்டேன்.

''அதுதான் அவளுடைய தொழில். ஒவ்வொரு வீடாக நுழைந்து என்ன அரைக்க வேண்டுமோ அதைக் கொண்டு வந்து, அரைத்துக் கொடுத்து விட்டு வருகிருள். மில்லிலும் அனுவசியக் கூட்டம் கிடையாது. நம்மைப் போன்ற உதிரி ஆசாமிகள் போனலும் போட்டி இல்லாமல் அரைத்து வர சௌகரியம்,'' என்று விளக்கம் தந்தான் அவன்.

''அவளுக்கு என்ன கிடைக்கும் இந்தத் தொழிலில்? அரையணத்தான் கூலியாக வாங்கிக் கொள்கிருளாமே?'' என்றேன்.

அவன் சிரித்துவிட்டு, ''அவள் வாங்கும் கூலி அதிகப்படி சம்பாத்தியம் ஆயிற்றே? அவளுடைய தந்தையின் மில்லுக்குத்தானே தினமும் கிராக்கி கொண்டு வருகிருள்....!'' என்ருன்.

பம்பாய் அதிசய நகரம்தான்! ★

வே. கபிலன்

நெஞ்சின் நிலை

"போய் வருகிறேன், கண்ணே!

"போய்த்தான் ஆகவேண்டுமா?"

"ஆம்; போய்த்தான் ஆக வேண்டியிருக்கிறது; என்ன செய்வேன்? வாழ்க்கையில் குணம் அமைந்துவிட்டால் மட்டும் போதுமா? பணமும் அவசியமாயிற்றே? அதற்காகத்தான் போகிறேன். போகும்போது உன்னுடைய நெஞ்சின் கண்ணீரைக் காட்டி என்னைத் துன்பத்திற்கு ஆளாக்காதே."

"அத்தான், உங்களுக்கும் எனக்கும் திருமணமாகி ஒரு மாதங்கூட முடியவில்லையே; இதற்குள் என்னை விட்டுப் பிரிந்து செல்வதா?"

"பேதைப் பெண்! நான் என்ன நான்கு மாதம் தங்கப் போகிறேனா, ஓராண்டு இருக்கப் போகிறேனா? கவலை விடு. பத்தே நாள்!— அதன் பிறகு ஒரு நிமிடம்கூட அங்கு நான் இருக்க மாட்டேன்."

"அப்படியானால், போய் வாருங்கள் அத்தான்!"

"உன் அழகு உதட்டிலிருந்து வெண் முத்துக்களைச் சிந்தி விடை தந்து விட்டாய், அதுவே போதும். உன்னை நினைத்தே பணம் திரட்டுவேன். உனது ஆடலசைவை நினைத்துக்கொண்டே மீண்டும் வருவேன். அப்போது நீ எனக்கு என்ன பரிசு வழங்குவாய்....?"

அந்தச் சொற்களைக் கேட்டவுடன் வெட்கித் தலை சாய்த்தபடி "வேண்டியதைக் கொடுப்பேன்!" என்றாள்.

அவளை அணைத்தபடி, "என் மணிவிளக்கே! அருவி போல் துள்ளி விளையாடும் தீஞ்சுவைத் தமிழை அழகுத்தேன் சொட்டத் திரும்பி வந்த பிறகு விருந்தாகத் தந்தால் அதுவே எனக்குப் போதும். அதைவிடச் சிறப்பு, இந்த அவனியில் வேறேது? போய் வருகிறேன்," என்று சொல்லிப் பயணமானான் தலைவன்.

அன்றைய இரவு.

உடன் வந்த அவனது நண்பர்கள் அனைவரும் நன்றாகக் குறட்டை விட்டு உறங்கினர். இளந்தளிரைப் பிரிந்து வந்தவனுக்கு மட்டும் அந்தத் தூக்கம் இல்லாமல் போய் விட்டது.

இப்படியே பத்து நாட்களையும் பத்து ஆண்டுகளாக நினைத்துக் கொண்டு கழித்தான். அவளுக்கு உறுதி தந்த நாளும் கடந்து விட்டதை எண்ணித் துயரப்பட்டான்.

"என்ன விசேஷம்? வந்ததிலிருந்து ஒரு மாதிரியாகவே இருக்கிறாயே?" என்றான் தோழன்.

"ஒன்றும் இல்லை; என் நெஞ்சம்தான் அமைதி காட்டவில்லை!"

"அதைத்தான் கேட்கிறேன், ஏன் அப்படி? காரணம்....?"

இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில், பெரியவர் ஒருவர் குறுக்கிட்டு, "இதையெல்லாமா தம்பியிடம் கேட்டுக் கொண்டிருப்பது? திருமணமாகி ஒரு மாதம் கூட முடியவில்லையே.... ஜோடி மான் பிரிவதென்றால் வேதனை தானே!" என்று சொல்லிவிட்டு அவ்விருவருடனும் சென்றார்.

அந்தச் சொற்களுக்குச் செவி மடுத்துக் கேட்டுக் கொண்டிருந்த அவன் மனம் 'ஓ'வென ஓலமிட்டது; உடனே தன் காதலியைக் காணவேண்டுமெனக் கருதியது. அப்படிக் காணவிட்டால் தான் வாழ்வதே அரிதாக முடியுமென்று அவன் மனம் அடிக்கடி அச்சுறுத்தியது.

நினைத்தான்—தன் ஊருக்குத் திரும்பவும் போவதாய் இருந்தால் எத்தனை நாட்களாகும் என்பதை எண்ணினான். சோர்ந்து உட்கார்ந்தான். என்றாலும், வேட்கையை குறிக்கோளாகக்கொண்ட மனம், அவனைச் சும்மா விடுமோ? அந்தத் துயரத்திற்கிடையே இன்பமான ஓர் உவமை அவனிடம் தோன்றியது.

மனைவியைக் காணத் துடிக்கும் மனத்தின் வேகத்தை நினைக்கிறான். தன் ஊரில் புன்செய் நிலங்களை வைத்துக் கொண்டு இருப்பவர்களை ஒரு கணம் எண்ணிப் பார்க்கிறான். காரணம், புன்செய் நிலங்களில் மழை பெய்தவுடன் உழுதுவிடவேண்டும். இல்லையானால் மழைநீர் உலர்ந்துவிடும். நன்செய் நிலமானால் மழைநீர் சிலநாள் வரையில்கூடத் தேங்கிக் கிடக்கும். இதை மனத்தில் நினைத்துக் கொண்டு ஓர் உழவனின் நிலையை உணர்கிறான்.

புன்செய் நிலங்களை வைத்துள்ள ஒருவன் ஒரே ஒரு கலப்பையை வைத்திருக்கிறான். மழையும் சோவெனப் பெய்கிறது. அந்நேரத்தில் உழுதால்தான் பயன் காண முடியும். ஆனால் ஒரு நிலமாய் இருந்தால் பரவாயில்லை. பல நிலங்களை வைத்துக் கொண்டு இருப்பவன் என்ன செய்ய முடியும்? அவன் மனம்தான் என்ன நினைக்கும்? எல்லா நிலங்களையும் சில மணி நேரங்களுக்குள் உழுதுவிட வேண்டுமென்றுதானே கருதும்? அப்படி எண்ணுகிறபோது எவ்வளவு வேகமாக வேலை செய்யத் தொடங்குவான்?—அதைவிட வேகமாக அவன் மனம் அவளைக் காண நினைத்தது; மூங்கிலையொத்த அவளது தோள்களைக் காண அந்த மனத்திற்கு எத்துணை எழுச்சி! அவனுக்குத்தான் எவ்வளவு இன்பம்! ஆனால், நெடுந் தொலைவு, அவனை அச்சுறுத்தத் தொடங்கியது. பொருளாசை, அவனைப் பற்றி இழுத்தது. காதலோ அதைவிட வேகமாக அவனை இழுக்கத் தொடங்கியது.

மனிதனுக்கு மனம் மட்டும் இல்லையானால் வாழ்வின் சிறப்பையே அவன் உணர்வதற்கு வழியில்லாமல் இருந்திருக்கும்; ஒரு பொருளின் மீதும் பற்றில்லாமல் இருந்தால் அவன் எந்தக் கடமையையும் செய்யமாட்டான். மனம் என்று ஒன்று இருப்பதால்தான் உணர்வு என்ற ஒன்று அவனிடத்தில் அமைந்திருக்கிறது. அதனால் நன்மைக்கும் தீமைக்கும் யிடையே அவன் உழலவேண்டியிருக்கிறது. அவ்வேளையில் தேறுதல் பெறுவதே அறிவின் வேலையாகும். இதைத்தான் மிக மிக அழகுற விளக்கிக் காட்டுகிறார், முத்தமிழ்ப் புலவர்.

ஆடமை புரையும் வனப்பிற் பணைத்தோட்
பேரமர்க் கண்ணி யிருந்த ஊரே
நெடுஞ்சேண் ஆரிடை யதுவே; நெஞ்சே
ஈரம் பட்ட செவ்விப் பைம்புனத்து
ஓர் ஏர் உழவன் போலப்
பெருவிதுப்பு உற்றன்றால் நோகோ யானே!

[ஆடு அமை புரையும்—அசைகின்ற மூங்கிலை யொத்த; பணைத் தோள்—பருமையுடைய தோள்; சேண்—தொலைவு; விதுப்பு—விரைவு.]

நூல்: **குறுந்தொகை-131.**
பாடியவர்: **ஓரேருழவர்.**
காலம்: **கடைச் சங்கம்.** ★

சிலம்பும் கையுமாகச் சென்றாள் கண்ணகி – அந்த நாளிலே. இன்றோ வெள்ளிச் சிலம்புடன் அழகி ஒருத்தியைத் தேடிச் சென்றான் சிங்காரம். காதல் வெற்றி பெற நல்ல தீர்ப்பு வழங்கியது —

வெள்ளிச் சிலம்பு

த. சிவப்பிரகாசம்

தன் வயிற்றுக்கு வேண்டியதைப் பார்வதி கொடுப்பாள் என்று அவன் நிச்சயமாக நம்பினான். அந்த அசையாத நம்பிக்கையே அவனுக்கு வலுவைக் கொடுத்து, அவனைத் தள்ளிக் கொண்டு வந்தது.

அவ் வீட்டின் சுற்றுப்புறச் சுவரைப் பிடித்துக் கொண்டே அவன் மெதுவாக நகர்ந்து வந்து பெரிய வாயிற்படியை அடைந்தான். கதவைத் தள்ளினான். தாளிடப்பட்டிருந்த அந்தக் கதவு அசையவில்லை.

'பார்வதி' என்று கூப்பிட்டால் ஒருகால் அவள் வந்தாலும் வரலாம். அதற்காக அவன் மிகவும் சிரமப்பட்டு வாயைத் திறந்து உரக்கத்தான் கூப்பிட்டான். ஆயினும், வீட்டின் உள்ளே இருக்கும் பார்வதியின் காதுகளுக்கு எட்டும் அளவுக்கு அவனால் சத்தம் இட்டுக் கூப்பிட முடியவில்லை. ஆனால் அவன் குரலைக் கேட்டு உள்ளிருந்து யாரோ ஒருவன் தலையைக் காட்டினான்.

"ரொம்பப் பசியாய் இருக்குது. கொஞ்சம் சோறு...."

"ஆமா, இங்கே மாடாய் உழைக்கிறவனுக்கே கால் வயிற்றுக்குச் சோற்றைக் காணோமாம். உனக்குத்தான் பிச்சை போடப் போகிறாங்களாக்கும். போ.... போ.... !"

"இல்லை. பார்வதியைக் கூப்பிடுங்க. அவள் எனக்கு ஏதாவது கொடுப்பாள்....!"

"யாருடா அவள் பார்வதி....?"

"இந்த வீட்டுச் செட்டியார் மகள் !"

"சீ! பிச்சைக்காரப் பயலே! இந்த வீட்டுப் பொண்ணைப் பேர் சொல்லிக் கூப்பிட உனக்குத் தைரியமா? டேய், போய்விடு. இல்லை, செம்மையாக உதை விழும் !"

திரும்பினான்; வழி நடந்தான்; எண்ணினான்.

பதினெட்டு வயது இளைஞனுக்குச் சிந்திக்க என்ன இருக்கிறது?

மூன்று வருடங்களுக்கு முன் :

அந்தக் குளத்துக்கு வடக்குப் பக்கத்தில்தான் அவன் குடில் இருந்தது. அவனுக்கு அப்பொழுது அம்மாவும், அப்பாவும் இருந்தார்கள். அவர்கள் அவனைச் 'சிங்காரம்' என்று வாய் நிறைய அழைத்தார்கள்.

சிங்காரத்தின் அப்பா சங்குச் செட்டியார், அந்த ஊரிலேயே மிகப் பணக்காரரான தனகோடிச் செட்டியாரின் வீட்டில் 'காரியம்' பார்த்து வந்தார்.

காரியம் பார்ப்பவருடைய மகன் என்ற முறையில், சிங்காரத்திற்கு அடிக்கடி தனகோடி செட்டியார் வீட்டுக்குப் போகும் வாய்ப்பு இருக்கும். அதனால் அவனுக்கு தனகோடிச் செட்டியாரின் ஒரே பெண் பார்வதியுடன் பழகச் சந்தர்ப்பமும் நிறைய கிடைத்தது.

பார்வதி சிங்காரத்தைவிட இரண்டு வயது சிறியவள்.

பணக்கார வீட்டுப் பெண்ணுக இருந்ததால் அவள் வீட்டை விட்டு வெளியேறும் சந்தர்ப்பம் மிகவும் குறைவு. அப்படிச் சென்ருலும் அம்மாளுடன் வண்டியில் செல்வாள். அதனுல் அவளுக்கு வெளியுலகம் பற்றி ஒன்றுமே தெரியாது.

பார்வதியின் நட்பினுல் தின்பண்டங்களின் ருசியைக் கண்டு கொண்டு விட்டான் சிங்காரம். கேழ்வரகு அடையும், கூழும்தான் மனிதன் உண்ண வேண்டியவை என்று அவன் எண்ணி இருந்தது போக, சாப்பிடும் பொருள்கள் இன்னும் எத்தனையோ இருப்பதைத் தெரிந்து கொண்டான் அவன்.

தன் ஒரே வீட்டைத் தன் முதலாளியிடமே அடமானம் வைத்து, ஐந்நூறு ரூபாய் வாங்கி வந்தார் சிங்காரத்தின் தந்தையான சங்குச் செட்டியார். அந்தப் பணம் எண்ணெய் ஆட்டும் செக்காகச் சுழன்றது. செக்கு மாடுகளை ஒட்ட வேண்டிய பொறுப்பு சிங்காரத்தைச் சார்ந்தது. அப்பொழுதெல்லாம் சிங்காரத்துக்குப் பார்வதியைக் காண முடிவதில்லை. அது அவனுக்கு எவ்வளவோ வருத்தமாக இருந்தது. சிங்காரத்தைக் காணுத பார்வதிக்கும் எவ்வளவோ ஏக்கம். அதை அவள் யாரிடம் போய்ச் சொல்லுவாள்?

சங்குச் செட்டியாருக்குப் புதிய தொழில் உற்சாகம் ஊட்டக்கூடிய அளவில் அமையவில்லை. ஊரின் நடுவே இயந்திரச் செக்கு போட்டு விட்டார் பணம் படைத்த ஒருவர்! நயமான கூலி; வேலையும் சிக்கிரம். அப்படி இருக்கும் பொழுது ஊருக்கு ஒதுக்குப்புறமாக இருந்த சங்குச் செட்டியாரின் நாட்டுச் செக்கை நாடி யார் வருவார்கள்?

சங்குச் செட்டியார் தன் முதலாளியிடம் பெற்றிருந்த கடனுக்கு, அவர் இருந்துவந்த மனையும், வீட்டுத் தோப்பும் சரியாகிவிட்டது!

சுழன்றடித்த சூருவளியிலே, ஒரு ஆஞ்சநேயர் கோயிலின் பக்கலில் இருந்த பெரிய அரசு நிலை பெயர்ந்து விழ, அதனுல் கோயிலின் முன் மண்டபம் இடிந்து, அதன் கீழ் மழைக்கும் காற்றுக்கும் அடைக்கலமாக இருந்த சிங்காரத்தின் வீட்டின் மேல் விழ, மூவரில் சிங்காரத்தைத் தவிர, இருவரும் இறந்தனர்.

★

பிள்ளையார் கோயிலின் மணி ஓசை சிங்காரத்தின் சிந்தனைக்கு முற்றுப் புள்ளி வைத்தது.

மனித அரவம் கேட்டு அவன் திரும்பிப் பார்த்த சமயம், ஒரு பெரிய அம்மாளும், ஒரு பெண்ணும் குளத்துப் படிக்கட்டுகளில் இறங்கி வந்தார்கள். கண்களைத் துடைத்துக்கொண்டு அவர்களைப் பார்த்தான் சிங்காரம். அவன் அகம் மகிழ முகமும் மலர்ந்தது. மூன்ருண்டுகள் கழித்து அவன் யாரைத் தேடி வந்தானே, அவளே எதிரில் இருக்கும்பொழுது அவன் சந்தோஷம் அடையாமல் இருக்க முடியுமா?

பார்வதியின் குறுகுறுப்பான வட்ட விழிகள் சிங்காரத்தைப் புரிந்து கொண்டன.

"ஏண்டி, முழிச்சுக்கிட்டு நிற்கிறே? நேரமாகுது, வந்து கை காலை அலம்பு!" என்ருள் தாய்.

படிக்கட்டில் பார்வதி இறங்கிய போது, கால்கள் தடுமாறிவிட்டன. அவள் குளத்தில் விழுந்து விட்டாள்.

சிங்காரம் குளத்தில் குதித்தான். மூச்சைப் பிடித்து நீந்தி, பார்வதியை கைலாகுகொடுத்து தூக்கிக் கரை சேர்த்தான். சோர்ந்து துவண்டு போய் ஒரு படிக்கட்டில் அவனும் படுத்து விட்டான்.

சிங்காரத்தின் கண்கள் திறந்தன. அவன் எதிரே பெரியதொரு வண்டியில் தாயின் மடியில் தலை சாய்த்து, தன் நினைவு இன்றி படுத்திருந்தாள் பார்வதி. செய்வதறியாது ஈரத் துணியுடன் திகைத்து

நின்ருன். வண்டி நகர்ந்தது. சிங்காரமும் படிக்கட்டுகளைக் கடந்து மேலே வந்தான். வண்டி மறைந்து விட்டது. பிள்ளையார் கோயிலுக்கு வந்தான் சிங்காரம். அங்கிருந்த கடும் இருளைப் போக்கியது சிறு திரியின் வெளிச்சம். பிள்ளையாரைப் பார்த்ததும் தாஞகவே அவனது கைகள் தொழுதன. அவன் மனத்திலே 'பார்வதியைக் காப்பாற்று' என்ற பிரார்த்தனை எழுந்தது. மண்டபத்தின் தூணில் சாய்ந்தவண்ணம் இருந்தவன் சொப்பனம் கண்டவனைப் போல் திடுக்கிட்டு விழித்தான். அவனது தோள்களைப் பற்றி உலுக்கிக் கொண்டிருந்தனர் இருவர்.

''ஏய், சிலம்பு எங்கே?''

''ஆமாண்டா, வெள்ளிச் சிலம்பு! நீதானே சாயங்காலம் குளக்கரையில் இருந்தே? மரியாதையாய்க் கொடுக்கிருயா,

உதை வேணுமா?'' என்று முதல் வன் கேட்டுக் கொண்டிருக்கும் பொழுதே. இரண்டாமவன் சிங் காரத்தின் முதுகில் ஒரு குத்து விட்டான். வலி பொறுக்கமுடியாத சிங்காரம் கீழே சாய்ந்தான்.

''ஏய், பயல் தீர்ந்துவிட்டான் போலிருக்கு,'' என்று ஒருவன் சந்தேகத்துடன் சொல்ல, இரு வரும் நழுவி விட்டார்கள்.

★

வெகு நேரம் வரை பிரக்ஞை யற்றுக் கிடந்த சிங்காரம் கண் விழித்த பொழுது, உச்சி வானில் ஏறி இருந்தது முழு நிலவு. நன் ருகக் கண்ணைத் துடைத்துக் கொண்ட அவன், முதுகில் இன்ன மும் வலி இருப்பதை உணர்ந் தான். ஏதோ சிந்தித்தான். யாரோ அடித்தது நினைவிற்கு வந் தது. பிறகு அவர்கள் சிலம்பைப் பற்றி பேசியது நினைவுக்கு வந்தது.

குளத்திலிருந்து பார்வதியைக் காத்த சமயம் ஏதோ ஒன்று படி யில் விழுந்த சத்தம் கேட்டது. அதை அவன் அப்பொழுது பொருட்படுத்தவில்லை. இப்பொ ழுது அதை எண்ணிக் கடைசிப் படிக்கட்டை நோக்கி ஓடினன். அவன் எண்ணம் வீணுகவில்லை. படியிலே கிடந்த வெள்ளிச் சிலம்பு நிலவொளியில் மின்னியது.

ஆவலுடன் சிலம்பைக் கையில் எடுத்துப் பார்த்தான். அதில் பார் வதியின முகம் பளிச்சிட்டது. அவன் மனம், ''இப்பொழுதே சென்று சிலம்பைப் பார்வதியிடம் சேர்த்துவிடு; அவளைப் பார்த்த மாதிரியும் இருக்கும்,'' என்று கூறியது. ஓட்டமாக ஓடினன்.

★

பார்வதி படுத்திருந்தாள்; சிங் காரம் வெள்ளிச் சிலம்பை வீசி ஞன். மாடிச் சுவரின் தாங்கலில் அவன் ஜன்னலைப் பிடித்தபடி நின்ருன்.

''பார்வதி, பயப்படாதே. நான் தான் சிங்காரம்!''

திருடன் என எண்ணிப் பயந் திருந்த பார்வதியால் அவன் சொன்னதைப் புரிந்துக் கொள்ள முடியவில்லை. 'திருடன்' என்று அலறிஞள்.

பீதி மேலிட்டதால் சிங்காரத் தின் கால்கள் உதறின. சோர்ந் திருந்த அவனது கைகள் தளர்ந்து பிடியை விட்டன. உடலெங்கும் வியர்த்துக் கொட்டியது. உள்ளத் தின் உறுதி எங்கோ ஓடி ஒளிந் தது. அவ்வளவுதான், பூமித் தாய் அவனைத் தன் மடியில் கிடத்திக் கொண்டாள்.

'திருடனை'ச் சுற்றிலும் அவ னைப் பிடிக்க வந்த ஆட்கள் சூழ்ந் திருந்தனர். மாடியிலிருந்து தன கோடியும், கொஞ்சம் பயம் தெளிந்திருந்த பார்வதியும் கடை சியாக வந்தார்கள். தரையில் கிடந்த சிங்காரத்தைக் கண்டதும் பார்வதி திகைத்தாள்.

''அப்பா, சிலம்பு கிடைச்சுட் டுது, அப்பா ....!''

செட்டியாரின் கண்களில் அந்த வெள்ளிச் சிலம்பு தென்பட்டது. அதை ஆவலுடன் கையில் எடுத் தார்; ஆனந்தக் கண்ணீர் விட்டார்.

''ஆஹா, இதுதான் எனக்குத் தெய்வம் தந்த பரிசு. பார்வதி, நம் குலதெய்வம் ஒரு பூசாரி மூலம் இந்தச் சிலம்பை அனுப்பியது; அதிலிருந்துதான் நமக்கு நல்ல காலம் பிறந்தது; பிள்ளைப் பேறில்லாதிருந்த எனக்கு நீ மக ளாகப் பிறந்தாய். இதை யார் எடுத்தார்கள்?''

''சிங்காரம்!''

''சங்குச் செட்டியார் மகனு?.... நானே இந்தப் பிள்ளையைப் பார்க்க வேண்டுமென்றிருந்தேன். நான் இந்தப் பையன் வீட்டுக்குத் தெரியாமல் சில கெடுதல் செய்து விட்டேன். சிங்காரத்திடம் வீட்டை யும் திருப்பிக்கொடுத்து, மன்னிப் புக் கேட்டால்தான் என்னுடைய மனம் நிம்மதிப்படும்....!''

★

பதினைந்து நிமிஷங்கள் கழிந் தன. சுபவேளையில் பார்வதியின் கை சிங்காரத்தின் கைகளில் ஒப்படைக்கப் பட்டது. ★

வாழும் தமிழ்



பிறைசூடி

தமிழை வளர்ப்பது எப்படி?

ஏ. வி. இராமன்; தமிழகம், சென்னை-1; ரூ. 0-12-0.

தெய்வத் தமிழ் மொழியை வளர்க்கும் பணியில் அரசாங்கத்தைக் காட்டிலும் தனிப்பட்டவர்கள்தாம் அதிகமான ஈடுபாடு கொண்டிருக்கிறார்கள். தமிழ் வளர வழி என்ன, எப்படித் தமிழை வளர்ப்பது என்பது போன்ற கேள்விகளை எழுப்பி, அவற்றுக்கு மட்டும் பதில் சொல்வதுடன் நிற்காமல், துணைச் செய்திகளைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார், ஆசிரியர். முழுமையடையும் வகையில் பெரிதாக இந்நூலை வெளியிட்டிருக்கவேண்டும் - நிரம்பின ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன்.

அணிந்துரைகளும் மதிப்புரைகளும்

ஜீவபந்து ஸ்ரீபால்; திருத்தக்க தேவர் இலக்கிய மன்றம், சென்னை-1.

திருவாளர் ஜீவபந்து ஸ்ரீபால் அவர்களையும் அவரது தமிழ்ப் பணியையும் தமிழகம் நன்கு அறியும். 'இளங்கோவடிகள் சமயம் யாது?' முதலான அவரது உயர்ந்த ஐந்து நூல்களுக்குத் தமிழகத்துப் பத்திரிகைகளும் தமிழன்பர்களும் அளித்த மதிப்புரைகளின் தொகுப்பே இந்நூல். புதிய முயற்சி. மேற்குறித்த ஐந்து நூல்களையும் ஆரம்பத்திலிருந்து கடைசிவரைப் படிக்கத் தூண்டும் இது என்பது உறுதி.

அழகு ரோஜா

மாப்பஸான்-காரை ஏ.எம். அலி; பிரேமா பிரசுரம், சென்னை - 24; ரூ. 3-0-0.

தமிழிலே ஒரு சிலருக்குக் 'கதை' கொடுத்த வள்ளலான பிரெஞ்சு மேதை மாப்பஸானின் 'பெல் அமி' என்ற பிரசித்தமான நவீனத்தின் மொழி பெயர்ப்பு இது. பொறுமையுடன் படிக்கும் அளவுக்குச் சிரிய முயற்சி எடுத்துப் பணிபுரிந்திருக்கிறார்.

இரு துளிக் கண்ணீர்

கா. அப்பாத்துரை; ஔவை நூலகம், பிராட்வே - சென்னை-1; ரூ. 1-8-0.

தாமஸ் ஹார்டியின் கதை ஒன்றினையும், பிரேம் சந்த் எழுதிய கதை ஒன்றையும் தமிழாக்கித் தந்து, அவை இரண்டுக்கும் புது மாதிரியாக 'இருதுளிக் கண்ணீர்' என்று பெயரிட்டிருக்கிறார் ஆசிரியர். இரு கதைகளையும் சிறப்பான தமிழில் தந்திருப்பவர் பன்மொழிப் புலவர் கா. அ. அவர்கள். கதைகளில் மட்டும் அவரது தமிழ் ஓரளவு சரளமாக்கப்பட்டால்தான் நல்லது.

கலையும் வயிறும்

'அகிலன்'; புதுமைப் பிரசுரம், பெண்ணாடம்; ரூ. 1-8-0.

வின்ஸ்டன் சர்ச்சில் பிரசித்தி பெற்ற எழுத்தாளர். அவர் எழுத்தாளர்களின் பெருமையைப்பற்றியும் அவர்களது வாழ்வின் சிறப்புப் பற்றியும் பல இடங்களில் பேசியிருக்கிறார்; எழுதியிருக்கிறார். கலையையும் வயிற்றையும் இரு துருவமாக்கத் துடிக்கும் அருமைத் தமிழ் நாட்டில் அவை இரண்டையும் ஒன்றெனப் பிணைக்கும் அன்புப் பணியும் தேவையென்பதற்கு இப்புத்தகம் நல்ல எடுத்துக்காட்டு. கட்டுரைகள் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்பு பெற்றிருந்தால் இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும். ★

"சித்தி, சித்தி! என்னைப் பாருங்கோ!''

பாகீரதி கண்களை விழித்து மிரள மிரளப் பார்த்தாள்.

''என்ன சித்தி, என்னைத் தெரியல்லியா? அப்படிப் பார்க்கிறேளே? உங்க பொண்ணு ருக்கு இல்லையா நான்? நீங்க என்னை மறந்தாலும் நான் உங்களை மறக்கலே சித்தி,'' என்றாள் ருக்கு.

பாகீரதியின் கண்களில் நீர் அருவியாகக் கொட்டியது. ''யாரது, ருக்குவா?'' என்றாள் பாகீரதி. மறுபடி நினைவிழந்தாள்.

''ருக்கு, அதற்குள் பேச்சுக் கொடுக்காதே. நன்றாக மயக்கம் தெளியட்டும்,'' என்று சொன்னான் அவள் கணவன் கோபாலன்.

2

அரை மணி நேரம் சென்றபின் பாகீரதிக்கு மயக்கம் தெளிந்தது.

'ஸ்ரீவத்ஸன்'

"என்ன, என் சித்திக்கு ஒன்றுமில்லையே, பிழைத்து விடுவாங்களல்லவா....?"

"ஒண்ணும் அபாயமில்லே ருக்கு. அவளைப் பிழைக்க வைக்க வேண்டியது என் பொறுப்பு. இதோபார். உன் சித்தி கண்ணைத் திறக்கிருள். இனி பயமில்லே."

"சித்தி, சித்தி! இப்போ எப்படியிருக்கு?"

"...ஆ, நான் எப்படி இங்கே வந்தேன்?"

ஆமாம்; நாடகத்தைத் தனித்தனி நாடகப் பாத்திரங்களின் வாழ்க்கை வரலாருகப் பிய்த்து எடுத்துக் காட்டுவதும் நாடகத்தைச் சிதைப்பதாக முடியும். நூல்களின் ஊடாட்டத்திலேயே ஆடையின் அழகு விளங்குவதுபோல—தனி நூல்களிலும் வேருக ஓர் ஒற்றுமை அழகு பொலிவதுபோல-நாடகத்திலும் பாத்திரங்களின் தனி வாழ்க்கைச் சிறப்பினைவிட அவர்கள் வாழ்க்கையின் ஊடாட்டம்தான் சிறப்படைகிறது. —தெ. பொ. மீ.

''என் அதிர்ஷ்டம்தான் உங்களை இங்கே கொண்டு வந்து சேர்த்தது. சித்தி, இதுதான் உங்க பேத்தி பூமா. அசாத்திய விஷமம். இவன்தான் பேரன் குமார். பூமா பூமிக்கு நெருப்பை வச்சா, குமார் ஆகாசத்துக்கு நெருப்பு வச்சுடுவான். அவ்வளவு பரம சாதுக்கள்!''

பாகீரதி ஆச்சரியத்தால் கண்களை மூடி மூடித் திறந்தாள்.

ருக்கு காப்பி கொண்டுவர உள்ளே போனுள்.

3

'' இதோ பார், பாகீரதி. இவதான் உன் மூத்தாள் பெண் ருக்கு. இனிமே நீதான் இவளைக் கவனிச்சுக்கணும். ருக்கு, இதோ பார் உன் சித்தி. எங்கே சித்திக்கு நமஸ்காரம் பண்ணு.''

இருபது வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இப்படித்தான் சுந்தரேசய்யர் தன் மூத்தாள் பெண் ருக்குவைத் தன் இளையாளுக்கு அறிமுகப் படுத்தினர் – பாகீரதிக்கு ஞாபகம் வந்தது.

அப்போது ருக்குவுக்கு இரண்டு வயது. யார் அவளைப் பார்த்தாலும் அள்ளி அணைத்து அப்படியே முத்தமிடுவார்கள். அவ்வளவு அழகு.

பாகீரதியும் ருக்குவிடம் அன்பாய்த்தான் இருந்தாள். அடுத்த வருஷம் பாகீரதிக்கு சாந்தா பிறந்தாள். அதன் பிறகு பாகீரதியின் போக்கு மாறி விட்டது. அதுவுமல்லாமல், சாந்தா கன்னங்கரேலென்று மண்டை பெரியதாகப் பெரிய கண்களுடன் பார்க்க மிக விகாரமாய் இருந்தாள். தன் பெண் தன் மூத்தாள் பெண்ணைவிட அழகில் ரொம்பவும் மட்டம் என்ற விஷயம் அவளுக்கு ருக்குவிடம் ஒருவித அசூயையையும் பொருமையையும் உண்டு பண்ணியது.

ருக்குவைக் காரணமில்லாது கோபித்து வந்தாள். அவள் ஏதாவது செய்தால் 'ஏன் செய்தாய்' என்றும்; செய்யாமல் இருந்தால் 'ஏன் செய்யாமல் இருக்கிருய்' என்றும் பாகீரதி சொல்லுவாள்.

4

''சித்தி, இந்தக் காப்பியைக் கொஞ்சம் சாப்பிடுங்கோ. இந்தக் குழந்தைகள் என்னைப் படுத்தறபாடும் ஒரு நாள் போறதும் எனக்கு யுகமாயிருக்கு,'' என்று சொல்லிக் காப்பியைக் கொடுத்தாள் ருக்கு.

பாகீரதி படுத்தபடியே காப்பியை வாங்கிச் சாப்பிட்டாள்.

'இதுகள் என்னைப் படுத்தரபாடு ஒரு நாள் போறது ஒரு யுகமாய் யிருக்கு' என்று ருக்கு சொன்னதை நினைத்துப் பார்த்தாள்.

5

மூத்தாள் குழந்தையை இளையாள் படுத்துவது உலகத்திலே புதிது இல்லைதான். ஆனால் அவள் ருக்குவைப் படுத்தியது கொஞ்சம் அதிகம் என்றே சொல்ல வேண்டும்.

இவ்வளவு தூரம் படுத்தியும் ருக்கு வாய் திறப்பதில்லை. 'சித்தி, சித்தி' என்று ஒட்டியபடியே இருந்தாள். சாந்தா ருக்குவைச்

சதா படாதபாடு படுத்தி வந்தாள். அப்போதுகூட வாய் திறப்பதில்லை. நல்ல சோறு, நல்ல பாவாடை கிடையாது. ஓர் ஆறுதலானபேச்சும் கிடையாது. சுந்தரேசய்யருக்கு இதையெல்லாம் கவனிக்கப் பொழுது இருந்தால் தானே? இவ்விதம் சித்தியிடம் அவஸ்தைப் பட்டும்கூட புன்முறுவலுடன் ருக்கு இருக்கும்போது அவர்தான் எப்படி பாகீரதியைத் தப்பாக எண்ண முடியும்...?

6

வேலையை யெல்லாம் முடித்துக் கொண்டு ருக்கு பாகீரதியிடம் வந்து உட்கார்ந்து கொண்டு, "சித்தி, உடம்பைப் பிடிக்கட்டுமா?" என்று ஆரம்பித்தாள்.

'இந்தப் படுபாவி ருக்குவை துன்பத்திற்குள்ளாக்கியதற்கு என் உடம்பைப் பிடித்து விடருளாமே? சிறுவயசில் இவள் மென்னியையே பிடித்து வந்த என்னை இவள் ஏன் இப்படி நேசிக்கிருள்?'

"என்ன சித்தி. நீங்கள் ஒரு காரியம் செய்து விட்டு எனக்குத் தெரியாது என்றுதானே நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்ருள் ருக்கு. பாகீரதி திடுக்கிட்டாள். 'அப்படியாளுல்தான் செய்த காரியம் இவளுக்குத் தெரிந்து விட்டதா? அப்படியிருந்துமா என்னை நேசிக்கிருள்?' — பாகீரதியின் மனச்சாட்சி குத்தியது.

"நீ என்ன சொல்றே, ருக்கு? நான் என்ன செய்தேன்?"

"சொல்லட்டுமா?"

"சொல்லேன்." — பாகீரதியின் குரல் 'படபட'வென நடுங்கியது.

"வயத்திலே பொறந்த பெண் மாதிரி நாடகம் நடிக்கிரு. என்ன ஆனுலும் பெற்ற பெண் ஆகமாட்டாள். ரொம்ப கரிசனப்பட்டவ மாதிரி நடிக்கிறதைப் பார். மகா கள்ளி' என்று நீங்கள் என்னைத் தப்பாக நினைக்கிறீர்கள். இப்படி நினைக்கிறதுதான் நீங்கள் செய்த காரியம்.... நான் சொல்றது சரிதானே?"

பாகீரதிக்குப் பெருமூச்சு வந்தது. அது அவளுக்கு ஆறுதல் மூச்சு—'நல்லவேளை, நான் செய்தது அவளுக்குத் தெரியவில்லை.'

7

அவள் ருக்குவுக்குச் செய்த பெரிய அநீதியல்லவா அது? அதை அப்போது எப்படிச் செய்தாள் என்பதை இப்போது நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.

"இதோ பார் பாகீரதி, இப்பவும் என் ஆபீஸிலே ஒரு புது மானேஜர் வந்திருக்கார். நல்ல சுபாவம். நம்ம ருக்குவோட அழகைப்பற்றி கேள்விப்பட்டு எதிர்ஜாமீன்கூட வேண்டாம்னு சொல்லி ருக்குவை கல்யாணம் செய்து கொள்ள ஆசைப் படுகிருர்," என்ருர் சுந்தரேசய்யர். அப்போது ருக்கு கலியாணப் பருவத்தில் வளைய வந்து கொண்டிருந்தாள்.

"சம்பளம் மாதம் இருநூறு ரூபாய். அவர் நல்ல சிவப்பு நிறம். தாயார் தகப்பனுருக்கு ஊரில் நிறைய நிலம் இருக்கு. ஒரே பிள்ளை. வர வர சம்பளம் உயர்ந்து ஐநூறு ரூபாய் கூடப் போகும். பத்தாயிரம் ரூபாய் எதிர் ஜாமீன் கொடுத்துக்கூட யார் யாரோ

ஆரியர் – திராவிடர்

விஜயாலய சோழன் முதல் மூன்ருவது இராஜேந்திர சோழன் வரையில் முன்னூறு ஆண்டு காலம் சோழ சாம்ராஜ்யம் சிறப்புற்று விளங்கிய காலத்தில், தமிழகத்தில் ஆரியர் – திராவிடர் என்ற வேற்றுமையை மக்கள் கனவிலும் கருதியதில்லை என்று அக்காலத்திய கல் வெட்டுகள், செப்புப் பட்டயங்கள் அனைத்திலிருந்தும் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

—'கல்கி'

வந்தார்களாம். அவர் நம் ருக்குவுக்குக் கிடைப்பது ருக்குவின் அதிர்ஷ்டம்,'' என்றார்.

அவர்கள் ருக்குவைப் பார்க்க வந்தார்கள். அவர்களுடைய பணக்கார தோரணையும் நல்ல சுபாவமும் மாப்பிள்ளையினுடைய அழகு–படிப்பு முதலியனவும் சேர்ந்து பாகிரதியின் மனத்தில் ஒருவித அசூயையை உண்டு பண்ணி விட்டது.

'ருக்குவுக்கா இவ்வளவு பணக்கார இடமும் கண் நிறைந்த கணவனும்? என் பெண் சாந்தாவுக்கு இந்த வரன் கிடைக்குமா? கிடைக்காதுதான். என் பெண்ணுக்குக் கிடைக்கா விட்டாலும் ருக்குவுக்கு அந்த வரன் குதிரக் கூடாது'– அவள் மனம் பொறாமைத் தீயால் மூட்டப் பட்டது. அநேகமாக எல்லாம் முடிவாகும் தருவாயில் திடீரென்று கலியாணம் நின்று விட்டது.

"எந்தப் பேயோ, என்னுடைய குழந்தை தலையில் மண்ணை வாரிப் போட்டு விட்டாள். நல்ல வரன் தட்டி விட்டது. என் பெண் ருக்குவுக்கு சித்தஸ்வாதீனம் சரியில்லை என்றும் அடிக்கடி காக்கை வலிப்பு வருவதாகவும் அவள் அழகுக்காக ஆசைப்பட்டு மோசம் போகவேண்டாம் என்றும் எந்தப் படுபாதகியோ சம்பந்திக்கு எழுதிப் போட்டுக் கலைத்து விட்டாள். அது சுத்தப்பொய் என்று எவ்வளவோ சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. இப்படி மொட்டைக்கடிதம் எழுதியவள் உருப்படாமல் போவதுடன் அவள் பெண்ணுக்கும் இதே கதி நடக்க வேண்டும்,'' என்று சாபமிட்டார் சுந்தரேசய்யர்.

எப்படியோ ருக்குவுக்கும் ஏழை கம்பவுண்டர் கோபாலனுக்கும் திருமணம் நடந்தது.

சாந்தா பெரிய இடத்து மாட்டுப்பெண் ஆனாள்.

8

"அப்பா செத்துப் போனபோது, உங்களைப் பார்த்தது; நான் போட்ட கடிதங்களுக்குப் பதில்கூடப் போடவில்லையே சித்தி....?'' என்று ஓர் ஆரஞ்சை உரித்துக் கொடுத்தாள் ருக்கு.

'ஆமாம், பாகீரதி பதில் போடவில்லைதான். அப்பா செத்துப் போயாச்சு, இன்னும் என்ன சித்தி உறவு? நானைக்குப் பிரசவம் என்று சொல்லி இங்கே வரவா? என்னிக்கு அவர் செத்துப் போனாரோ அன்றே உறவு விட்டு விட்டது' என்று எண்ணினாள் பாகீரதி.

"என்னமோ போலே இருக்கு ருக்கு. அப்புறம் நிறையப் பேசுவோம். சித்த தூங்கறேன்,'' என்றாள் பாகீரதி.

தூக்கம் வரவில்லை. கண்ணை மட்டும் மூடிக் கொண்டாள் பாகீரதி.

9

ஐந்து ஆண்டுகளிலே எவ்வளவு சம்பவங்கள்! – கணவன் இறந்த பிறகு வீடு வாசலை விற்று விட்டு சாந்தாவிடமே போய் விட்டாள் பாகீரதி. வீடு விற்ற பணத்தைத் தன் மகள் சாந்தாவிடமே கொடுத்து விட்டாள்.

ஒரு வருட காலம் சென்றது. சாந்தாவும் அவள் கணவனும் டாம்பீகமாக வாழ்ந்து வந்தார்கள். பாகீரதி வீட்டில் இருந்தது பிடிக்கவில்லை அவளுக்கு. அவளைச் சமையற் காரியாக நடத்தினார்கள்.

அவர்கள் அவளை வெறுத்தது மல்லாமல் வீட்டை விட்டே துரத்தும் அளவுக்கு வந்துவிட்ட நிலைமையைக் கண்டு அங்கிருந்து புறப்பட்டாள் பாகீரதி. பெண்ணாவது மண்ணாங்கட்டியாவது என்று வாழ்க்கையில் சலிப்பு ஏற்பட்டு விட்டது.

அதன் பிறகு அவள் கிராமத்தில் தன்னுடைய தாயார் வீட்டுக்குப் போய் விட்டாள். அங்கு மூன்று வருஷங்கள் இருந்தாள். அவள் தாயாரும் இறந்து விட்டாள். இவளும் படுத்த படுக்கையானாள். அப்பொழுதுகூட சாந்தா வரவில்லை.

அவள் கணவனுக்கு மேலைநாட்டில் ஆறு மாதம் பயிற்சி; அவனுடன் அவளும் போய் விட்டாள்.

சென்ற ஒரு வாரமாகவே பாகீரதியின் மனத்தில் ஒருசபலம். ருக்குவுக்கு தான் இழைத்த கொடுமைக்குத்தான் கடவுள் தன்னை இப்படி தண்டிக்கிறார் என்று நினைத்தாள். அவள் மனம் அவளைச் சுட்டது. எப்படியும் ருக்குவிடம் போய் மன்னிப்பு கேட்பது என்று தீர்மானித்து அவள் விலாசத்தைக் கண்டு பிடித்து அங்கு போனாள். அவள் கணவன் மறுபடி வைத்தியக் கல்லூரியில் படித்து டாக்டராகி யிருப்பதாகத் தெரிந்து கொண்டாள்.

அன்று அவள் வீட்டை அடையாளம் கண்டுபிடித்து வாசற்படி அருகில் போனபோது திடீரென்று மயக்கம் போட்டு விழுந்தாள். யாரோ நோயாளி என்று நினைத்து ருக்குவின் கணவன் அவளை உள்ளே கொண்டுபோய்ச் சேர்த்தான். அதே சமயம் அங்கு வந்த ருக்கு அவளைத் தன் சித்தி எனக் கண்டு கொண்டாள்.

10

"ருக்கு, நீ தெய்வப் பெண். நான் செய்த கொடுமைக்கு நீ என்னிடம் காட்டும் அன்பு கடவுளுக்கே பொறுக்காது!" – அழாக்குறையாகச் சொன்னாள் பாகிரதி.

"பேசாமல் இருங்கோ, சித்தி. இன்றைக்கு நான் நன்றாயிருப்பது உங்களால்தானே? தாயாரில்லாத என்னை இரண்டு வயது முதல் பதினெட்டு வயது வரை ஆளாக்கியது நீங்கள்தானே ....? என்னை நீங்கள் கொடுமையாக நடத்தியதாக நீங்கள் ஏன் தப்பாக நினைக்கிறீர்கள்? நீங்கள் என்னைக் கண்டிப்பாக நடத்தியதால்தான் நான் இன்று வாழ்க்கையில் வெற்றி காண்கிறேன். உங்களை நான் நினைக்காத நாளே இல்லை. ஆனால் நீங்கள்தான் மறந்துவிட்டீர்கள்," என்றாள் ருக்கு. அவள் கண்களில் நீர் துளித்தது.

"உனக்கு நான் செய்த கொடுமைக்கு சிகரம் வைத்தாற்போல் நான் செய்த ஒரு காரியம் உனக்குத்தெரிந்தால், உன் மனம் என்ன பாடுபடும், தெரியுமா? நான் மட்டும் அந்தக் காரியம் செய்யாதிருந்தால் இன்று நீ ஆயிரம் ரூபாய் சம்பள உத்தியோகஸ்தர் மனைவியாய் பங்களா–கார் வைத்துக் கொண்டு உன்னத ஸ்திதியில் இருந்திருப்பாய்! உனக்கு வரவிருந்த கணவனுக்கு உன்னைப் பற்றி மொட்டைக் கடிதம் எழுதியது இந்தப் பாவிதான். இப்படியும் செய்திருப்பேனா என்று நினைக்காதே. மூத்தாள் பெண் என்ற அசூயை என்னை அப்படிச் 'செய்யத் தூண்டியது," என்றாள் பாகிரதி.

"சித்தி, இதன் மூலம் நீங்கள் எனக்குச் செய்திருக்கும் உதவிக்கு நான் எவ்வளவு ஜென்மம் எடுத்து உங்களுக்கு உழைத்தாலும் ஈடாகாது. ஆம்; அது உங்களுடைய உதவிதான். என்னை ஏழையாகப் பார்த்தாலும் சுமங்கலியாகப் பார்க்க முடிகிறது. தாங்கள் மட்டும் அப்படிப்பட்ட காரியம் செய்யாதிருந்தால், இன்று என் நிலைமை சொல்லவே....வாய் கூசுகிறதே....!" என்றாள் ருக்கு.

"நீ என்ன சொல்றே ருக்கு?" என்று பரபரப்புடன் கேட்டாள் பாகீரதி.

"எனக்கு முதன் முதல் பார்த்த வரன் நாலு வருஷம் முந்தி ஆபீஸ் சம்பந்தமாக வெளிநாடுகளுக்கு ஆகாய விமானத்திலே போனபோது விபத்தில் உயர் துறந்து விட்டார். நீங்க கேள்விப்படவில்லையா?" என்றாள் ருக்கு.

'தெய்வமே, நான் ருக்குவுக்குச் செய்த தீவினை கடைசியில் நல்ல உதவியாகவே வாய்த்து விட்டது. எல்லாம் உன் கருணை!' என்று சொல்லியவாறு ஆனந்தக் கண்ணீர் பெருக்கினாள் ருக்குவின் சித்தி பாகிரதி. ★

உருவகக் கதை :

ஏன் வளர்ந்தாய் தென்னை மரமே!

அ. இராமமூர்த்தி

காவிரிக் கரையில் விண்ணை நோக்கி நிமிர்ந்து கம்பீரமாக நின்ற ஒரு தென்னை மரம் தன் கூந்தற் கற்றையைக் காற்றிலே அலசி ஆனந்தமாக ஆடிக்கொண்டிருந்தது. கொஞ்ச தூரத்தில் நாணற் புல் ஒன்று காற்ருேடு உறவாடி ஒயிலாக அசைந்தாடியது.

தென்னை அந்த நாணலை உற்றுப் பார்த்தது—இன்னும் அதன் ஆனந்தத் தாண்டவம் ஓயவில்லை. "ஏ, அற்ப நாணற்புல்லே! வானை யளாவும் என் கம்பீர உருவத்தைப் பார். என் பசுந்தோகையின் எழிலைப் பார். என் பச்சைக் கூந்தலிலே பறவையினம் அமர்ந்து பாட்டொலித்து எனக்கு இசை விருந்திடுவதைப் பார். என்னை நம்பி எத்தனை மானிடக் குடும்பங்கள் வாழ்கின்றன, பார். என்னால் தான் இந்தக் கரையே அழகு பெறுகிறது. என்னால் இந்த உலகம் எவ்வளவோ பயன் பெறுகிறது. ஆனால் உன்னால் உலகத்தில் யாருக்கும் ஒரு பயனுமில்லை....! இவ்வளவு மகத்துவம் கொண்ட என்னோடு வெறும் அற்ப புல்லான நீ போட்டி போடுவதா....? என்னோடு போட்டி போட உனக்குத் தகுதியோ திறமையோ இல்லையே!" என்று தென்னை கர்வச் செருக்கோடு கோபக்குரலிலே சொல்லியது.



பொறுமை நிறைந்த நாணலோ எதிர்த்து ஒன்றும் பேசவில்லை; ஆட்டத்தை நிறுத்திவிட்டு அமைதியாக இருந்தது. பொன்னி நதியிலே புது வெள்ளம் பொங்கிப் புரண்டோடிக் கொண்டிருந்தது. சுழித்தோடும் புதுப்புனல் தென்னையின் தூரிலிருந்த மண்ணைக் கொஞ்சங் கொஞ்சமாக அரித்துத் தென்னையைக் கீழே சாய்த்து விட்டது! அந்தக் கரை வழியே வந்த இருவர் சாய்ந்து கிடக்கும் தென்னை மரத்தைப் பார்த்தார்கள். "இந்தத் தென்னை மரம் இருந்த இடத்திலும் நாணற் புல் இருந்திருந்தால் இந்தத் தென்னை மரம் கீழே விழாமல் காப்பாற்றப் பட்டிருக்கும்," என்ருன் ஒருவன்.

"இந்த நாணற்புல் மாத்திரம் இங்கு இல்லாமலிருந்தால், இரு கரைகளுமே கரைந்து எல்லாத் தோப்புக்களும், பயிர்கள் நிறைந்த வயல்களும் அழிந்து போய் மனித சமுதாயத்திற்குப் பெருத்த இழப்பு ஏற்பட்டிருக்கும். பார்ப்பதற்கு அற்பப் புல்லாய்த் தோன்றினும் அதன் சக்தி பெரியதுதான்," என்ருன் மற்றவன்.

சாய்ந்து கிடந்த தென்னையின் காதில் இந்தச் சொற்கள் அலை மோதின. அதன் மமதையும் கர்வமும் அழிந்தொழிந்தன. 'ஆம்; நாணற்புல் அற்பமாகத் தோன்றினும் அதன் சக்தி மகத்தானதுதான்; அதன் உதவி யிருந்திருந்தால், நான் இந்தக் கதிக்கு ஆளாகியிருக்க மாட்டேன்' என்று எண்ணியது. கண்ணீர் விட்டது. ★

பலகணிகளைத் திறந்தேன். வாடைக் காற்று என் முகத்தில் வீசியது. உஷ்ணத்தால் தகித்துக் கொண்டிருந்த என் உள்ளத்திற்கு இதை உணரச் சக்தி ஏது?

"இந்தாப் பாருங்க, குமுதாவுக்குக் காலையிலேயிருந்து காய்ச்சல் அடிக்குது. நானும் எனக்குத் தெரிஞ்ச நாட்டு வைத்தியமெல்லாம் செஞ்சு பார்த்திட்டேன். நிற்கவே இல்லை."

என் மனைவி மீனா பேச்சை முடிக்கவில்லை. சிறகிழந்த பறவையின் நிலையானது என் நெஞ்சு.

"மீனாவுக்கு ஜுரமா? இப்ப என்ன செய்யறது? இங்கேருந்து அறந்தாங்கி ஆறுமைல் இருக்கே? பஸ் எதுவும் இல்லையே? எப்படிப் போறது?"

"நம்ம அடுத்த தெருவிலே கம்பவுண்டர் ஒருத்தர் வந்திருக்காரு. அவர் ஏதோ மருந்தெல்லாம் கொண்டாந்து ஆஸ்பத்திரி மாதிரி வச்சிருக்காரும்; அவருகிட்டே பிள்ளையைத் தூக்கிக்கிட்டுப் போங்க."

பகல் முழுதும் உளியும், சுத்தியலும் கொண்டு வேலை செய்துவிட்டு அலுப்புடன் வீட்டிற்குள் வந்த நான், என் ஒரே மகளின் கஷ்ட நிலையைக் கண்டவுடன், கல் தரையில் விழுந்த கண்ணாடித் தம்ளரின் தன்மையை அடைந்து விட்டேன். என் மனம் என்னவெல்லாமோ எண்ண ஆரம்பித்து விட்டது. பிறந்த உடனே பெற்ற தாயைப் பறிகொடுத்த என் குமுதா—ஊரே அதிசயிக்கும் வண்ணம் சித்தியின் அரவணைப்பிலே செல்வமாக வளர்ந்த என் குழந்தை—இந்தப் பயங்கரமான விஷ ஜுரத்துக்குப் பலியாகிவிட்டால்....?

நினைக்கையிலே என்னுடைய நெஞ்சு வலித்தது; விம்மிற்று.

குமுதாவை அணைத்த வண்ணம் என் மனைவி என்னை நோக்கி வந்து கொண்டிருந்தாள். அவள் கண்களும் முகமும் ஏககாலத்தில் என்னைக் கெஞ்சின.

* * *

"கம்பவுண்டர் ஐயா!...."

"யார், சிற்பி வேலாயுதமா? விளக்கு வைக்கிற நேரத்திலே வந்திருக்கிறுயே, என்ன விசேஷமோ...?"

"பிள்ளைக்கி ரொம்ப முடியலே; நீங்கதான் காப்பாத்தணும்."

"பணம் கொண்டு வந்திருக்கிருயா?"

"என் நிலைமை உங்களுக்குத் தெரியாதுங்க. எட்டியத்தாளி சிவன் கோவிலுக்கு ரெண்டு சிலை அடிச்சுக் கொடுத்திருக்கிறேனுங்க; மாதக் கடைசியிலே பணம் வரும். வந்ததும் தந்துடுவேன்."

"சிலை"—இந்த இரண்டெழுத்து வார்த்தை கம்பவுண்டர் கந்தசாமியின் உள்ளத்தில் புது வெள்ளம் போல் பாய்ந்தது.

"பரவாயில்லை வேலாயுதம், வந்து பார்க்கிறேன்."

பல பேர்களின் உயிரை எமனிடமிருந்து கைப்பற்றியும், எமனுக்கு அனுப்பியும் அனுபவசாலியான அவர் வாயிலிருந்து கருணைத் தொனியோடு நல்ல வாக்கு வந்தது. நான் மெய்ம்மறந்தேன்.

முருகன் முன் நிற்க!

'வேதியன்'

அன்பு காட்டியவன் பண்பு காட்டவில்லை; சுயநலம் காட்டிய வழி அவனைச் சட்டத்தின் நுழை வாசலில் நிறுத்தியது...!



என்னால் இந்த அதிர்ச்சியைத் தாங்க முடியவில்லை. கோர்ட்.. சுப்பிரமணியர்... சிலை! — எதையுமே அறியாத நான் பொய்ச் சாட்சி சொல்வதா?.... என் மனசை ஏமாற்ற என்னால் முடியுமா? என் வாயிலிருந்து எந்த வார்த்தையும் வெளி வரவில்லை.

குழந்தை குமுதாவுக்கு அதிகக் கவனமாகச் சிகிச்சை செய்தார். ஒரு ஊசியும் போட்டார்.

குமுதாவின் முகத்தில் ஜீவகளை தோன்றியது.

என்னுடைய தந்தை மனம் நிம்மதி பெற்றது.

''வேலாயுதம், உன்னாலே எனக்கு ஒரு காரியம் ஆகணும்,'' என்றார் கம்பவுண்டர்.

''என்னாலேயா? என்ன வேணும்னாலும் சொல்லுங்க; ஒரு நொடியிலே முடிச்சுடுறேன்.''

''வேலாயுதம், நான் சொல்வதைக் கொஞ்சம் கவனமாகக் கேள்....எனக்கு நீ ஒரு சின்ன உபகாரம் செய். அதனாலே உனக்கு எந்தக் கஷ்டமும் இல்லை. நிறையப் பணம் தருகிறேன். உன் மகளையும் காலணாக்கூடச் செலவில்லாமல் காப்பாத்தித் தருகிறேன்,''—கம்பவுண்டர் பேச்சு என் இதயத்திலே தேனைப்பாய்ச்சியது.

''சொல்லுங்க, ஸார்!''

''இன்னும் பத்து நாளிலே அறந்தாங்கி மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டிலே எனக்கு ஒரு ஈரங்கி இருக்கு. அப்போது என் வக்கீல் உன்னை ஒரு கேள்வி கேட்பாங்க; அதற்கு நீ 'ஆமாங்க, அந்த சுப்ரமணியர் சிலையை நான் மட்டும் தாங்க செய்தேன்' என்று மட்டும் நீ சொல்லிவிடு; நான் பிழைத்துவிடுவேன்!''

''என்ன வேலாயுதம், அடிச்சு வச்ச சிலை மாதிரி ஆயிட்டியே?''

''இல்லேங்க, நாளைக்கு வந்து முடிவு சொல்றேன்.''

'கம்பவுண்டருக்கு என்ன முடிவு சொல்வது? பெரிய மனிதரின் கோபத்திற்கு ஆளானால் என் குடும்பத்துக்கே ஆபத்தாயிற்றே! அப்பால் குழந்தையின் கதி....? அதற்காக கண்ணால் காணாததை—ஏன், காதால்கூடக் கேட்டறியாததை நானே செய்ததாகப் பொய் சொல்வதா? நான் நித்தம் வணங்கும் அன்னை அகிலாண்டேஸ்வரி மீது ஆணையாகப் பொய்ச் சாட்சி சொல்வதா? முடியாது!'—என் மனம் மேற்கண்ட தீர்மானத்தைச் செய்தது. நிம்மதி பிறந்தது.

* * *

''சார்.... சார்....!''

''என்னப்பா, பிள்ளைக்கு உடம்பு எப்படி இருக்கு?''

''கொஞ்சம் தேவலாமுங்க; மருந்து வாங்கிட்டுப் போகலாம்னு வந்தேன்!''

''நேற்று நான் சொன்னதை யோசிச்சியா?''

''நெனச்சுப் பார்த்தேனுங்க; எம் மனசு இடந்தாலே; ஏதாச்சும் உளறிடுவேனுங்க. என்னை நீங்க மன்னிச்சுடுங்க, எஜமான்!''

என்னைக் கண்டதும் புன்முறுவல் பூத்த அவர் முகம் என் பேச்சைக் கேட்டதும் ஏன் கூம்பி விட்டது?

கம்பவுண்டர் ஏதோ சிந்தனை பண்ணினார். நர்ஸைக் கூப்பிட்டார். பிறகு போகச் சொல்லி விட்டார்.

"வேலாயுதம், சரி, பரவாயில்லை. நீ வீணாகச் சிரமப் படாதே. குழந்தைக்கு இதைக் கொடு. குடித்ததும் குணமாகி விடும்."

கந்தசாமி இவ்வாறு சொல்லி விட்டு மருந்தைக் கலந்து என்னிடம் நீட்டினார். நான் அவரை வணங்கிப் பிரிந்தேன்.

குமுதா மாறி மாறி என் நினைவில் தோன்றிக் கொண்டே இருந்தாள்!

* *

"மீனா, மீனா! பிள்ளைக்கி இந்த மருந்தைக் கொடு," என்று சொன்னேன். வாங்கி வந்த மருந்தை என் மனைவியிடம் கொடுத்துவிட்டு உடனே கொல்லைப் பக்கம் சென்று விட்டேன்.

அமைதியாக, மன நிறைவுடன் முகம் கழுவிக் கொண்டிருந்த நான் மறு விநாடி என் மனைவியின் பரிதாபமான கூச்சலைக் கேட்டுத் திரும்பினேன்.

"என்னங்க, இந்தாப் பாருங்க; மருந்தைக் குடிச்சதும் குமுதாவின் முகம் ஏன் இப்படிச் சுருங்கிப் போச்சு? வந்து பாருங்க...ஐயோ, எனக்குப் பயமா இருக்குதே!"

எனக்கு ஒன்றுமே புரியவில்லை; தலை சுற்றியது.

கிராம சுகாதார அதிகாரிக்கு ஆள் அனுப்பினேன். அவரிடம் விவரம் பூராவையும் நான் விளக்கினேன்.

"விஷம்....! அந்தப் பாவி கம்பவுண்டர் உங்க மகளுக்குக் கொடுத்த மருந்திலே விஷத்தைக் கலந்து

இனாம்

எங்கள் கருங் கூந்தல் தைலம் நெ. 501 உபயோகிப்பதன் மூலம் எல்லாவித மான கேசமும் நன்கு கருத்து, எப்பொழுதுமே கருமையாக வளரும். இது மயிர் உதிர்வதைத் தடுத்து, நீண்டு கருகருவென்று சுருண்டு வளரச் செய்கிறது. ஒரு சீசா விலை ரூ. 1-94. முழு உபயோகத்திற்கும் தேவையான 3 சீசாவின் விலை ரூ. 5|-. இந்த அற்புத தைலத்தை பிரபலப்படுத்துவதற்கென, அழகிற்கும் உறுதிக்கும் 15 வருஷ உத்தரவாதம் பெற்ற ஓர் அழகிய பான்ஸி கை கடியாரமும், ஒரு மோதிரமும் (நியூ கோல்ட்), 3 சீசா வாங்குபவர்களுக்கு 6 பான்ஸி கை கடியாரங்களும் மற்றும் 6 மோதிரங்களும் (நியூ கோல்ட்) முற்றிலும் இலவசமாக அளிக்கப்படும். திருப்தி இல்லையேல் பணம் வாபஸ்.

AMRIT PHARMACY, (U.M.) Jullundur City.

கொடுத்திருக்கிறான் போல் இருக்கு,'' என்றார் அவர்.

அந்தக் கம்பவுண்டர் இஷ்டப்படி நான் பொய்ச் சாட்சி சொல்லவில்லையென்று உயிருக்குயிரான என் குழந்தை குமுதாவின் உயிரைக் குடித்து விட்டானே பாவி? முருகா....! இதுதான் உன் விளையாட்டா?

குட்டியை இழந்த பெண் புலி போல் வேதனையோடு உறுமிக் கொண்டிருந்தேன் நான்.

மீனா அழுதாள்; நான் அழுதேன். குமுதா மாத்திரம் கண்களைத் திறக்கவில்லை. அப்போது அந்தக் கம்பவுண்டரிடம் வேலை பார்த்துக் கொண்டிருந்த நர்ஸ் ஓடோடி வந்தாள்.

''ஐயா, சற்றுமுன் உங்களுக்காக கம்பவுண்டர் விஷம் கலந்த மருந்தைத்தான் கலக்கியிருந்தார்; உங்களிடம் அவர் வந்து என்னமோ பேசியபோது, நான் அதை தூர ஊற்றி விட்டு, உரிய மருந்தைக் கலக்கி முன்போல வைத்து விட்டேன். முன்னால் கலந்த விஷத்தில் அடியில் ஏதாவது தங்கியிருக்கும்; அதனால்தான் குழந்தை இப்படி மயக்கமாயிருக்கிறது. கவலைப்படாதீர்கள். பிழைத்து விடும் குழந்தை....'' என்றாள் நர்ஸ்.

மறு பத்தாவது நிமிஷம் என்னுடைய அருமைக் குழந்தை குமுதா கண் திறந்தாள்.

நானும் மீனாவும் அந்தப் பெண் தெய்வத்தின் பாதங்களில் விழுந்து வணங்கினோம்.

* * *

அடுத்த விநாடி—

போலீஸ்காரர்கள் இரண்டு பேர், கம்பவுண்டர் கந்தசாமி பின் தொடர அங்கே தோன்றினார்கள்.

என் கண்களை என்னால் நம்ப முடியவில்லை. என்ன அதிசயம் இது ....?

''ஐயா, வேலாயுதம்! என்னை மன்னிப்பீரா?...உம் குழந்தைக்கு நான் விஷம் கலந்து கொடுத்து விட்டேன். நீர் எனக்காகப் பொய்ச்சாட்சி சொல்ல மறுத்ததனால் ஆத்திரம் கொண்ட நான் அப்படித் தவறாக நடந்து கொண்டு விட்டேன். நான் செய்த அநீதிக்கு-பாவத்துக்கு ஆண்டவன் தக்க தண்டனை கொடுத்து விட்டான்...! ஐயோ, உம் குழந்தைக்கு நான் எப்படி ஈடுகொடுக்க முடியும்?'' என்று கதறினார் கம்பவுண்டர்.

அவருடைய கரங்களை அலங்கரித்த விலங்குகளில் அவர் வடித்த கண்ணீர் காணிக்கையாகிக் கொண்டிருந்தது.

'முருகன் முன்னிற்க' என்ற எழுத்துக்கள் அச்சமயம் கம்பவுண்டர் கந்தசாமியைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தன! ★

கற்புக்கரசி

நம் நாட்டுக்குப் பயனளிக்காத ராஜா—ராணிக் கதைகளுக்கும், சமூகத்திற்குத் தேவையில்லாத மந்திர தந்திரக் கதைகளுக்கும் மக்களிடையே மறுபடியும் வரவேற்பு இருக்கிற தென்பதைப் படத் தயாரிப்பாளர்கள் புரிந்து கொண்டாலும் புரிந்து கொண்டார்கள்; அப்பப்பா, வாயில் நுழையாத பெயர்களுடன் ஏகப்பட்ட படங்களைத் திரையிட்டு, நம் பொறுமையையும் சோதித்து வருகின்றனர்.

சில படங்கள் ரசிகர்களிடம் நல்ல 'மார்க்' வாங்கிக் கொண்டன. 'வணங்காமுடி', 'மணாளனே மங்கையின் பாக்கியம்' ஆகிய இரண்டையும் மேற்படி பட்டியலில் சேர்க்கவேண்டும்.

இதுவரைத் தமிழ்த்திரைப் படத்தில் வந்து போன சம்பவங்கள் சில 'ம. ம. பாக்கிய'த்தில் அங்கங்கே நாசூக்காகக் கையாளப்பட்டிருக்கின்றன. நம்பமுடியாத கதை; என்றாலும் இப்படத்தில் ஒரு நம்பிக்கை வைத்து விட்டார்கள் ஆதரவாளர்கள். நன்றாக ஓடுகிறது படம். 'க. க. தெய்வத்'தின் சாயலைக் கொண்டிருந்தாலும், அந்த அளவுக்கு உருக்கமாக இதில் கதை அமையவில்லை. திரு ரெஹ்மானின் காமிராத் திறமை படம் பூராவிலும் வெகு அற்புதமாகப் பளிச்சிடுகின்றது.

இப்படத்தில், இயற்கைத் தன்மை அடிவானத்திற்கப்பால் சென்று விட்டது. திரு ஜெமினி கணேசனைவிட திருமதி அஞ்சலி தேவிக்கு வேலை அதிகம். சொந்தப் படம் அல்லவா....?

'கற்புக்கரசி' ஜூபிடர் முத்திரை பெற்றது.

அரசன் ஒருவன். அவன் ஏழைப் பெண் ஒருத்தியைக் கண்டதும் காதலித்ததுடன் நின்றுவிடாமல், நல்ல வேளை அவளைக் கல்யாணமும் செய்து கொள்கிறான். ஓரகத்தியின் மகள் பெருவாழ்வு வாழ,

பாசம் இதழ் விரித்துக் கண்ணீர் சிந்துகிறது; பண்படுகிறது....!
சம்பூர்ண ராமாயணம் — சிவாஜி, ராமாராவ்

காதற் கள்வனா இவன் ?.... இல்லை, நீலமலைத் திருடன் !
நீலமலைத் திருடன் — ரஞ்சன், பாலையா, தேவர்.

கண்ட பலன். திரை மறைவு நாடகம் மன்னனுக்கு அம்பலமாகிறது. தன் சொந்த ராணியைக் கண்டு கொள்கிறான். ராணி பெற்றெடுத்த மகன்—உண்மையான அரசிளங்குமரன் — கிரீடத்தை மட்டுமல்ல, மந்திரி குமாரியையும் அடைகிறான்.

மணிமுடி தரித்த வேந்தனாக திரு எம். கே. ராதா தோன்றுகிறார். குறைவான பங்கில் நிறைவுடன் நடித்திருக்கிறார். அவரது ராணியாக நடிக்கும் திருமதி ஜி. வரலக்ஷ்மியின் பாகம் அதிகம். இரட்டை வேஷங்களில் இரு வேறு மாறுபட்ட சமயங்களில் அவர் நன்றாகவே நடித்திருக்கிறார். தமிழ் உச்சரிப்பு மட்டும் இன்னமும் பண்படவில்லை.

தன் சொந்தப் பெண் ஏழ்மை நிலையிலேயே உழல்வதா என்ற வழக்கமான பொறுமைக்கு மந்திரவாதி ஒருவனால் தூபம் இடப்படுகிறது. புதிய ராணியின் சித்தியும் மந்திரவாதியும் சுயநல நோக்கத்திற்கு அடிமைகளாகிறார்கள். உருமாற்ற வேலைகள் நடைபெறுகின்றன. இளையாள் மகள், ராணியின் தோற்றம் பெறுகிறாள்; அவளுக்கு அரியணை கிடைக்கிறது; ராணி தன் சித்தி பெண்ணாக மாற்றப் படுகின்றாள். காலத்தின் ஓட்டத்துடன் சாபங்களும் இடம் பெறுகின்றன. மந்திரவாதி உலகத்தையே கட்டியாளப் படாத பாடு படுகின்றான்; கடைசியில் தோல்விதான்

திரு ஜெமினி கணேசனும் திரு நம்பியாரும் அரசகுமாரர்கள். ஜெமினியும் திருமதி சாவித்திரி

பிரிந்தவர்கள் கூடுகிறார்கள்; பேசவும் செய்கிறார்களே !...
சந்திப்பு— மனோஹர், எம். என். ராஜம், பி. எஸ். சரோஜா

யும் எதிர்பார்த்தபடி சிறப்பாகவே நடித்திருக்கிறார்கள். கத்திச்சண்டை கட்டங்களில் ஆங்கில நடிகரைப்போல் சிறப்புற நடித்திருக்கிறார் கணேசன். நம்பியார் 'வில்லன்'. ஆகவே, இவரைப் பற்றிப் புதிதாகச் சொல்ல என்ன இருக்கிறது?.... இன்னொரு முக்கியமான விஷயம். அதாவது, திரு தங்கவேலு 'கற்புக்கரசி'யில் 'ஓவராக' நடித்துப் பேசியிருந்தும், நாம் ஓரளவு பொறுத்துக் கொள்ள முடிகிறது. ஏனென்றால், இவர் வரும்போதுதான் ஒரே ஆரவாரமாக இருக்கிறது. கடமை உணர்ச்சி மிக்கவர். பார்ப்பவர்களைச் சிரிக்க வைக்கிறார். திருமதி ஈ. வி. சரோஜா கற்பகக் கனியாக வந்து ஒயிலாக நடனமாடுகிறார். மந்திரவாதியாக நடித்த ஆர். பாலசுப்பிரமணியம் கச்சிதமாக நடித்துள்ளார்.

கவிச்சக்கரவர்த்தி மகன் அம்பிகாபதிக்குக் காதற் புராணம் புனையத்தானா தெரியாது!

அம்பிகாபதி — சிவாஜி, பானுமதி.

திரைக்கதை-வசனம் டைரெக்டர் சாமி, ஆசிரியர் ராமனாதன் இருவர் பேனாக்களுக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பண்பட்ட எழுத்துத் திறமை பூண்ட இவ்விருவர்களின் முத்திரைகள் அற்புதமாகப் பதிந்திருக்கின்றன.

படத்தின் முற்பகுதியில் கதை ஓடவில்லை. கதையின் நீளத்தைக் குறைத்திருந்தால் இன்னும் விறுவிறுப்பாக இருந்திருக்கும். காலஞ்சென்ற ஸ்டண்ட் பலராமனின் திறமை கத்திச் சண்டைகளில் நன்கு தெரிகிறது.

தயாரிப்பாளர் திரு சோமு அவர்கள் மீண்டும் ஜூபிடரின் சிறப்பை …ர்த்த இப்படத்தை வெற்றிப் படமாக மு[illegible]திருக்கின்றார். — 'பைரவி'

சதிக்குச் சதி! – பாவம், மந்திரவாதி மீளுகி…

கற்புக்கரசி — எம். என். நம்பியார்.

ஒளி மீண்டது!

அ. வேதாசலம்

விளக்கை ஏற்றி வைத்தாள்; விதிக்கு வந்தாள்; இருளைக் கிழித்துக்கொண்டு எட்டின மட்டும் விழிகளைப் பாய்ச்சினாள். நல்லம்மாவுக்குப் பார்வை பூத்துப் போயிற்று. இன்னும் காணோமே நடேசனை?

வானம் வேறு உறுமியது. நிம்மதியை இழந்து தவிக்கும் மனிதனைப் போல இருண்டு அழுதது அது. அதிலே கண்ணைக் கவரும் தெளிவு இல்லை, மின்னிச் சிமிட்டும் மீன்கள் இல்லை. நெஞ்சைத் தின்னும் சஞ்சலம் மாதிரி அவற்றை மென்று விழுங்கியது மேகப் பாம்பு!

மழைக்காற்று வீசியது. கோலமாவை வாரி இறைக்கும் குழந்தை மாதிரி நீர்ப் பொடிகளைத் தூவிச் சிலிர்த்தது அது. அதற்கும் சற்றுத் துணிச்சல்; ஓங்கி அடித்தது. அதனை எதிர்த்து நிற்க முடியுமா? அணைந்து போயிற்று விளக்கு!

''இருட்டுத் தெரியல்லே ... ஊம்....!''

''எங்கேம்மா நிற்கிறே?''

''ஐயோ! ஓடிவாம்மா; பயமா இருக்கே!''

வீட்டிற்குள் விளையாடிய குழந்தைகளின் கூக்குரல் இது. நல்லம்மா உள்ளே வந்தாள்.

''இதோ நெருப்புப் பெட்டிம்மா,'' என்றான் மூத்த பையன். அதை வாங்கி விளக்கை ஏற்றினாள் அவள்.

சுடர் மீண்டது; இருள் செத்தது; ஒளி சிரித்தது; குழந்தைகளும் சிரித்தனர்; ஆனால் நல்லம்மா....? அவளது நினைவு பின்னால் திரும்பிப் பார்த்தது.

காலையிலேயே ஒரத்தநாட்டிற்குப் புறப்பட்டான் நடேசன்— தீபாவளிக்குச் சாமான் வாங்கி வரத்தான். அப்போதே கணவனுக்கும் மனைவிக்கும் சண்டை.

''அடுத்த வீட்டுச் சாலாட்சிக்கு 'அம்மாப் பேட்டையான் சேலை' எடுத்திருக்கிறாக,'' என்றாள் நல்லம்மா.

நடேசன் பதில் சொல்லவில்லை.

''போன வருசம் தீபாவளிக்குத்தான் என்னைச் சும்மா வச்சுட்டியே!''

''அதுக்கு என்ன இப்போ?'' வெறுப்பை உமிழ்ந்தான் நடேசன்.

"இப்போ, எனக்கும் ஒரு 'அம்மாப் பேட்டையான் சேலை' வேணுங்கிறேன்."

"பணம் எங்கே இருக்கு?"

"எங்கே இருக்குமோ? கண்டிப்பா எனக்குப் புடவை வாங்கி வரணும்."

"வாங்கி வராட்டி என்ன பண்ணுவே?"

"தீவளி தீவளிதான்...! நான் இன்னிக்கே இப்பவே எங்க ஆயா வீட்டுக்குப் போயிருவேன்."

"ஊம்... போவே, போவே!.... அதையுந்தான் பார்க்கலாமே!" நடேசனின் கடுமையான குரல் இன்னும் நல்லம்மாவின் காதில் ஒலித்தது.

கொஞ்ச நேரத்திற் கெல்லாம் மழை கொட்டியது. 'சடசட' வென்று வண்டியில் இருக்கும் சரளைக் கற்களைக் கீழே தள்ளினால் ஏற்படும் இரைச்சல்.

இன்னும் வரவில்லை நடேசன்.

நல்லம்மா பெருமூச் செறிந்தாள்; கையை முறித்துக் கொண்டாள்.

குழந்தைகளும் வழிமேல் விழி வைத்தார்கள். "பட்டாசு வருமே! பட்டாசு வருமே!" என்று கும்மாளமிட்டனர். அப்பா

வையோ காணவே காணோம். எவ்வளவு நேரந்தான் விழித்துக் கிடப்பது? அவர்களும் உறங்கி விட்டனர்.

நல்லம்மா!... அவள் எவ்வாறு தூங்குவாள்? பாவம், பேதை....!

2

அம்மாடீ...!

கடைசியில் ஒரு வழியாக வந்து சேர்ந்தான் நடேசன். உலகத்தில் பெய்த மழை முழுவதையும் ஏந்திப் பிடித்து வந்த மாதிரி சொட்டச் சொட்ட நனைந்திருந்தன அவனது வேட்டியும், துண்டும். சாமான் கூடை எப்படியோ தப்பித்துக் கொண்டது; அதன்மீது பனை மட்டை ஒன்று குடையாகக் குந்தியிருந்ததே காரணம்.

அணைந்த விளக்கு மீண்டும் சுடர் விடுமே, அந்த மலர்ச்சி நல்லம்மாவுக்கு ஏற்பட்டது. துள்ளி எழுந்தாள்; கணவன் தலையிலிருந்த கூடையை இறக்கினாள்; எடுத்துக் கொடுத்தாள் பழைய வேட்டி ஒன்றை; கழற்றித் தரச் சொன்னாள் நனைந்த உடைகளை; அவளே அவற்றைப் பிழிந்தாள். நடேசனின் ஈரத் தலையையும் தானே நின்று துவட்டினாள். நாளைக்கு அவன் நோய், நொடி என்று படுத்துக்கொண்டு விட்டால் யார் திரும்பிப் பார்ப்பார்கள்? தீபாவளி தான் தீபாவளியாகப் போகுமா?

சாப்பிட அமர்ந்தான் நடேசன்.

கூடையிலிருந்த எல்லாச் சாமான்களையும் ஒழுங்கு படுத்தி வைத்தாள் நல்லம்மா. பாக்கியாக இருந்தது ஒன்றே ஒன்று. அதுவே அந்தப் பெரிய பொட்டலம். அதைப் பார்த்ததுமே அவள் மனத்திலே குறுகுறுப்பு, ஏக்கம், கொண்டாட்டம்! ஏனெனில் அந்தப் பொட்டலத்திலேதான் புதுத் துணிகள் இருக்கின்றன. நடேசன் அவளுக்கும் புடவை எடுத்து வந்திருப்பானோ? பொட்டலம் பெரிதாகத் தோன்றுகிறதே?

நல்லம்மாவை ஆசை உந்தித் தள்ளியது. பொட்டலத்தை எடுத்தாள்; அவிழ்த்தாள். பார்த்தால் கண்ணைப் பறிக்கும் வண்ணத் துணிகள்; குழந்தைகளுக்கென்று சட்டை, கால்சட்டை, கௌன், பாவாடை; நடேசனுக்கென்று ஒரு வேட்டி, துண்டு.

"புடவை எடுக்கலையா?" —நல்லம்மாவின் தொண்டையை நெறித்தது ஏமாற்றம்.

"இல்லை."

"ஏன் எடுக்கலே?"

"பணம் இல்லை."

"உங்களுக்கு வேட்டி, துண்டு எடுக்க மட்டும் பணம் இருந்துச்சோ?"

"எனக்கு ரெண்டு ரூபா இருந்தாப் போதுமே; உனக்குச் சேலை எடுக்கணும்னு பத்து ரூபாயில்லே அழுது தொலைக்கணும்?"

"ஏன் அழுது தொலைக்கணுமாம்? எனக்கு இழவா எடுத்திருக்கு?"

"ஆமாம்."

"எனக்கு ஏன் இழவு எடுக்கணும்? உங்களுக்குத்தான் எடுக்கும்," என்றவாறே துணிப் பொட்டலத்தைத் தூக்கி வீசினாள் நல்லம்மா. நடேசன் தின்றுகொண்டிருந்த சோற்றில் விழுந்தது.

கோபத்திற்குக் கால் ஏது? தலை ஏது? வார்த்தைகளுக்கும் தான் வரை முறை ஏது?

நடேசனுக்கு ஆத்திரம் நல்லபாம்பாகச் சீறிக் கிளம்பியது. சாப்பிட்ட கையுடன் விருட்டென்று எழுந்தான்; வேங்கையாகப் பாய்ந்தான். நல்லம்மாவிற்கு அறை, உதை, அடி! அவள் கழுத்திலே கையைக் கொடுத்து வெளியில் தள்ளினான்; கதவை இழுத்துச் சாத்தியும் விட்டான் நடேசன்.

3

மீண்டும் மழை வலுத்தது; குடம் குடமாகக் கொட்டி அழுதது நல்லம்மாவின் கண்ணீருடன்.

நல்லம்மா அழுதுகொண்டே மூன்றாவது வீடு சென்றாள். அங்கே, சிவகாமி என்பவள் அந்த நாளி

நீரில் மிதந்து அழுகும் நெற்பயிர் மாதிரி, சோகத்தில் மிதந்தது அவள் இதயம். அங்கே துயரக் கொப்புளங்கள் ஒன்றுக்கு நூறாக வெடித்தன; 'விண் விண்' என்று தெறித்தன.

நல்லம்மா நடேசனைக் கட்டிக் கொண்டு எட்டு ஆண்டுகள் ஆகின்றன. அதற்குள் மூன்று

லிருந்தே அவளுக்குத் தெரிந்தவள்; சிநேகிதி. அவளிடம் தன் துயர வெள்ளத்தை யெல்லாம் கொட்டி வழியவிட்டாள் நல்லம்மா. அப்படியும் இரவு முழுதும் உறக்கமே இல்லை. நட்ட அன்றே மழை பெய்தால், வேர் ஊன்ற முடியாமல்

*

அடுத்த இதழில்

○

இலக்கியச் சுவை
புதிய கட்டுரைத்தொடர்
ம. ரா. போ. குருசாமி

*

தம்பிக்கு
ஜி. உமாபதி

*

சந்தித்தோம் – சிந்தித்தோம்

*

தொடர்கதைகள் :

போலீஸ்காரன் மகன்
பி. எஸ். ராமையா

வாடா விளக்கு
'மாயாவி'

*

நினைவின் முத்திரை
நீண்ட சரித்திரக் கதை
நா. பார்த்தசாரதி

*

புதுமைப் பெண்
பெண்கள் பகுதி
'அமிர்தம்'

*

கதாசிரியர்கள்; கவிஞர்கள் :

லால்குடி கிருஷ்ணமூர்த்தி, சரஸ்வதி ராமனுதன், இளம்பாரதி, தமிழழகன், வல்லிக்கண்ணன், வே. தில்லைநாயகம், கா. க. அரங்கநாத பாபு ஆர். ஸி. மணி, மயிலன், அன்புச் செல்வி, பூவை எஸ். ஆறுமுகம்

குழந்தைகள்; இப்போது வயிற்றில் ஒன்று. வேறு என்ன சுகத்தைக் கண்டாள், அவனிடம்?

வாய்க்குச் சுவையான சோறு உண்டா? துணிமணி உண்டா? ஒரு நாளாவது ஓய்வு உண்டா?

பொழுது விடியுமோ, விடியாதோ? – நடேசனுடன் கொல்லைக்கோ வயலுக்கோ போக வேண்டும். உடம்பு ஒடிய உழைக்க வேண்டும். வீட்டுக்குத் திரும்பியதும் கால்களை நீட்டிப் போட்டுக் கொண்டு சாப்பிட முடியுமா? அப்படியும் இல்லை. இருப்பதை வைத்துக் கொண்டு, கூழோ கஞ்சியோ காய்ச்ச வேண்டும். பிள்ளைகள் வேறு பிய்த்துப் பிடுங்குவார்கள். அவர்கள் ஆர்ப்பாட்டத்தை அடக்கிச் சமாதானம் பண்ணுவதற்குள்.... அம்மாடியோ! தாவு தீர்ந்து போகுமே!

மூன்றும் தீபாவளிக்கு அவளது தாய் வீட்டில் ஒரு சேலை எடுத்துத் தந்தார்கள். அதற்குப் பிறகு ஒரு கிழிந்த துணியாவது அவள் புகுந்த வீட்டில் கிடைத்ததுண்டா? கந்தலாகி விட்ட பழைய சேலை ஒன்று, சாயம் வெளுத்துப் போன இன்னொரு புடவை–இவற்றைக் கட்டிக் கொண்டு எவ்வளவு நாட்களுக்குத் தான் காலம் தள்ள முடியும்?

நல்லம்மாவுக்கு நெஞ்சு வெடித்து வந்தது. கண்கள் உதிரத்தைக் கொட்டின. வாழ்க்கையின் மீது இதுவரை இல்லாத சலிப்பு, வெறுப்பு, ஆத்திரம்!

4

பொழுது புலர்ந்தது. இருள் அகன்றது; நல்லம்மாவின் ஆத்திரம் மட்டும் அகலவில்லை; தணியவில்லை.

மூன்றுவது வீட்டுச் சிவகாமியிடம் கடனுக ஆறணு வாங்கிக் கொண்டாள். அதுபோதும், அவள் தாயார் ஊர் போய்ச்சேர்வதற்கு. பக்கத்திலேதான் சாலை. இன்னும் கொஞ்ச நேரத்தில் பஸ் வந்து விடும். அதில் ஏறிச் செல்வதற்

கிரகச் சாலைக்கு வேகமாக நடந்து போனாள் நல்லம்மா.

அதற்குள் —

நடேசனால் குழந்தைகளை சமாளிக்க முடியவில்லை. அம்மாவைக் காணாமல் ஒவ்வொன்றும் அவனைக் கொத்திக் குதறியது; ஒப்பாரி வைத்தது; ஓலமிட்டது; மூன்றாவது வீட்டுச் சிவகாமியிடம் ஓடி வந்தான்; தன் மனைவியைச் சமாதானப் படுத்தும்படி கெஞ்சினான். புதுப் புடவை வாங்கித் தருவதாகச் சொன்னான். நல்லம்மாதான் பஸ்ஸில் ஏறிச் செல்ல முன்பே சாலைக்குப் போய் விட்டாளே!

நடேசனின் வற்புறுத்தலைத் தவிர்க்க முடியவில்லை; சாலைக்கு ஓடினாள் சிவகாமி. நல்லம்மாவின் கைகளை இறுக்கிப் பற்றி இழுத்தாள்.

"நல்லம்மா, நான் சொல்றதைக் கேளு. நல்ல நாளும் பெரிய நாளுமா நீ உன் புருசன் வீட்டை விட்டுப் போறது சரியே இல்லை," என்றாள் சிவகாமி.

"ரெண்டு தீவாளியா எனக்குச் சேலை எடுத்துத் தாராதது மட்டும் சரியா? கேட்டாக்க, மட்டு மரியாதை இல்லாமே திட்டுறது மட்டும் சரியா? ஆடு, மாடு மாதிரியா என்னை நினைச்சுக்கிட்டு, கண்ட கண்ட இடத்திலே அடிச்சு, நொறுக்கிறது மட்டும் சரியா? கழுத்தைப் பிடிச்சு வெளியே தள்ளிக் கதவைச் சாத்துறது மட்டும் சரியா? இனிமேலே, அந்த ஆளுக்கிட்டே நான் குடும்பம் பண்ணவா, செவகாமி? எங்கே யாச்சும் போய்ச் செத்தாலும் சாவேனே ஒழிஞ்சு திரும்பி நான் வரதாவது?" — எடுத்தெறிந்து பேசினாள் நல்லம்மா.

பஸ்ஸும் வந்து விட்டது. சிவகாமியின் பிடியை உதறித் தள்ளினாள்; பஸ்ஸில் ஏறி விட்டாள் நல்லம்மா; கண்டக்டரிடம் காசு கொடுத்து டிக்கெட்டும்

சிரிக்க மட்டும்:

பொன்னான சந்தர்ப்பம்

'சுவாதி'

"சங்கமன்...சங்கமன்....!"

"தேவி, கோபித்துக் கொள்ளக் கூடாது. நமது வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்படப் போகிறது; பொறுமையுடன் கேள்—நான் உன்னை விரும்பவில்லை!"

"அட பாவி...! காதல் காதல் என்று இவ்வளவு நாட்களாக நீ நடித்ததெல்லாம் வேஷம்தானா?"

"நான் நடித்தேன்....நீ நம்பினாய்! யார் குற்றம்....தேவி?"

"என் வாழ்விற்கு வழி?...."

"நீயே யோசித்து முடிவு செய்து கொள்!"

"நீ துரோகி! நல்லவன் என்று நம்பினேன். நல்ல வேளை, என் வாழ்வில் பயங்கரத் திருப்பம் ஏற்படுவதற்குள் நான் விழித்துக் கொண்டேன். அல்ல; நீ விழிப்பூட்டி விட்டாய்!"

"ஹஹ்ஹா!"

"அடபாவி!" என்று கூறிக் கொண்டு பக்கத்தே இருந்த கண்ணாடித் தம்ளரை எடுத்து ஓங்கினாள் திருமதி தேவி.

இதற்குள் யாரோ ஓடி வரும் சத்தம் கேட்டது.

"டேய் சங்கமா, தேவிக்கும் உனக்கும் சண்டையாமே?....என்னடா அது? தங்கம் சற்றுமுன் உன்னைத் தேடி வந்தபோது நீங்கள் இரண்டு பேரும் காரசாரமாகப் பேசிக் கொண்டிருந்தீர்களாமே?" என்றான் ரகு.

"டேய், நீங்கள் எல்லோரும் முட்டாள்கள்! நாங்கள் சண்டை போடவில்லை. அன்று நடித்த 'அசந்தர்ப்பம்' என்ற ரேடியோ நாடகத்தை இன்று நாங்கள் இரண்டு பேரும் வீட்டிலே நடத்திப் பார்த்தோம். ஆண்டு விழாவில் கல்லூரி நாடகமான 'சந்தர்ப்ப'த்தில் நடிக்கத்தான் இந்த ஒத்திகை....!" என்றான் சங்கமன்.

மறுகணம், சங்கமனும் தேவியும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். ✱



வாங்கி விட்டாள். கீழே நின்ற சிவ காமி கெஞ்சிக் கெஞ்சிக் கூப்பிட் டாள். 'இது நல்லா இல்லே!'' என்று கண்டிக்கவும் கண்டித்தாள். நல்லம்மா கேட்டால் தானே?– டிக்கெட் வாங்கியவள் இனியா இறங்கப் போகிறாள்?

பஸ்ஸில் இருந்த பயணக்காரர் களுக்கெல்லாம் இது வேடிக்கை யாக இருந்தது. சிலர் சிரித்தார் கள்; சிலர் இரக்கப்பட்டார்கள்; சிலர் காதைப் பொத்திக் கொண் டார்கள்!

*

பஸ் புறப்படப் போகின்ற சமயம்.

''அம்மா! அம்மா!'' என்று அலறிக் கொண்டு ஓடி வந்தன மூன்று குழந்தைகள். எல்லாம் நல்லம்மாவின் வயிற்றிலே வந்து உதித்தவை. கண்களைக் கசக்கிக் கொண்டு அவர்கள் கதறுவதைப் பார்த்தாள்; பரிதாபமாக இருந் தது. இளகாத நெஞ்சும் இள குமே; கரையாத கல்லும் கரைந்து உருகுமே!

தன் குழந்தைகளைப் பார்த்தாள் நல்லம்மா. பெற்ற வயிறு அல் லவா? குமுறிக் குமுறித் தேம்பித் தேம்பிப் பீறிட்டுக் கொண்டு வந் தது அழுகை. குலுங்கிக் குலுங்கி அழுதாள் அவள்.

அதே சமயம், அவளுடைய கற் பனை வளையம் முன்னே உருண் டோடியது.

நாளைக்குத் தீபாவளி. ஊரி லுள்ள குழந்தைகள் யாவும் குளித்து முழுகி, புத்தாடை உடுத்து, பலகாரம் தின்று, பட் டாசை வெடிக்க வைத்து, சிரித் துத் திரிவார்கள்.

அப்போது அவள் பெற்றெடுத்த குழந்தைகளின் நிலை....!

அவர்களுக்கு எண்ணெய் தேய்த்து விடுவது யார்? வெந்நீர் வைத்துக் குளிப்பாட்டுவது யார்? புத்தாடைகளை உடுத்தி விடுவது யார்? பலகாரங்கள் சுட்டுத் தரு வது யார்? அவர்கள் குளிக்காமல் முழுகாமல் அழுக்குத் துணி யுடன் நின்றால் யாருக்கு அவ மானம்?

பலகாரங்களுக்கு ஏங்கிப் போவார்களே? ஏமாந்து அலே வார்களே? அழுது தவிப்பார் களே? பண்டம், பலகாரத்திற்கு ஆசைப்பட்டு வீட்டுக்கு வீடு அவர் கள் கையேந்தி நிற்க வேண்டுமா? அப்படியென்ன, அவர்கள் அனாதை களா? பிச்சைக்காரியின் பிள்ளை களா? அவள் பிச்சைக்காரியா? பார்ப்பவர்கள் பழிக்க மாட்டார் களா? கேவலமாகப் பேச மாட் டார்களா?

அந்த அவமானத்தை அவளால் தாங்க முடியுமா?

எப்படி முடியும்? எப்படி முடி யும்....?

5

பஸ் நகர்ந்தது; கீழே குதித்து விட்டாள் நல்லம்மா! இடது காலிலே சரியான அடி. அதனால் என்ன? அவளது மன இருட்டு மாயும்படி நாளைக்குச் சிரிக்கப் போகிறதே தீப ஒளி! அதைப் பார்த்துச் சிரிக்கப்போகிறார்களே அவள் குழந்தைகள்!

ஆறு அணாவை அநாவசிய மாகப் பஸ்ஸுக்கு 'அழுதுவிட்டு'ப் போகிறாளே என்று வேடிக்கை போலும் – பிரயாணிகளுக்குச் சிரிப்பு வெடித்தது!

அவர்கள் சிரிக்கட்டுமே! அவ ளது குழந்தைகளின் உள்ளங்கால் தூசுக்குச் சமானம் ஆகுமா, அந்த ஆறணா....? ★

○ ○ ○

தமிழர் ஒவ்வொருவருடைய உள்ளமும் கலைத் தெய்வத்தின் கோயி லாக இருக்கவேண்டும். அங்கே அன்பெனும் விளக்கேற்றி ஒளி பரவச் செய்ய வேண்டும். அந்த விளக்கை துவேஷம் என்னும் சக்திகள் அணைக்க முயலலாம். அந்த முயற்சிகளை முறியடித்து நம் ஒவ்வொருவர் மனத்திலுமுள்ள கலை விளக்கு அணையாமலும், கடவுள் நம்பிக்கை என்னும் ஒளி மங்காமலும் பார்த் துக் கொள்ள வேண்டும்.

— ம. பொ. சிவஞானம்

என்று காண்போம்?

மு. சண்முகம், பி: ஒ. எல்.

நூலெடுத்துப் பின்னிடுவாள் அவளின்உள்ளம்
நூறுமுறை வந்தெந்தன் உளத்திற் பின்னும்;
வேலெடுத்து என்னகத்தைக் குத்திக் குத்தி
விழுங்கிவரும் கூர்விழிகள். நடப்பதற்குக்
காலெடுத்து வைப்பதையோர் அன்னக்கூட்டம்
கண்டுவிடின் கட்டாயம் வெட்கிஓடும் ;
சேலெடுத்து முகத்தினிலே பதித்துவைத்த
சிலைவழியின் தோற்றமதை என்றுகாண்போம் ?

கோலமிடத் தெருவினிலே வருவாள், கண்கள்
கோலமெலாம் காட்டியுளம் கவரும், காட்டுப்
பாலமிடை ஓடுகின்ற நதியைப்போலப்
பளிங்குமுகம் ஒளிபெற்று இலங்கும், பருவக்
காலமெனும் கலைஞனவன் வந்துஅவள்தன்
கன்னத்தில் செந்நிறத்தைத் தடவிநின்றான் ;
ஞாலமெல்லாம் தேடிடினும் கிடைக்கா அந்த
நல்லாளின் அழகுதன்னை என்றுகாண்போம் ?

தழைக்காட்டின் தளிரவள்தன் உடலும் அந்தத்
தனிநிறத்தை எண்ணிஅகங் குளிரும், கொவ்வைப்
பழவிதழில் புன்முறுவல் பாய்ந்து பாய்ந்து
பறித்தெடுக்கும் என்னுயிரை ; இருண்ட மேக
மழைக்கால மின்னலவள் இடைதான் வெள்ளை ;
வளையணிந்த செந்தளிர்க்கை விரும்பார் யாரே !
குழைக்காத கருநிறத்தைக் கொண்டிலங்கும்
குழலியவள் வண்ணமதை என்றுகாண்போம் ?

ஊற்றினுக்கு நீரெடுக்கச் செல்வாள் அந்த
ஒய்யார நடைகாண ஊற்றெடுக்கும் இன்பம் ;
காற்றினிலே நறுமணத்தை அள்ளிவீசும்
கருங்குழலி தான்சூடும் பூக்கள் எல்லாம்.
சேற்றினிலே முளைத்தபுது மலரைப் போன்ற
செவ்விதழ்கள் சிந்தனையைக் கிளரும், என்றும்
மாற்றறியா அவளெழிலைக் கண்டுகண்கள்
மட்டின்றி மகிழுதற்கு என்றுகாண்போம் ?

தாங்கள் எதிர்பார்க்கும் 'புதுமைப் பெண்'ணைப் பற்றிச் சொல்லுங்கள்.

குகப்பிரியை: 'புதுமைப்பெண்' நல்ல கல்வி அறிவுள்ளவளாக [illegible] பரந்த மனப்பான்மை உள்ளவளாகவும் இருக்க வேண்டும். ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்ள வேண்டியதுதான். ஆனால் எந்தெந்த விதங்களிலே நிகராக இருக்கவேணும் என்பதையும், தனது எல்லைகள் எவை என்பதையும் தெரிந்து நடக்கிறவளாக அவள் இருக்கவேண்டும். சிறந்த மனைவியாக, ஒரு நல்ல தாயாக, பெரியோர்களிடமும், தன்னைச் சுற்றியுள்ளவர்களிடமும் அன்பும், ஆதரவும் உள்ள ஓர் இல்லத்து அரசியாக அவள் விளங்கவேண்டும். வருங்கால வீர மக்களைப் பயில்விக்கும் ஒரு தாய் எந்தெந்தப் பண்பாடுகளைப் பெற்றிருந்தால், வையத்துள் வாழ்வாங்கு வாழ முடியுமோ அந்த நலன்களெல்லாம் அவளிடம் இருக்கவேண்டும். கல்வியிலும் கேள்வியிலும் சிறக்க வேண்டும். அந்தக் கல்வியும் கேள்வியும், அவள் இல்வாழ்க்கையை அழகுசெய்வதாக இருக்க வேண்டும். புதுமைப் பெண்கள், ஆடவர்களுடன் போட்டியிட்டு உத்தியோகங்களிலே பங்குபெற வேண்டுமா? இல்லை. நல்ல இல்லாளாக இருந்து இல்லறத்தை நல்லறமாக்க வேண்டியதுதான் அவள் கடமை. அவளால்தான் நாடு நலம்பெற முடியும். நல்ல வீர மைந்தரையும் வீர மகளிரையும் நாட்டுக்கு அளிக்க முடியும்.

தயாரிப்பு: பூவை எஸ். ஆறுமுகம்

குகப்ரியை

வசுமதி ராமசுவாமி: பாரதியார் வர்ணனை செய்த 'புதுமைப் பெண்'ணைத்தான் நானும் எதிர்பார்க்கிறேன். பெண்கள் அறிவுச் சுடர்களாக இருக்கலாம். மேதைகளாக இருக்கலாம். சகலகலாவல்லியாகவும் இருக்கலாம். ஆனால், இவைகளுக்காக பெண்மை குறையக்கூடாது. அடக்கத்துடன் நடந்துகொள்பவள்தான் உண்மையான அறிவு பெற்றவள். 'காதல் ஒருவனைக் கைப்பிடித்தே அவன் காரியம் யாவினும் கைகொடுத்து' என்பது கவி வாக்கு. அவை சாதாரணச்சொற்களல்ல. கணவனுடன் வீணையும் நாதமும் போல் ஒற்றுமையாக வாழத் தெரிந்த புதுமைப் பெண்ணைத்தான் நான் எதிர்பார்க்கிறேன். போலி நாகரிகம், படாடோபம், அலட்சியம் இவை பெண் தன்

மையை மாற்றிப் பேய்த் தன்மையைக் கொடுக்கும். புதுமைப் பெண்ணைக் கண்டு அனைவரும் வணங்கி மரியாதை செய்யும் வகையில் அவள் தோற்றம், பேச்சு, நடையுடை பாவனைகள் எல்லாம் இருக்க வேண்டுமென்று தான் நான் எதிர்பார்க்கிறேன்.

தங்களுடைய முதல் கதை பிறந்த கதை என்ன?

ஒரு சிறுகதையை எழுதி 'திருமகள்' என்னும் பத்திரிகைக்கு அனுப்பினேன். அது பிரசுரமானது. எனக்கு மிகவும் உற்சாகமாக இருந்தது. நான் அதற்கு முன் எழுதியதும் இல்லை; எழுதிக் கிழித்துப் போட்டதும் இல்லை.

சமூகப் பணியில், பெண்கள் கடமை பற்றியும், திரையுலக ஈடுபாட்டில் இவர்களின் கடமை பற்றியும் அறிய ஆவல்....!

குகப்ரியை—வசுமதி ராமசாமி

குக: முதன் முதலில் கட்டுரைகள்தான் எழுதினேன். முதல்கதை 'கமலா' – 1926-ல் 'விவேக போதினி' மாத இதழில் வெளிவந்தது. அது ஒரு சோகக் கதை. நடந்த சம்பவங்களையே அடிப்படையாகக் கொண்டு எழுதியது. ஆனால் அதன் பிற்பகுதி இப்பொழுது கிடைக்கவில்லை. குழந்தைப் பருவ முதல் பங்கிம் சந்திரரது 'ஆனந்த மடம்' எனக்கு மிகவும் பிடித்த ஒரு புத்தகம். அதைப் பல முறை வாசிப்பேன். அதில் வரும் சாந்தி என்ற பெண்ணைப் போல ஒரு கதாநாயகியை வைத்து ஒரு கற்பனை எழுத வேண்டுமென்ற ஆவல். ஆனால் இந்தக் கதையிலே புறக்கணிக்கப்பட்டவர் துறவியாகி விடுகிறார். முதல் முயற்சி. பொதுவாகப் பாராட்டப்பட்டது. ஆனால் வெற்றி பெற்றதாகச் சொல்ல முடியாது.

வசு: 1930-ம் ஆண்டிலிருந்து 'கல்கி' எழுதிய கதை கட்டுரைகளை விடாமல் படிப்பேன். ஒரு சமயம் 'விகட'னில் 'கொள்ளிடத்து முதலை' யென்ற தலைப்பிட்டு அவர் எழுதிய கட்டுரையைப் பாராட்டிச் சொன்னேன். "நீங்களும் எழுத முயற்சி செய்யுங்கள். திறன் இருக்கிறது." என்றார். பலவித அசந்தர்ப்பங்களால் எழுதத் துணியாமல் மேலும் ஐந்து ஆண்டுகளை வீணே தள்ளி விட்டேன். 1936-ம் ஆண்டு 'பிள்ளையார் சுழி' என்ற

குக: சமூகப் பணியில் பெண்கள், தமது வயதுக்கும், கல்வி அறிவுக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு யாரார் எந்தெந்தப் பணிகளிலே பங்கு கொள்ளலாம், எதெது எந்தெந்த அளவிலே நன்மை பயக்கும் என்பதைச் சீர்தூக்கிப்பார்த்து, தம்மால் இயன்ற அளவு செயல்களைத் திறம்படச் செய்யக் கூடியவைகளிலே பங்கு கொள்ள வேண்டும். பெயருக்கும் புகழுக்கும் ஆசைப்படாமல், 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற ஒரே நோக்குடன் முன் செல்ல வேண்டும். தடைகளை எதிர்த்து வெற்றி பெறும் மன உறுதி அவசியம் வேண்டும்.

வசுமதி ராமசாமி

வசு: சமூகப் பணிகளில் பெண்கள் பங்கு எடுத்துக்கொள்ளலாம். திரையுலக ஈடுபாடு அவரவர்களின் குடும்பச் சார்புகளைப் பொறுத்த சொந்த விஷயம்!

தமிழ் எழுத்துலகில் ஆண்கள் அளவுக்குப் பெண்கள் முன்னேற்றம் அடையவில்லை என்பது என் கருத்து. உங்கள் எண்ணங்கள் யாவை?

குக: ஆம், நீங்கள் நினைப்பது உண்மைதான். காரணம் பல. பலருக்கு மிகச் சிறந்த கற்பனை சக்தி இருந்து, சிந்தையைச்சொல்லால் வடிக்கும் திறமை குறைவு. தோல்வியைப் பாராட்டாமல் முன்னேறக் கூடிய சகிப்புத் தன்மை குறைவு. சிற்சிலருக்கு வசதிகள் குறைவு—இவைகள்தான் காரணம். கடந்த இருபது ஆண்டுகளிலே நூற்றுக் கணக்கான பெண்கள் படித்துப் பட்டம் பெற்றும், உத்தியோகம் வகித்தும் வருகிருர்கள். ஆனுல் சுவைமிகுந்த வளம் செறிந்த, கற்பனைகள் தோன்றுவது மிகவும் குறைவு தான். விரல் விட்டு எண்ணக் கூடிய சில பெண்மணிகளின் பெயர்களேதான் மீண்டும் மீண்டும் காணப்படுகின்றன. கடந்த நான்கு வருடங்களாக இளம் பெண்கள் பலர் எழுதத் தொடங்கி ஓரளவு வெற்றி கண்டிருக்கிருர்கள். இதற்கு முக்கிய காரணம்: சகிப்புத் தன்மை குறைவு; கொஞ்சம் சோம்பலும்கூட. மூன்ருவதாக ஆடவர்களுள் பலர், தாமே நேரில் பத்திரிகாலயங்களுக்குச் சென்றும், கொடுத்தும், அளவளாவியும், மாற்றங்கள் செய்யும் படி சொன்னுல் மாற்றியும் செய்கிருர்கள். பெண்களைப் பொறுத்த வரை அம்மாதிரி வசதிகள் இல்லை. அப்படி வசதிகள் ஏற்படுவதும் நன்மையல்ல. தங்களைத் தாங்களே தாழ்மையாக்கிக் கொள்வதைப் பெண் உலகம் விரும்பாது. ஒரே ஒரு தூதுவன் தபால். வந்தால் வெற்றி; இல்லாவிடில் இல்லை என்று இருப்பது ஒரு காரணம். என்ருலும் பெண்கள் போதிய அளவு முன்னேறவில்லை என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

வசு: ஆம்; இப்பொழுது 'விகடன்' நடத்திய—நடத்தும் போட்டிக்கு நிறுவப்பட்ட நீதிபதிகளில் நானும் ஒருவளாக இருப்பதால், ஓர் உண்மை நன்ருகத் தெரிகிறது. ஆண்கள் அளவு பெண்கள் எழுத்துலகில் முன்னேற்றம் அடையவில்லைதான்!

தங்கள் இலக்கிய வாழ்வில் பசுமை பெற்ற நினைவுகள் எவை?

குக: இலக்கிய வாழ்விலே என்றென்றும் பசுமையான நினைவுகள்: 1934-ல் ஆனந்த விகடன் நடத்திய நாவல் போட்டியிலே 'சந்திரிகா' பரிசு பெற்றது. ஆசிரியர் கல்கி அவர்கள் நேரில் வந்து பாராட்டினுர்கள். பிறகு புத்தகமாக வெளிவந்த பொழுதும் முன்னுரை அளித்தார்கள்.

1942-ல் என் துணைவர் டாக்டர் எம். வி. சுப்பிரமணியம் காரைக்குடி கம்பன் விழாவிலே பங்கு கொள்ளும் பொருட்டு என்னை அழைத்துச் சென்ருர். அங்கே ரஸிகமணி அவர்களும், திருவையாபுரிப்பிள்ளை அவர்களும் என் சொற்பொழிவைப் பாராட்டியதோடு என் துணைவரிடமும் புகழ்ந்தார்கள். மேலும் ரஸிகமணி அவர்கள் 'சந்திரிகா'வின் பரிசுக் குழுவிலே இருந்ததால் எந்தெந்தச் சம்பவங்களினுல் அதைத் தேர்ந்தெடுத்தோம் என்பதையும் குறிப்பிட்டார்கள். தவிர, 'சங்கீதத்தை விட்டு விடாதீர்கள்; ரேடியோவிலும் பாடலாமே' என்றும் சொன்னுர்கள். இச் சொற்கள் என் செவிகளில் இப்பொழுதும் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன.

1940-ல் மாம்பலம் இலக்கியப் பண்ணையிலே பாரதியாரின் பாடல்களைப் பற்றிப் பேசிய பொழுது 'புதுமைப் பெண்' பாடலுக்கும், பெண்மை, பெண் விடுதலை இம்மூன்றுக்கும் நான் கூறிய விளக்கத்தைச் சபையிலிருந்த ஒரு முதியவர் போற்றினுர். 'என்

னுடைய தந்தையே கூறியிருந்தால்கூட இவ்வளவு கருத்துச் செறிவைக் காணமுடியுமோ என்னவோ?'' என்று சகுந்தலா பாரதி வியந்தார்.

வசு: 'அன்றும் இன்றும்' என்ற தலைப்பில் நான் எழுதிய சிறுகதையைக் 'கல்கி' அவர்கள் பாராட்டின சந்தர்ப்பம்; 'மறைந்தஜோதி' என்ற என் கதையைப் பாராட்டி என் கணவர் எழுதிய கடிதம்; என் சிநேகிதி இவ்வளவு நல்ல கதையை இவள் எழுதியிருக்க முடியுமாயென்று சந்தேகப்பட்டது; 'தேவியின் கடித'ங்களை ராஜாஜி அவர்களும் ஸ்ரீ எஸ். எஸ். வாசன் அவர்களும் வெகுவாகப் புகழ்ந்தது; 'பனித்திரை' என்ற என் தீபாவளி மலர்க் கதையை என் சகோதரர் பாராட்டியது—இவைகள் என் இலக்கிய வாழ்க்கையில் பசுமை பெற்ற நினைவுகள்.

இந்நாளையச் சட்டசபையில் பெண்களில் சிலர் அங்கம் வகிக்கிறார்கள். இவர்களிடையே இலக்கியத் துறைத் தொடர்பு கொண்ட ஒரு சகோதரியும் இருந்தால் நன்றாக யிருக்குமல்லவா?

குக: அரசியலிலே இலக்கியத் தொடர்பு கொண்ட ஒரு சகோதரி தற்பொழுது இருக்கிறார். திருமதி குழந்தை அம்மாள். ஆனால் அதனால் விசேஷமான நன்மைகள் ஏதும் எதிர்பார்ப்பதற்கில்லை என்பதே எனது தாழ்மையான அபிப்பிராயம். அரசியலில் பணி செய்பவர்கள் ஓரளவு இலக்கியப் பயிற்சி உள்ளவர்களாகவே தான் இருக்கிறார்கள் என்றாலும் அதனால் இலக்கிய உலகில் அவர்கள் செய்யக் கூடியது ஒன்றுமே இல்லை. தங்களது கருத்துக்களை அழகான சொற்றொடர்களால் பிறரைக் கவரும் வண்ணம் பேசலாம்; உவமைகளை வாரி வீசலாம் என்பதைத் தவிர, செயலாற்றுவதிலே இவர்கள் விசேஷமாக எதையும் செய்துவிட்டதாகத் தெரியவில்லை. இலக்கியப் பயிற்சியும் வாக்கு வன்மையும் சீக்கிரத்திலே பிறரைக் கவரவும், அதனால் ஒரு ஸ்தானம் ஏற்படவும் உதவி செய்யும் படிக்கட்டுகள் என்றுதான் கொள்ளவேணும்.

வசு; சட்டசபை அங்கத்தினருக்கு இலக்கிய ஞானம் உதவியாக இராது. அரசியல் அறிவு தனிப்பட்டது.

நூல்களுக்கு முன்னுரை தேவை தானா?

குக: ஆமாம்; முன்னுரைகள் ஓரளவு தேவைதான். இளம் எழுத்தாளர்களுக்கும் புதிய புதிய துறையிலே முயற்சி செய்பவர்களுக்கும் இது உத்ஸாகம் தரும். எழுத்தாளரது கருத்து, நூலின் சிறப்பு இவைகளைப் பற்றிய ஓர் அறிமுகம் ஏற்படுகிறது.

வசு: மனிதர்களை ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்கிறோம். அதைப் போல் நூல்களுக்கும் முன்னுரை அவசியமாகும்.

போட்டிகள் மூலம் இலக்கியம் வளர முடியுமா?

குக: போட்டிகளினால் இலக்கியம் வளர முடியுமா? ஆம், வளருகின்றது. இலக்கிய வளர்ச்சிக்குப் பரிசு கொடுப்பதும் போட்டியும் அவசியமா? இலக்கிய வளர்ச்சி, குழந்தைகள் வளருவது போல் தாமாகவே வளரவேண்டும். எழுத்தாளன் ஒரு திட்டத்துக்குக் கட்டுப்பட்டு எழுதுவது என்றால் கற்பனை வளங் குன்றிவிடும் என்று சிலர் கருதுகிறார்கள். அது உண்மை தானா?

அறிஞர் பெர்னார்ட்ஷா தமக்கு நோபல் பரிசு அளிக்கப்பட்டபொழுது, ''இந்தப் பரிசு எப்படி

'பூவை' எழுதிய **வசந்தபைரவி** விலை: (எட்டணா) 50 நயா பைசா

விவரங்களுக்கு: 'உமா', :: சென்னை-1.

இருக்கிறது தெரியுமா? நீந்தும் பயிற்சி இல்லாதவன் கடலில் விழுந்து தவித்துக் கரை ஏறிய பிறகு 'லைப் பெல்ட்'டைப் போடுவது போலிருக்கிறது,'' என்று ராம் — ஆனால் இதை நாம் ஏற்றுக் கொள்ள முடியுமா? எழுத்தாளனது தகுதிகள் பொதுமக்களுக்கு விளங்காதிருக்கும் பருவத்திலே உலகம் எப்படிக் கௌரவிக்கும் என்று நமக்குத் தோன்றுகிறது.

பரிசுகள் அளிப்பது நம் நாட்டிலே இன்று நேற்று ஏற்பட்டதல்ல. சிவபெருமானே பரிசு பெறுவதன் பொருட்டு பாடிக் கொடுத்திருக்கிறார்!

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பீ
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ!

என்ற பாடலிலே தருமிக்குப் பொற்கிழியளித்தது நமக்குத் தெரியும். 'தண் தாமரைத் திருவே தாதா கோடிக்கொருவர் உண்டாயின் உண்டென்றறு' என்பது ஔவையாரே பரிசு பெற்ற பாதானே.

போட்டியில் இலக்கியம் வளர்ந்துவிடுமா என்பதைப் பற்றிப் பேசுபவர்கள் இதைச் சற்றே கவனிக்க வேண்டும். சுடர் விளக்காயினும் தூண்டு கோல் ஒன்று வேண்டும் என்பது முதுமொழி. நமது உள்ளங்களிலே பல்வேறு காரணங்களினாலே தூங்கிக் கொண்டிருக்கும் கற்பனைத் திறனைத் தட்டி எழுப்புகின்றன, போட்டிகள். போட்டிகளின் பயனாக நூற்றுக்கணக்கானவர் எழுத முயற்சி செய்கிறார்கள், சிலர் வெற்றி பெறுகிறார்கள். எழுத வேண்டும் என்ற ஆவலை மனத்துள் எழுப்புகிறது. ஆகவே, போட்டிகளினால் இலக்கியம் வளரும்; நல்ல முறையில் வளரும். அமர காவியங்களும், கதைகளும் மலர இது ஒரு தூண்டுகோல் என்பதே என் நம்பிக்கை.

வசு: போட்டிகள் மூலம் இலக்கியம் நன்றாக வளரும். இதை நம்முடைய பழைய இலக்கியங்களிலேயே அறியலாம். எழுதும் ஆர்வத்தை இம்மாதிரி போட்டித் திட்டங்கள் உண்டாக்குகின்றன.

எழுத்தாளர்கள் தமிழை வளர்க்கிறார்களா? எழுத்தாளர்களை தமிழ் வளர்க்கிறதா?

குக: இது ஒரு சிக்கலான கேள்வி. வடமொழியிலே 'அன்யோன்ய ஆசிரயம்' என்று சொல்லுவார்கள் — விதை முதலில் உண்டாயிற்றா, செடி முதலில் உண்டாயிற்றா என்பதுபோல! ஆகவே, எழுத்தாளர்களைத் தமிழ் வளர்க்கிறது; எழுத்தாளர்கள் தமிழை வளர்க்கிறார்கள். இரண்டையும் பாரதியாரது

'வீசுகமழ் நானுனக்கு
விரியுமலர் நீ யெனக்கு
பேசுபொருள் நானுனக்கு
பேணுமொழி நீ யெனக்கு'

என்பது போலத்தான் சொல்ல வேண்டும்.

வசு: எழுத்தாளர்களைத் தமிழ் வளர்க்கிறது. எழுத்தாளர்கள் அழகிய தமிழைத் தேடிப் பக்குவம் செய்து வாசகர்களுக்கு அளிக்கிறார்கள்; வளர்க்கிறார்கள்.

'மங்கையராகப் பிறந்திட —
மாதவம் செய்திடல் வேண்டும்
அம்மா!'
என்ற கவிமணியின் வாக்குக்குத் தாங்கள் கூறும் வியாக்யானம் என்ன?

குக: கவிமணியின் வாக்கு— உண்மைதான். மாதவம் செய்து தான் மங்கையராகப் பிறக்கிறார்கள். அந்தப் பங்கயக்கை நலம் பார்த்துத்தான் நாட்டில் அறங்கள் வளருகின்றன. 'நிலத்தின் தன்மை பயிர்க்குள தாகுமாம்' என்று பேசுகிறாள் பாரதியின் புதுமைப்பெண். தாய்க்குலம் கல்வி, கேள்வி, ஒழுக்கம் இவைகளிலே சிறந்து விளங்கினால்தான் வருங்கால உலகம் மேன்மையுற முடியும். பெண்கள் முன்னேற்றம் என்று ஏட்டில் எழுதுவதும் மேடையில் பேசுவதும் பயனில்லாத செயல்கள். முன்னேற்றம் என்றால் என்ன? எந்தெந்த வகையிலே முன்னேற்

றம் தேவை. அதன் எல்லை எது? இவற்றினைத் தெளிவாகப் புரிந்து கொண்டு சிந்தித்துச் செயலாற்ற வேண்டும் என்பதே கவிஞர் கருத்து. இப்படி நல்ல முறையிலே வாழும் பெண்தான் வருங்கால உலகிற்கு வீர மைந்தரையும் வீர மகளிரையும் அளித்து நாட்டின் பெருமையையும் பண்பாட்டையும் காப்பாற்ற முடியும். ஆகவே அப்படிப் பிறப்பதற்கே மிகுந்த தவம் செய்து பிறந்திருக்கிறாள் என்று பேசுகின்றார் கவி.

வசு: மங்கையராகப் பிறப்பது உயர்வுதான். பெண் அன்புருவம்; இன்றும், அன்றும், என்றும் அன்புச் சக்திதான் உலகை இயக்கும். பிறருக்காகத் தியாகம் செய்வதில் இன்பமடைவாள் மங்கை. பரிணாமக் கிரமத்தில் பெண்களைக் கடைசியாகத்தான் அறிஞர்கள் விளக்குகிறார்கள். பெண்ணாகப் பிறப்பது மேன்மை யென்றுதான் கருதுகிறேன்.

* * *

"பெண்மை வாழ்கென்று
கூத்திடுவோமடா!
பெண்மை வெல்கென்று
கூத்திடுவோமடா!"

'ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று எண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்' என்ற நல்ல செய்தியைப் புவியோர்க்குத் தெரிவிக்கும் கவிச்சக்கரவர்த்திக்குத்தான் பெண்மையின் மேன்மைக்கு வாழ்த்து கூற முடியும். அன்றைக்கு அவர் சொன்ன நல்லாசி இந்த அணுயுகத்திலுங்கூட படிக்குப் பாதிக்குமேல் பலித்திருக்கிறது. அது அமர வாக்கு; கவிச் சொல்!

பெண்டிரைப் புதிராக்குவதைத் தவிர வேறொன்றும் அறியாதது நம் அருமைப் பொன் நாடு. ஆணும் பெண்ணும் சரிநிகர் சமன் என்ற பொதுக் கொள்கைக்கு உடந்தையானவை மேலை நாடுகள் மட்டுமல்ல, வட நாடும் சேர்த்திதான். ஆனால் தென்னகமோ தாய்க்குலத்தின் விடுதலை விஷயத்திலும் ஒதுங்கித்தான் நின்றது; நிற்கின்றது.

அரசியல்பணியிலிருந்து பொது நலசேவை வரை இடைப்பட்டுள்ள சகல விதமான வாழ்க்கைப் பிரிவுகளிலே பூவையர் குழாம் வாழ்கிறது; வளர்கிறது.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள்
செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்!"

கவியின் கனவு பலித்தது.

உலகத்தின் வடிவத்தைப் பற்றிக் கதை கதையாகச் சொல்வது உண்டல்லவா? ஆனால் இந்த எழுத்துலகு – அதிலும், தமிழ் எழுத்தாளர் உலகம் மிகவும் விசித்திரமானது. விசித்திரமான உள்ளங்கள்தாமே இதில் அங்கம் வகிக்கின்றன! அபிப்பிராய பேதங்கள் கொண்டது; அத்தகைய எண்ண வேறுபாடுகள் வாயிலாகத்தானே எழுத்து வளர்ச்சி பெறுகிறது! கொள்கைகளினால், அப்போதுள்ள மனநிலைகளினால், சுற்றுச் சார்புகளினால் பகுதி பகுதியாகப் பிரிந்து நிற்கும் பண்பாளர்கள் இவர்கள். இத்தகையவர்களிட மிருந்து இனம் காரணமாக – அவசரப்படக் கூடாது – ஆம்; பெண் இனம் காரணமாகப் பிரிந்து நிற்கும் இவ்விரண்டு பெயர்களும் இப்போது எழுத்துத் துறை ஈடுபாடு கொண்டவர்களில் பெரும்பாலோரது கவனத்தைக் கவர்ந்திருக்கின்றன. 'உம்பர்க்கும் இம்பர்க்கும் வாழ்வு தரும் பதமாம் சக்தி'யின் வழி வந்தவர்கள். பேனா பிடிக்க ஆசைப்படும் வனிக்கரங்களுக்கு வழிகாட்டிகள்.

பெயர்கள்: குகப்ரியை; வசுமதி ராமசாமி.

'ஆண்டவனே! வேறு எந்தக் கதியை எனக்கு அளித்தாலும், சரிதான்; புத்தகத்துக்கு முன்னுரை எழுதும்படியான கதியை மட்டும் அளிக்கவேண்டாம்,' என்று

பிரார்த்தித்த பிறகு, 'சந்திரிகா' என்னும் நவீனத்துக்கு முன்னுரை அளித்துள்ளார் பேராசிரியர் திரு 'கல்கி' அவர்கள்; திருமதி 'குகப்ரியை' எழுதிய பரிசு நாவல் மேற்படி புத்தகம். "குகப்ரியையின் தமிழ் நடை உயிருள்ள நடை," என்று குறிப்பிட்டிருந்தார்கள். 1926-ஆம் ஆண்டு தொட்டு இவர் 'இலக்கிய மனம்' படைத்துத் திகழத் தொடங்கினர். கதை, கட்டுரை நாவல் என்று இப்படி எல்லாவிதப் பிரிவுகளிலும் தம் பேனாவைத் திருப்பி வருகிறார். ஹிந்தி மொழியை நன்கு அறிந்தவர். மொழிபெயர்ப்புக் கலையிலும் ஆர்வம் உள்ளவர். அதே போல இவரது எழுத்துக்கள் சிலவும் ஹிந்தியில் வடித்தெடுக்கப்பட்ட துண்டு. பெண்களுக்கென நடத்தப்பட்ட 'மங்கை', 'புதுமைப்பெண்' முதலிய சஞ்சிகைகள் 'குகப்ரியை'க்கு ஆசிரியப் பொறுப்பு வழங்கிக் கௌரவித்தன.

ஒரு பத்தாண்டுகளை இடைவெளியிட்டு ஒளி சிந்திய மற்றுமொரு பெண் தாரகை வசுமதி ராமசாமி அவர்கள். திருவாளர்கள் கல்கி, ராஜாஜி, வாசன் போன்றவர்களிடமிருந்து நற்பெயரையும் நல்லாசியையும் பெறும் பாக்கியம் வாய்ந்தவர்கள். இவர் தொடர்ந்து எழுதி வரும் 'தேவியின் கடிதம்' ஓர் அற்புதமான சிந்தனைக் களஞ்சியம் என்றுதான் சொல்ல வேண்டும். நட்பின் பெருமையைப் பற்றியும், இங்கிதத்தின் அவசியத்தைக் குறித்தும், பெண்களின் எதிர்காலம் பற்றியும், இன்னும் பல பல விஷயங்களைப் பிணைத்தும் எழுதி வருகிறார். அனைத்தும் பெண்களின் பிரகாசமான எதிர்காலத்துக்குப் பயன்படும் எச்சரிக்கைகளாக—போதனைகளாக—வேண்டுகோள்களாகக் கருதிக் கடைப்பிடிக்கப்பட வேண்டியனவாகவும் அமைகின்றன.

'குகப்ரியை' அவர்களும் 'பெண்களுக்கு' என்ற மகுடம் புனைந்த ஓர் இனிய அறிவு நூலை வழங்கியிருக்கிறார். விவாகம், இல்வாழ்க்கை, குழந்தைகள், இலக்கியமும் பெண்களும், பெண்களும் கலையும்-மேற்படி புத்தகத்தில் உறைந்துள்ள சில அத்தியாயத் தலைப்புக்கள் இவை.

பெண்களின் பெயர்களைத் துணைக்கு அழைத்துக் கொண்டு ஆண்கள் எழுத்துலகில் நடமாடி வரும் 'அற்புத'த்தை நம் தமிழ் மண்ணில்தான் காண முடியும்.

திருமதி வசுமதி ராமசாமி என்ற பெயர் சேகரம் செய்திருக்கும் புகழ் முழுவதும் 'வசுமதி' என்ற அந்த அன்பு உள்ளத்துக்கே உரிமை.

திருமதி ஸ்வர்ணம்பாள் சுப்பிரமணியம் என்ற நீண்ட பெயரைச் சுருக்கிக் கொண்ட 'குகப்ரியை' ஒரு பிறவி ஆசிரியை. தன் பேருக்கும் புகழுக்கும் தானே ஏகபோக உரிமை கொண்டவர்.

'மறைந்த ஜோதி', 'மூவர் ரகசியம்', 'கருணை வென்றது' 'திட்டம் போடுவோமா?' 'மோகன் பிறந்தான்' போன்ற கதைகள் சகோதரி வசுமதி அவர்களின் பெயர் பசுமையாகத் திகழ உதவுகின்றன.

நான் அன்று படித்த சகோதரி குகப்ரியையின் கதைகளில் இன்றும் நெஞ்சில் தங்கியுள்ள கதைகள்: 'தந்தையும் மகளும்', 'அடுத்த வீட்டு அகதி', 'ஜீவகலை', 'தேவகி'.

இவர்கள் — வசுமதி, குகப்ரியை இருவரும் எழுத்தில் மாத்திரமல்லாமல், பேச்சிலும் — அதாவது மேடைப் பேச்சிலும் சிறந்தவர்கள்.

தமக்கைமார்கள் இருவர்கட்கும் தங்கை உமையவளின் வணக்கமும் நன்றியும் உரியவை. ★

எங்கள் இதயங்கள் பேசுகின்றன

கடந்த ஐந்தாண்டுகளாகத் தவழ்ந்து வரும் இளஞ் செல்வி 'உமா' செய்து வரும் தமிழ்ப் பணியை எண்ணி எண்ணி மகிழ்கிறோம். துவங்கிய சில ஆண்டுகளுக்குள்ளாகவே தமிழ் நாட்டில் தனக்கென்று ஒரு தனியிடம் வகுத்துக் கொண்டு, தமிழ் மக்களின் இதயந் தன்னிலே நிரந்தர இடம் ஒன்றை 'உமா' பெற்றுளென்றால், அது அவள் ஆற்றி வரும் பணியின் பெருமையையே குறிக்கிறது.

சிவ. ஜம்புநாதன், கல்கத்தா.

....தமிழகம், தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் முதலியவற்றிற்கு, தம் வாழ்நாள் முழுதும் உழைத்துத் தொண்டு செய்து அவற்றின் வளர்ச்சியைக் கண்டு பூரிப்படைபவளாக மட்டுமல்லாமல், தமிழ் மக்களின் உள்ளங்களில் அரசியல் ஞானங்களைப் புயலெனக் கிளப்பிவிடும் சக்தி வாய்ந்தவளாயும், உண்மை விளம்பியாகவும், அநீதிக்குச் சவுக்கடி கொடுத்து நீதியை நிலைநாட்டும் நல்லெண்ணமுடையவளாயும், பிறரின் பிழைகளைத் துணிச்சலுடன் எடுத்துச் சொல்லி அவர்களை நேர்மையான பாதையில் இட்டுச் செல்லும் அன்புத் தாயாகவும் தமிழ் நாட்டில் தலையெடுத்திருக்கின்றாள் 'உமா' என்பதை "யார் வாழ இந்த வரி?" என்ற தலையங்கத்தி விருந்து உணர்ந்து கொள்வதோடு நின்றுவிடாமல், தன்மானத் தமிழர்களின் பெருமையை நீடூழி காலம் வாழ்ந்து பாரெங்கும் பரப்புவாளெனவும் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

சி. மாணிக்கம், இலங்கை.

...சென்ற இதழில் வெளியான புது வீட்டுக்கு நான் வந்திருக்கேன்' என்ற நாடகம் நகைச் சுவை மிகுந்து இருந்தது. இம்மாதிரி மெல்லிய நகைச்சுவை எழுத்துக்களையும் மாற்றி மாற்றி வெளியிட்டால்தான் 'கனமான' எழுத்துக்களுக்கு ஒரு மாற்றம் ஏற்படும். இது என் தாழ்மையான விண்ணப்பம்.

கே. பி. சுந்தரம், சென்னை-5.

உண்மைதான்; அதற்கெனவேதான் இதழுக்கு இதழ் பல சுவைப்பட்ட எழுத்துக்களையும் சேகரம் செய்து வெளியிட்டு வருகிறோம். மேற்படி நாடகம் சென்னை ரேடியோவிலும் ஒலிபரப்பப்பட்டது. ஆனால் ஒரே ஓர் அன்பருக்கு மாத்திரம் அந்நாடகம் பிடிக்கவில்லையாம். பாவம், அவர் தன் முழு முகவரியுடன், புரியும் கையெழுத்துடன் எமக்குக் கடிதம் எழுதியிருந்தால் தக்க பதிலை எழுதியிருப்போம். அபிப்பிராயங்களைச் சொல்ல முழு உரிமை பெற்றவர்கள் நேயர்கள். ஆதரவாளர்களின் கருத்துக்களை வரவேற்பதில் நாங்கள் பெரிதும் ஈடுபாடு காட்டி வருகிறோம். ஆனால், சொந்த விருப்பு வெறுப்புக்கு இடம் தரக்கூடாது. நேயர்கள் முழு முகவரியையும் எழுதல் வேண்டும்.

— துணை ஆசிரியர்.

'இரண்டாவது புதுமைப் பித்தன்' என்று மதிப்பிடும் அளவுக்குப் பலர் இருக்கிறார்கள் என்று திரு வேம்பு சொன்னது, அமரர் புதுமைப்பித்தன் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய மதிப்பைக் குறைப்பது போலாகும் என்பது உறுதியான அபிப்பிராயம்.

டி. முத்துஸ்வாமி, சென்னை-9.

மெய்; 'புதுமைப் பித்தன்' கேள்விக்கு நண்பர் வாசவன் சொன்ன பதில் எனக்கு உடன்பாடு.

...திரு பூவை எஸ். ஆறுமுகம் தயாரித்த 'சந்தித்தோம்—சிந்தித்தோம்' கட்டுரையில் திருவாசவன் தந்துள்ள பதில்கள் அவ்வளவு

பாராட்டத் தக்கனவாகவோ, ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவோ இல்லை. வளரும் எழுத்தாளர்களைப் பற்றி 'அனிச்சமலர்' என்று உவமானம் கூறிக் குறிப்பிட்டிருப்பது நிரம்பவும் வருத்தத்தை உண்டாக்குகிறது.

ஏ. ஆர். ராஜாமணி, புதுடில்லி.

இப்பகுதி வாசகர்களைப் பெரிதும் கவர்ந்திருக்கிறது. ஒரே கேள்விக்குக் கிடைக்கும் இரண்டு பதில்கள் எவ்வாறு அமைகின்றன என்பதை அறியவே இப் புதிய பகுதி ஆரம்பமானது. நண்பர் 'வாசவன்' தன் மனத்தில் பட்டதைச் சொன்னார். 'அனிச்ச மலர்' உதாரணம் எனக்கும் பிடிக்கவில்லை. 'பேட்டியின் போது அவ்விருவரது கருத்துக்களில் குறுக்கிட எனக்கு உடல் நலம் இல்லை. அவசரத்தில் தயாரான கட்டுரை இது. இனி இப்பகுதி விவாத அரங்கமாகவும் அமையும். போகப் போக விவரங்கள் தெரிவிக்கப்படும். உங்களுடைய கண்டனத்திற்கு என்னுடைய மனப்பூர்வமான நன்றி. — 'பூவை'.

....புது நரம்பாம் 'போலீஸ்காரன் மக'ளைக் கண்டதும் உவகை கொண்டேன், பேருவகை கொண்டேன்.

சுமதி, சேலம்-2.

....மாதம் இருமுறையாக 'உமா' வரவை எதிர்பார்க்கிறேன். திருமாயாவியின் 'வாடா விளக்கு' மிக அற்புதம். 'சந்தித்தோம் சிந்தித்தோம்' மிக அழகாக முடிகிறது. இனி இத் தொடர்ச்சியை எதிர்பார்க்கிறேன்.

ச. சண்முகம், சென்னை-4.

....தங்களுடைய 'தன்க்கு வந்தால் தெரியும்' என்ற மனோதத்துவ ஆராய்ச்சியோடு கூடிய அருமையான சொற்பொழிவை ரேடியோவில் கேட்டு மகிழ்ச்சியடைந்ததுமல்லாமல், அச்சொற்பொழிவை 'உமா' பத்திரிக்கையிலும் படித்து மகிழும்படியான வாய்ப்பு கிடைத்தமைக்கு நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். மேலும் இது போன்ற மனதத்துவ ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றவர்களுக்கு ஒரு படிப்பினையாக அமையும். தொடர்ந்து 'உமா' இதழ்களில் எழுதவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 'சந்தித்தோம் — சிந்தித்தோம்' வரவேற்கத்தகுந்த ஒரு புதுமையான பகுதி. தமிழறிஞர்களின் பேட்டிக் கட்டுரையை ஏன் நிறுத்தி விட்டீர்களென்று தெரியவில்லை.

ஏ. குப்புசாமி, பெரிய காஞ்சீபுரம்.

பேட்டிக் கட்டுரையின் மறு பிரிவு தானே இது? —ஆசிரியர்.

....தலையங்கம் — ஆட்சியாளரின் அடி வருடியே காலங்கழிக்கும், அறியாமையாளர்களுக்கு அறிவூட்டி எழுச்சியளிக்கும் சாட்டை. 'மாயாவி'யின் கதை எப்போதும் போல் இனிக்கிறது. 'வாடா விளக்கு' வாடாமல் இருக்க அவர் சென்ற இதழில் அளித்துள்ள திருப்பம் உதவுகிறது. 'சந்தித்தோம் — சிந்தித்தோம்' பயனுள்ள கருத்துக்கள் பல அளிக்கிறது. 'உமா' மாத மிருமுறையாக மலர வேண்டும் என்பதே என் போன்ற வாசகர்களின் ஏகோபித்த விருப்பம்.

சீ. ந. மூர்த்தி, சேலம்.

...'உமா'வின் புது அம்சங்கள் போற்றத் தக்கவை.

அ. நடராஜன் பி. எஸ். ஸி.,
எஸ். வி. கல்லூரி, திருப்பதி.

கதை..... கதையாம்!

'கார்த்திகை பாலன்'

'இன்புளுயன்ஸா!.... அப்பப்பா, பேரே வாயிலே நுழையலையே?.... இந்த வியாதி எப்படி தேசங் கடந்து, கடலைத் தாண்டி ஊருக்கு ஊரு டேரா போடுதாம்?.... பெரிய பெரிய டாக்டர்களுக்குக் கூடப் புரியாத அதிசயமான இந்த விஷக் காய்ச்சலின் ரகசியம் ஆண்டவனுக்கு மாத்திரந்தான் தெரியும் போலேயிருக்கு!....' என்று தனக்குள்ளாக எண்ணிப் பார்த்த பூபாலனுக்கு ஒரு பக்கம் வேடிக்கையாகவும், இன்னொரு பக்கம் வேதனையாகவும் இருந்தது.

பூபாலன் தன்னுடைய வேலைகளை முடித்துக்கொண்டான். பிறகு வாசலுக்கு வந்து சற்று நேரம் நின்றான். 'டாக்டர் ஆரோக்கியம் எம். பி. பி. எஸ்.' என்ற விளம்பரப் பலகைக்குக் கீழே காணப்பட்ட வார்த்தைகள் அவனுடைய பார்வையில் தெரிந்தன. ''டாக்டர் அவர்கள் இன்ப்ளுயன்ஸாவினால் அவஸ்தைப் படுகிறார். ஆகவே, வாடிக்கைக்காரர்கள் மன்னிக்கும்படி கோரப்படுகிறார்கள்,'' என்ற எச்சரிக்கையைப் படித்துப் பார்த்தபோது, அதை எழுதிய கம்பவுண்டரின் மூளையைப் போற்ற அவனுக்கு நேரம் இல்லை. ஆனால், இந்த டாக்டரை நம்பி வந்து ஏமாந்து திரும்பிச் சென்ற ஏழை நோயாளிகளை நினைத்து வருந்த வேலைக்காரப் பையன் பூபாலனுக்கு நேரம் இருந்தது.



இரவு. டிஸ்பென்ஸரிக்கு காவல் இருந்தான் கூர்க்கா. மாடியில் உறக்கம் பிடிக்காமல் புரண்டு கொண்டிருந்தான் பூபாலன். மேஜைமீது இருந்த புத்தகங்களைப் புரட்டினான்; ஒதுங்கிக் கிடந்த டைரியில் அவன் பார்வை சென்றது. அதற்குள், வாசலிலிருந்து 'கண கண' வென்று மணிச் சத்தம் கேட்டது. மாடியிலிருந்து ஓடி வந்து கீழே பார்த்தான்.

யாரோ ஒருவர், தாடி மீசை கொண்ட முகத்தைப் போர்வையினால் மூடிக் கொண்டு தள்ளாடி நடந்து வந்து, முகப்பில் காணப்பட்ட பெஞ்சிப் பலகையில் உட்கார்ந்தார். மறு விநாடி அவர் குப்புறப்படுத்துக் கொண்டு துடித்துக் கொண்டிருந்தார்.

''தம்பி, டாக்டர் ஐயாவைக் கூப்பிடு...'' என்றார் அவர்.

''ஐயோ! டாக்டர் ஐயாவுக்கும் விஷ ஜுரம் வந்திட்டுதுங்க...கம்பவுண்டர் ஐயாவை இங்கே இருந்து கவனிச்சுக்கச் சொன்னார் எஜமான். ஆனா ஐயாவை



கம்பவுண்டர் ஏமாத்திட்டார்!.... உங்க மாதிரி ஏழைங்களுக்கு இரக்கப்படுவார் டாக்டர். பாவம், எழுந்திருங்க. உங்களை எங்க டாக்டர் கிட்டே இட்டுக்கிட்டுப் போறேன்''.

சைக்கிள் ரிக்ஷா அவ்விருவரையும் லஸ் முனையில் உள்ள அந்தப் பங்களா முன் நிறுத்தியது.

"தம்பி, உங்க டாக்டர் ஐயா நல்லவர்தானே?.... ராத்திரியிலே தொந்தரவு கொடுப்பதாக நினைத்துக் கோபிக்க மாட்டாரே?"

"ஊஹூம், அப்படியெல்லாம் கோபப்படமாட்டாங்க. அவர் தங்கக் கம்பி. மற்ற டாக்டர்களுக்கெல்லாம் ஒரு வழிகாட்டி போல. இல்லையானு, இப்படி விஷஜுரம் ஆட்டிப் படைச்சுக்கிட்டு இருக்கிற போதுங்கூட, பொது ஜனங்கள் நன்மைக்காக ஆஸ்பத்திரியைத் தேடி இப்படி ஓடி வந்திருப்பாரா?" என்றுன் பூபாலன்.

"பூபாலா!...நான்தான் உன் எஜமான் என்று புரிந்து கொண்டாயா?...."

"ஓ!.... இதோ பாருங்கள்; உங்க டைரிதான் எனக்கு உதவியது. முன்பொரு முறை மாறு வேஷம் போட்டுக்கொண்டு உங்க கம்பவுண்டரை உங்க ஆஸ்பத்திரியில் சோதிச்ச கதையை நீங்களே டைரியிலே குறிச்சு வச்சிருக்கீங்களே....! ....நீங்க போட்ட பகல் வேஷமும், காய்ச்சல் செய்துவிட்ட மாறுதலும் எங்கே உங்களைக் காட்டிக் கொடுத்திடுமோன்னுதான் நீங்க வந்தவுடனே முகம் தெரியாமல் அப்படி குப்புறப் படுத்துக் கொண்டீங்க போலிருக்குது!" என்று கேட்டுவிட்டுச் சிரித்தான் பையன்.

"பூபாலா, உண்மையாகவே நீ கெட்டிக்காரப் பையன்தான்: விளையும் பயிர் முளையில் என்பது வாஸ்தவம்தான். நீ போ. ஆஸ்பத்திரியில் என்னைத் தேடி யாராவது நோயாளிகள் வந்தால் இங்கே கொண்டுவந்து விடு. அவர்களுக்கு ஆபத்துக்கு உதவ வேண்டும். இதுவே என் லட்சியம். கர்த்தரின் ஆணையும் இதுவே. ஆகவேதான் என்னைப் பற்றி நான் மறந்து விட்டேன். முதலில் மறந்து விடாமல் கம்பவுண்டர் எழுதித் தொங்க விட்டிருக்கும் அந்த அட்டையை எடுத்துவிடு. சோம்பேறி அவர். இந்த 'ப்ளு' பரிசளித்த புதுக் கார்களிலே சுற்றும் டாக்டர்களின் நிழலில் தூங்கவேண்டியவர் அவர்....!" என்றுர் டாக்டர் ஆரோக்கியம்.

தனக்குச் சம்பள உயர்வு கிடைத்த மகிழ்ச்சியில் 'பறக்கும் தட்டு' இல்லாமலேயே டிஸ்பென்ஸரியை நோக்கிப் பறந்து கொண்டிருந்தான் பூபாலன். ★

உங்கள் அதிருஷ்டம் 1957-58க்கு

உங்கள் பெயரும், முழு விலாசமும் கொண்ட ஒரு தபால் கார்டில் ஏதாவது ஒரு புஷ்பத்தின் பெயரை எழுதி எங்களுக்கு அனுப்புங்கள். ரூ. 1.25-க்கு (தபால்செலவு தனி) வரப்போகும் 12-மாதங்களுக்கு நாங்கள் உங்களுக்கு எதிர்கால பலன் எழுதி அனுப்புகிறோம். வியாபாரத்தில் லாப நஷ்டம், உத்தியோக உயர்வு, உத்தியோக மாற்றல், விவாகம், குழந்தை பிறப்பு, சுக துக்கங்கள் ஆகியவை பற்றிய விவரங்களையும், இன்னல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் மார்க்கத்தையும் தெரிவிக்கிறோம்.

Shree Swami SATNARAIN JYOTISH ASHRAM
(U. M.) HOSHIARPUR (Pb.)

கருத்து: **அ. வெங்கடேசன்**

இவர்கள் எழுத்தாளர்கள்

வி. ஸ. காண்டேகர்

'கலை கலைக்காகவே' என்ற கூற்று பொய்த்து விட்டது; அப்படிப்பட்ட கலை வாழ்வதும் இல்லை என்பது வரலாறு கண்ட உண்மை. 'வாழ்க்கைக்காகவே கலை', ஏன், 'வாழ்க்கையே ஒரு கலை' என்ற கொள்கை படைத்த கூட்டத்தைச் சேர்ந்தவர் காண்டேகர். தனது காலத்தையும் பிறரது காலத்தையும் போக்கும் எழுத்தாளர்கள் மத்தியில் லட்சிய வாழ்க்கையோடு வாழ்ந்து வெற்றி பெற்ற கதாநாயகர்கள் 'தினகரன்' ('கிரௌஞ்சவதம்') அசோகன் ('சுகம் எங்கே') போன்றவர்களின் தூய வாழ்க்கையைக் கலையாக்கிப் படைக்கும் காண்டேகர், விண்மீன்கள் மத்தியில் ஒரு வெண்ணிலவு எனக் கூறிடில் பொருந்தும்.

நாவலானாலும் சரி, சிறுகதையானாலும் சரி, அவற்றில் கலை மணம் மட்டும் கமழ்வதில்லை. சிந்தனைக்கு வித்தும் கிடைக்கிறது. வித்து செடியாய் மரமாய்ப் பூத்துக்கனிந்து பயன் தருகிறது என்பதும் உண்மை. ஆம்; அவர் எழுத்தோவியங்கள் சிந்தனையாளருக்கு ஒரு விருந்து; சிந்திக்காதவர்கட்கு அந் நோயைப் போக்கும் ஒரு மருந்து.

'சுகம் எங்கே?'—படைப்புக்களில் ஒரு பகலவன். தொண்டர் என்ற பெயரால் உலவும் சமுதாய விஷப் பூச்சிக்கும், குடும்பத்திற்கே தன் வாழ்வைத் தியாகம் செய்து இறுதி வாழ்வைப் பொதுத் தொண்டாக்கிக் கொள்ளும் அசோகனுக்கும் (கதாநாயகன்) வேறுபாட்டை உணர்த்தி மெய்த் தொண்டன் யாரென உணர வைக்கிறார் ஆசிரியர்.

'கிரௌஞ்சவதம்' ஓர் அமர காவியம். 'சமுதாய உணர்வு இது தான்; அவ்வுணர்ச்சிப் பெற்றது தான் வாழ்க்கை; அவனே எல்லோரிலும் பெரியவன்' என்ற குறிக்கோளை அடிப்படையாக அமைத்து காதல், தியாகம், தொண்டு என்ற உணர்ச்சிகளுக்கெல்லாம் எழுத்துருத் தந்து அமைக்கப்பட்ட மறக்க முடியாத வசன காவியம். மக்கள் தொண்டன் தினகரனை பேராசிரியர் அப்பண்ணாவும் வியக்கும் வண்ணம், அமைத்திருக்கிறார். அதைப் படித்த ஒவ்வொரு இளைஞனும் திலீபனாகவும் தினகரனாகவும் மாற பேராவல் கொள்கிறான்.

'கருகிய மொட்டு'—இந்நாட்டிலும் மேலை நாட்டு மேதைகள் உண்டு எனப் பறையறையும் முரசு.

இவற்றையெல்லாம் சுவைக்க நான் மட்டுந்தானா அவரை விரும்புகிறேன்; அல்ல! உலகத்தின் பல பகுதிகளிலும் பரந்து கிடக்கும் எண்ணிக்கையில்லாதவர்களில் நானும் ஒருவன். தமிழுக்கும் மராத்திக்கும் இலக்கியப் பாலம் அமைத்துக் கொடுத்த திரு கா. ஸ்ரீ. ஸ்ரீ அவர்களுக்கு இச்சமயத்தில் நன்றி சொல்ல வேண்டும். ★

திருட்டுப்பையன்

வல்லிக்கண்ணன்

"இதோ இருக்கிறாளே மீனுக்குட்டி, அவள் அப்பா பிள்ளை. அதோ, தரையில் கிடந்தபடி குறும்பு செய்கிறானே அவன் மணிப்பயல். அவன் அம்மா பிள்ளை. மீனு பேரில் எனக்கு ரொம்பவும் பிரியம். மணிப்பயல் மீது அவன் அம்மாவுக்கு அதிகமான ஆசை," என்று பெருமையோடு சொன்னார் 'வீட்டு ஐயா'— சிதம்பரம் பிள்ளை.

'அத்துடன் அவர் திருப்தி அடையவில்லை. தம் கையிலிருந்த குழந்தையோடு கொஞ்சிக் குலாவுவதில் மும்முரமாக ஈடுபட்டார். 'இல்லையாடி மீனி? நீ அப்பாவின் மீனுக் குஞ்சு தானே? செல்லக்குட்டி தானே?' என்று அன்பாகக் குழைந்தார். பூப் பந்துபோல் தோன்றிய சிறு குழந்தையை ஆர்வத்தோடு தழுவி, கன்னத்தில் முத்தமிட்டு, அதன் சின்னஞ்சிறு உதட்டுச் சிங்காரச் சிரிப்பைப் பார்த்துப் பார்த்து மிக மகிழ்ந்து போனார்.

அதே அறையில் சுவர் ஓரத்தில் நின்று, சோர்ந்த முகத்தோடு அவரையே கவனித்துக் கொண்டிருந்த சிறுவனின் பக்கம் சிதம்பரம் பிள்ளையின் பார்வை ஆசையோடு தாவி ஓடவில்லை. வாட்டம் கொண்டுவிட்ட அப் பூ முகத்தில், ஏக்கம் துளும்ப நின்ற அழகு விழிகள் சிந்திய பார்வையை தந்தையின் நோக்கு எதிர்கொண்டு ஏற்றுக் கொள்ளவே யில்லை.

அச் சிறுவனை நோக்கியவாறு இருந்த நமசிவாயம் — சிதம்பரத்தின் நண்பர் — "இவன் யார் பிள்ளை?" என்று கேட்டார்.

எதிர்பாராத அந்தக் கேள்வியினால் சற்றே திகைப்படைந்துவிட்ட சிதம்பரம் நண்பனின் முகத்தை நோக்கினார். "ஏன்? நம்ம பையன்தான். ராஜா அவன் பெயர்," என்று சொன்னார்.

நமசிவாயம் இளம் முறுவல் பூத்தார். "வந்து, மீனு உங்கள் பிள்ளை என்றீர்கள். மணி அம்மாவின் செல்லப்பிள்ளை என்று சொன்னீர்கள். அந்தப் பையன், ராஜா யார் பிள்ளையோ என்ற சந்தேகம், அதனால்தான் எனக்கு ஏற்பட்டது," என்றார்.

சிதம்பரத்துக்கு என்ன சொல்வது என்றே விளங்கவில்லை. ஆகவே, "அதுவா?" என்று கேட்டுவிட்டுக் 'கட கட' வென்று சிரித்தார் அவர்.

ராஜாவின் கண்கள் மிரண்டு புரண்டன. நமசிவாயத்தின் பார்வையை எதிரேற்றதும் அவனுடைய பிஞ்சு உதடுகளில் சிறு சிரிப்பு நெளிந்தது. அவன் வெட்கத்தினால் தலையைத் தாழ்த்தினான்; மகிழ்வினால் அம் முகத்தில் சிறு மலர்ச்சி பிரகாசித்தது.

"அவன்தான் மூத்தவன். நாலு வயசு ஆகுது. இந்த மீனுக்குஞ்சு பிறக்கிற வரையில் அவன்தான் ராசாப் பயலாக இருந்தான். அப்புறம் மீனு ராணி வந்து நம்ம இதய ராஜ்யத்தில் தனி இடம் பிடித்துக் கொண்டாள். இவளுக்கு இப்ப இரண்டு வயசு. மணிப்பயல் பிறந்து ஏழு மாசம் ஆகுது. அம்மாவுக்கு அவன் மீதுதான் கொள்ளை ஆசை. அதனாலே ராசாப் பயல் தனிக்காட்டு ராஜா ஆகிவிட நேர்ந்

த்து,'' என்று பெருமையாகப் பேசினர் பிள்ளைகளைப் பெற்றவர்.

குளுமை என்று எண்ணி அவர் பேசிய பேச்சு எல்லாம் நமசிவாயத்தின் உள்ளத்தில் நெருப்பு மாதிரிச் சுட்டது. அவருடைய கண்கள் மட்டும் ராஜாவைப் பாராதது போல் பார்த்து அளந்து கொண்டிருந்தன.

அந்தச் சிறுவனின் நெஞ்சு விம்மி வடிந்தது. அவன் நாசி நெடிய மூச்சு ஒன்றை வெளியேற்றியது.

'பாவம்! பையனுக்கு தானுகவே பெருமூச்சு வருகிறது. இளம் உள்ளம் ஏங்கத்தானே செய்யும்?' என்று நமசிவாயம் நினைத்தார்.

''ஓடி வாடா, ராஜாப் பயலே! இப்படி வா!'' என்று இனிய குரலில் அவனை அழைத்தார் அவர்.

அவனுடைய முகம் நிமிர்ந்தது. அவர் முகததில் அவனுடைய மின்னும் கண்கள் என்ன கண்டனவோ! காலை வெயிலைக் கண்டதும் பொன்மயமாய்ப் பூத்தொளிரும் சூரியகாந்தி போல் அச் சின்னஞ்சிறு அழகு முகமும் சோபை பெற்றது.

''வா வா.... ஓடி வா.... இப்படி வா!'' என்று அவர் விளையாட்டுத்தனம் பயிலவும் அவன் சிரித்தான். அவன் கண்களில் ஆனந்த மயமான ஒளி சுடரிட்டது. அவன் தயங்கித் தயங்கி நின்று, அடி அடியாக அசைந்து நெருங்கிக் கொண்டிருந்தான்.

''ராசாப் பயல் வந்து விட்டான்.... இதோ வந்துவிட்

புதுடில்லி இந்திய அரசாங்க விளம்பர இலாக்கா காரியாலயத்தைச் சேர்ந்த திரு **எம். ராமசுப்பிரமணியன்** அவர்களுக்கும் **குமாரி சேது**வுக்கும் திருநெல்வேலியில் சமீபத்தில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. மணமக்கள் நீடூழி வாழ்க !

டான்.... என்னைத் தொடப் போருன்..... இதோ தொட்டுவிட்டான்...!''

நமசிவாயத்தின் குரல் அவனுக்குக் 'குஷி' ஊட்டிக் கொண்டிருந்தது. திடீரென்று, அதன் வசிய சக்தியைத் தவிர்க்க முடியாதவனாகி, அவன் கலகலவென நகைத்துக் கொண்டு ஓடியே வந்து அவர்மீது சாய்ந்தான். அவர் அவனை வாரி எடுத்துத் தழுவிக்கொண்டார். அந்தப் பையனுக்குப் பொங்கி வந்த உற்சாகத்துக்கு ஓர் அளவு இருக்க முடியுமா, என்ன ?

அவன் குதித்தான். ஓடி ஆடி விளையாடினன். அவரிடம் எவ்வளவோ பேசிக் களித்தான். நமசிவாயமும் அவனுடைய தோழனாக மாறி அவனுக்கு மகிழ்ச்சி ஊட்டிக் கொண்டிருந்தார்..

''பரவால்லியே; பயல் உங்களை பிரண்டு புடிச்சிட்டான் போலிருக்குதே?'' என்ருர் தந்தை.

ராஜாப் பயல் மேலும் மேலும் குதூகலத்தோடு கும்மாளி போடுவதைக் கவனித்த சிதம்பரம் பிள்ளையும், அவர் மனைவி மீனுட்சியும் ஆச்சரியப்பட்டார்கள்.

''இன்னிக்கு அவனுக்கு என்னமோ தெரியலே, ஒரே குஷியாக இருக்கிருன். யாரு கூடவும் அவன் இப்படிப் பேசிச் சிரித்து விளையாடியதே இல்லை. அவன் அம்மாச்சி வந்தால்தான் கொஞ்சம் சந்தோஷமாகக் காணப்படுவான்,'' என்ருர் தந்தை.

அவனுடைய அப்பா விலகிப் போயிருந்த சமயத்தில், ராஜாப் பயல் நமசிவாயத்தின் முகத்தை ஆர்வத்தோடு கவனித்து மெதுவாகச் சொன்னுன் :

''மீனு அப்பாப் பிள்ளை. மணி அம்மாப் பிள்ளை. நான் அம்மாச்சி பிள்ளை.''

இந்த விஷயம் சிறுவனின் உள்ளத்தில் உறுத்திக் கொண்டே இருக்கிறது என்பதை நமசிவாயம் உணர்ந்தார். அவருக்கு அப்பையன் மீது அனுதாபம் ஏற்பட்டது. 'பெற்றேர்கள் தங்கள் குழந்தைகளுக்கிடையிலேயே பேதம் காட்டுவானேன் ? சின்னஞ் சிறுசுகளின் களங்கமற்ற உள்ளத்தில் வேதனை உண்டாக்குவானேன்? தங்கள் தவறுகளை அவர்கள் எப்பொழுதுதான் உணர்வார்களோ ?' என்ற எண்ணம் அவர் மனசில் படர்ந்தது.

''எங்க ஆச்சி இங்கே அடிக்கடி வரமாட்டாள். எப்பவாவதுதான் வருவாள்,'' என்ருன் பையன். அவன் குரலில் வருத்தமும் ஏக்கமும் கலந்திருந்ததாக அவருக்குத் தோன்றியது.

அவரது மடிமீது புரண்டு கொண்டு, அவருடைய சட்டைப் பித்தானைத் தன் விரல்களினல் உருட்டி விளையாடியவாறே அவன் கேட்டான், ''நீ ஊருக்குப் போயிரிவியோ ?'' என்று.

''ஊம்ம்.... சாயங்காலம் போய் விடுவேன்.''

''ஏன் போறே? இங்கேயே இரேன்,'' என்று பையன் மனுச் செய்தான்.

"இங்கேயே இருந்துவிட முடியாதே. எனக்கு வேறே வேலைகள் இருக்கு, ராஜா," என்று நமசிவாயம் சொன்னார். அவர் கை விரல்கள் அவன் தலைமுடியினூடே கிளு கிளுத்து ஓடிக் கொண்டிருந்தன.

"வேண்டாம். நீ போக வேண்டாம்," என்று கெஞ்சினான் ராஜா.

"ஊம்" என்றார் அவர்.

அவன் ஆனந்த மிகுதியால் அவர் கழுத்தைக் கட்டிக் கொண்டான். பிறகு அவனுடைய உற்சாகம் மேலும் அதிகரித்து விட்டது. 'டேய் சும்மா கிடடா!.... அடேய், சும்மா இருக்கியா, உதைக்கவா?' என்று அப்பா அடிக்கடி அதட்ட வேண்டிய அளவுக்கு அவன் குதியாட்டம் வளர்ந்து விட்டது.

சாப்பிட்டு முடிந்ததும் எல்லோரும் ஓய்வு பெறுவதற்காகப் படுத்தார்கள். ராஜாப் பயலும் படுத்தான். சீக்கிரமே தூங்கிப் போனான். இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு நமசிவாயம் விடை பெற்றுக் கொண்டு கிளம்பிய போது கூட அவன் விழித்து எழவில்லை.

'அவன் கண் விழித்ததும் என்னைக் காணாமல் ஏமாற்றம் அடைவான். நான் போய்விட்டதற்காக வருத்தப்படுவான்' என்று அவர் எண்ணினார். உடனடியாகவே இந் நினைப்பும் தோன்றியது:

'அந்த உள்ளத்தில் எத்தனையோ ஏமாற்றங்கள்! எவ்வளவோ வேதனைகள்! இந்தச் சிறு வயசிலேயே ஏனோ இந்த நிலைமை?'

அச் சிறு உள்ளத்தின் ஏக்கங்களையும் ஏமாற்றங்களையும் பற்றியே எண்ணிக் கொண்டிருக்க நமசிவாயத்துக்குப் பொழுது இல்லை. அவருடைய அலுவல்களே அவருக்கு மிக அதிகமாக இருந்தன. அதனால் அவர் அந்தப் பையனை மறந்துவிட்டார் என்று கூடச் சொல்லலாம்.

திருவாளர் டி. ஜி. ஏழுமலை, திருமதி காந்தி அம்மை இவர்களின் தலைமகன் டி. இ. கண்ணபிரானுக்கும் ஜெயகுமாரிக்கும் 9-6-57ல் திருமணம் சிறப்புற நடந்து முடிந்தது. அன்று மாலை திரு சி. எஸ். ஜெயராமனின் இன்னிசைக் கச்சேரி நடந்தது. சென்னையிலுள்ள பிரமுகர்கள் பலர் மணமக்களை வாழ்த்தினர்கள்.

சிதம்பரம் பிள்ளையை அவர் அடிக்கடி சந்திப்பதுமில்லை. சில மாதங்களுக்கு ஒரு தடவை, எப்பொழுதாவது, அபூர்வமாக நிகழும் அவர்களுடைய சந்திப்பு.

ஆறு—ஏழு மாதங்களுக்குப் பிறகு, அப்படி ஒரு சமயம், நமசிவாயம் சிதம்பரம் பிள்ளையைச் சந்திக்க நேர்ந்தது. பேச்சோடு பேச்சாக ராஜாப் பயலைப் பற்றியும் சொல்லி வைத்தார் சி. பி.

"அந்தப் பயல்தான் ஒரு மாதிரியாக மாறிக்கொண்டு வருகிறான். மனசிலே ஏதோ எண்ணத்தை வச்சுக்கிட்டு அடம் பிடிக்கிறான். அவன் இப்படி கல்லுளிமங்கத்தனம் யெல்லாம் பண்ணுவான்னு நாங்க எண்ணியதே இல்லே," என்று தந்தை சொன்னார். அவன் தங்கையை அடிக்கிறான். தம்பியைத் தூக்கிக் கீழே போடுவதில் அவனுக்கு உற்சாகம் பிறந்திருப்பதாகத் தெரிகிறது. சில சமயம், "எனக்குப் பசிக்கலே. சோறு வேண்டாம், தண்ணி வேண்டாம்," என்று சொல்லிப் படுத்து விடுகிறான். உடம்புக்கு ஒண்ணும் இல்லாத போதே சீக்கு வந்து விட்ட மாதிரி பம்மாத்துப் பண்ணி,

அழுது அடிச்சு அவன் அம்மா வுக்கு ரொம்பவும் தொல்லை கொடுக்கிறான் — இவ்வாறு குறை கூறினார் பிள்ளை.

நமசிவாயம் "அட அடா!" என்றார். பிறகு சொன்னார்: "மூன்று குழந்தைகள் உள்ள இடத்தில், நீங்கள் அவனை ஒதுக்கி வைத்ததனாலேதான் அவன் இப்படி எல்லாம் செய்கிறான்...."

"நீங்க ஒண்ணு," என்று குறுக்கிட்டார் சி. பி.

"நாங்க அவனுக்கு என்ன குறை வைக்கிறோம்? சாப்பாடு தின்பண்டம், நல்ல சட்டை துணிமணி, விளையாட்டுச் சாமான்கள்—எதில்தான் அவனுக்குக் குறைவு?" என்றார்.

சொந்தக் குழந்தையின் உள்ளத்தைக் கூடச் சரியாகப் புரிந்து கொள்ள முடியாத தந்தை மீது நண்பருக்கு அனுதாபம்தான் உண்டாயிற்று. ஆகவே அவர் அதிகம் பேசவில்லை.

நமசிவாயம் மறுபடியும் நண்பரைச் சந்திப்பதற்குள் காலம் வெகு வேகமாக ஓடிவிட்டது. ஓடுகின்ற காலக் கிழவன் அலட்சியமாக ஒரு வருஷத்தை விழுங்கி ஏப்பமிட்டிருந்தான். உலக நிகழ்ச்சிகளையும் மனிதரின் வாழ்க்கைப் போராட்டங்களையும் உள்ளத் துடிப்புக்களையும் பற்றி இதயமற்ற காலதேவனுக்கு என்ன கவலை இருக்கப் போகிறது?

சிதம்பரம் பிள்ளையின் வீட்டில் நமசிவாயம் அடி எடுத்து வைத்த போது, அங்கே அமைதி குலைந்த நிலையே காணப்பட்டது. பிள்ளை ராஜாப் பயலை 'கண்ணு மூக்கு தெரியாமல்' அறைந்து கொண்டிருந்தார். மீனாட்சி, "செய்றதைச் செய்து போட்டு இப்ப என்ன, குற அழுகை வேண்டிக் கிடக்குது குற அழுகை?" என்று புலம்பிக் கொண்டிருந்தாள்.

நமசிவாயம் சற்று நேரம் காத்திருந்தார். கோபம் தணியப் பெறுத தோற்றத்துடனேயே சி. பி. வந்து சேர்ந்தார். "என்ன, பையன் என்ன செய்தான்?" என்று கேட்ட நண்பரிடம் பெரிதாகவே முறையிட்டார் அவர்.

"அந்தப் பயல் வரவரக் கெட்டுப் போனான். அஞ்சரை வயசு ஆகுது. அதுக்குள்ளே இவன் பெரிய திருட்டுப் பயலாக வளர்ந்து விட்டான். ஏதோ தின்பண்டம்—கின்பண்டம் திருடுகிறான்னு நினைக்கிறீங்களா? இல்லையே! அவனுக்குப் பிரயோசனம் இல்லாத சாமான்கள், விலை உயர்ந்த பொருள்களை எல்லாம் அமுக்கி விடுகிறான், ஐயா. சட்டைப் பையிலிருந்து ரூபாய் நோட்டுகளை அபேஸ் பண்ணி எங்கோ பதுக்கி வைத்து விடுகிறான். 'எங்கேடா வைத்தே, என்ன செய்தே' என்று கெஞ்சியும் கொஞ்சியும், உருட்டியும் மிரட்டியும் கேட்கக் கேட்க அவன் சும்மா சிரித்துக் கொண்டே நிற்கிறான். எவ்வளவு உதை வேண்டுமானாலும் கொடுங்கள்; அறையுங்கள்—ஊம் ஹூம்! கல்லுளி மங்கன் கெட்டான் போங்கள். பிறகு, எப்பவாவது, அவனுக்கா இஷ்டம் ஏற்படுகிற போது அதை மறைத்து வைத்திருக்கிற இடத்தைச் சொல்லுவான். இந்தத் திருட்டுப் புத்தி இவனுக்கு எங்கேயிருந்துதான் வந்ததோ?"

சிதம்பரம் பிள்ளை அழாத குறையாகப் புலம்பித் தீர்த்தார். நமசிவாயம் தலையை ஆட்டிக் கொண்டிருந்தாரே தவிர, வாய் திறக்கவில்லை. அவர் மனம் எங்கோ சஞ்சரித்து வந்தது. திடீரென்று அவர் கேட்டார், "இன்றைக்கு அவன் என்ன செய்தான்?" என்று.

"திருட்டுப் பயல் தன் வேலையைக் காட்டி விட்டான். மேஜை மீது என் பவுண்டன் பேனா இருந்தது. விலை உயர்ந்தது. அதைக் காணவில்லை. இந்தப் பயல்தான் எடுத்து எங்கோ பதுக்கி வைத்திருக்கிறான். அவனை நயமாகவும் பயமாகவும் கேட்டுப் பார்த்தோம். டேய் ராசா, கண்ணே, மூக்கே

நான் அவன் சிக்காளி மாதிரி முன்பு செயல் புரிய முயன்றான். உறுதியான உடலும், குறும்புத்தன சுபாவமும் துடிப்பும் பெற்றிருந்த அவனுக்கே அது பிடிக்கவில்லை போலும்! ஆகையால் சுலபமாகப் பிறர் கவனத்தைக் கவருதற்காகத் திருடக் கற்றுக் கொண்டான் அவன்.

சாதாரண சமயங்களில் தன்னைத் திரும்பியும் பார்க்காத பெற்றோர்கள் — தங்கையையும் தம்பியையும் கொஞ்சுவதையே வாழ்க்கை இன்பமாகக் கருதிவிட்ட அப்பாவும் அம்மாவும்— சாமான்களைப் பறி கொடுத்ததும் தன்மீது அபரிமிதமான கவனிப்பைச் செலுத்துவதை அவன் உணர்ந்து கொண்டான். அவர்கள் கெஞ்சினார்கள். கொஞ்சுதலாகவும் நயந்து பேசியும் கேட்டார்கள். இவற்றைப் பெறுவதற்காக அவன் அடியும் உதையும் படவும் தயாராக இருந்தான். அவைகூட அவனுக்கு விசேஷமான கவனிப்புக்களாகத்தான் பட்டிருக்க வேண்டும். அதனால்தான் அவன் சிரித்துக் கொண்டிருக்க முடிகிறது.

இவ்வாறு எண்ணினார் நமசிவாயம்.

“நீங்கள் அடிப்பதனாலும் ஏசுவதனாலும் ராஜாப் பயலின் திருட்டுக் குணத்தைப் போக்கடிக்க முடியாது. அவனுக்குத் தேவையான அன்பையும் கவனிப்பையும் தருவதற்கு நீங்கள் தயங்கக் கூடாது. மற்றக் குழந்தைகளைவிடத் தான் மட்டமானவன் என்ற எண்ணம் அவன் உள்ளத்தில் நிலைபெறும்படி விட்டுவிடக் கூடாது. இந்த எண்ணம் நிரந்தரமாகிவிடுமானால், அவன் வாழ்க்கையே பாழாகிவிடும்,” என்று அவர் — நமசிவாயம் நண்பரிடம் சொன்னார்.

அவருடைய பேச்சை அங்கீகரிக்கவும் முடியாமல், வெட்டிப் பேசவும் மனமில்லாமல், மோட்டைப் பார்த்துக் கொண்டு மோவாயைத் தடவியபடி உட்கார்ந்திருந்தார் சிதம்பரம் பிள்ளை. ○

17221



என்றெல்லாம் சொல்லச் சொல்ல அவன் அசையவில்லை. அற்புதமாக எதையோ சாதித்து விட்டு, அந்தப் பெருமையில் சொக்கி நிற்கிறவன் போல, சிரித்துக் கொண்டே இருந்தான். எவ்வளவு தூரம்தான் பொறுக்க முடியும்? கொடுத்தேன் சரியான பூசைக் கப்பு!'' என்று தந்தை தெரிவித்தார்.

நமசிவாயத்தின் உள்ளம் கசப்பு உணர்வைப் பெருமூச்சாக வெளியே கக்கியது. வீணாகக் கெட்டுப்போன குழந்தைக்காக வருத்தப் படுவதா, அப்படிக் கெடும்படி தூண்டிய பெற்றோருக்காக வருத்தப் படுவதா என்றே புரியவில்லை அவருக்கு. குழந்தைகளைக் கவனித்து ஆராய்வதில் சிரத்தை உடையவர் அவர். குழந்தைகளைப் பற்றிய நூல்களை ஆர்வத்தோடு படிக்கும் வழக்கமும் அவருக்கு உண்டு. எனவே, ராஜாப் பயல் ஏன் திருட்டுப் பையனாக மாறினான் என்பதை அவரால் ஒருவாறு ஊகிக்க முடிந்தது.

பெற்றோரின் அன்பையும் கவனிப்பையும் இழந்துவிட்ட பையன் அவர்கள் கவனத்தைத் தன்பக்கம் திருப்பிக் கொள்ள ஆசைப்பட்டான். அது இயல்பு. அதற்காகத்

For

QUALITY DIAMONDS

EXQUISITE JEWELLERY

ARTISTIC SILVER WARES

M|s. T. GOVINDARAJULU NAIDU

DIAMOND MERCHANTS & JEWELLERS

28, NETAJI ROAD :: MADRAS-1.

★

Phone: 4818 **T.G.N.** **Grams: "ALANKAR"**

விரும்பியதை அடையுங்கள்

மாய மோதிரம்

நீங்கள் காதலித்தவர்கள், இந்த மாய மோதிரத்தை அணிந்தால், உங்கள் காலடியில் அவர்கள் விழுவார்கள். எவ்வளவு கல் மனத்தினர்களானாலும், தூரத்தில் இருந்தாலும், அவர்களது மனம் இளகி, உங்கள் கட்டளைப்படி நடப்பார்கள். நீங்கள் விரும்பிய சேவையைப் பெறலாம். நீங்கள் விரும்பியவர்களை மணந்து, பெரும் பொருளுடன், மக்கட் பேறையும் அடையலாம். வியாபாரத் துறையிலும், பரீட்சையிலும் வெற்றியை காணலாம். உங்கள் ராசி நல்ல திருப்பத்தை அடைந்து, அதிர்ஷ்டமுள்ளவர்களாக இருக்கலாம். திருப்திகரமான சுக வாழ்வையும் பெறலாம்.

ஒரு மோதிரம் விலை ரூ. 1-94 பைசா. ஒரு பிரத்தியோகமானது 3-94 பைசா.

இது நல்ல தருணத்தில் தயாரித்தது. அற்புத பலனை தரும். திருப்தியடையவில்லையெனில், பணம் வாபஸ் பெறலாம். ஒரு முறை பரீட்சை செய்தால் பலனை அடையலாம்.

Principal:

THE BENGAL MESMERISM HOUSE

(U. M.) NAKODAR, (P. B)

HEWLETT'S
MIXTURE

ஹியூலெட்ஸ்
மிக்ஸர்

80 ஆண்டுகளுக்கு மேலாக இந்த ஔஷதம், அஜீர்ணம், வயிற்றுக் கோளாறுகள், நெஞ்செரிச்சல், வாயு பொருமல் புளிப்பு, குடல் வியாதிகள் இவற்றிற்கு முக்கிய பரிகாரமாக உலக முற்றிலும் பெயர் பெற்று விளங்கி வருகிறது. அபினி சேர்த்தும், அல்லாமலும் 4 அவுன்ஸ், 10 அவுன்ஸ் அளவுகளில் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

C. J. HEWLETT & SON
(INDIA) PRIVATE LTD.,
MADRAS-3.

நான்கு
நன்மணிகள்
ZAMA
INHALER
ஜாமா இன்ஹேலர்
ஜலதோஷத்திற்கு
Z·AMA
RUB
ஜாமா றப்
ஜலதோஷம்
தலைவலி முதலியவைகளுக்கு
ஜாமா ஆயில்
ஜலதோஷம்
தலைவலி முதலியவைகளுக்கு
AMARCOSE
அமர்கோஸ்
அசல் குளுகோஸ பவுடர்
அமர்சந்த் சோபாசந்த்
கபால் பெட்டி 518 --- சென்னை-3
போன் 2182
தந்தி "ஜாமா"

அச்சிட்டு வெளியிடுபவர், ஆசிரியர்: ஜி. உமாபதி, உமா பிரிண்டர்ஸ்.
4/32, தாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1 (தமிழ் நாடு) போன்: 2200.


அன்னையின் உற்ற தோழி
ஐயோ பாவம்! குழந்தைக்கு மறுபடி சளிப்பு
அச்
நல்ல முடக்கு வாதம்! வலி தாங்கமுடியவில்லை இன்றைக்கு ஆபீஸுக்குப் போனாற்போல தான்.
அம்மா! என் கால் சுளுக்கிண்டுடுத்தே. இன்னிக்கி எப்படி மாட்ச் ஆடுவேன்.
டாக்டரின் அறையில
ஆமாம். அம்மா! தலைவலிக்கு மட்டுமல்ல. விட்டில்ஸ் ஓரியண்டல் பாம், சுளுக்கு, பிடிப்பு, வாதம் மற்றும் எல்லா வலிகளுக்கும் மிகச்சிறந்தது. சளிக்கும், இருமலுக்கும், இணையற்ற நிவாரணி. நீங்கள் எப்பொழுதும் கைவசம் வைத்திருக்க வேண்டும்.
சில நாட்களுக்குப் பின்
ஓரியண்டல் பாம் தான் உங்களை இவ்வளவு சீக்கிரம் குணப்படுத்தியது.
ஆமாம். நான் ஆபீஸுக்குக் கிளம்பியாச்சு! இலையைப்போடு
நானும் கூட இன்றைக்கு மாட்சில சக்கை போடு போடப் போகிறேன் அப்பா!
ஒவ்வொரு வீட்டிலும் விட்டில்ஸ் ஓரியண்டல் பாம் அவசியம் இருக்க வேண்டும்
ORIENTAL BALM
விட்டில்ஸ
ஓரியண்டல் பாம்
எல்லா சளி, வலி, நோவுகளுக்கும்

Regd. No. M 6309 UMA July 1957
Registered as a Newspaper in Ceylon.

இலங்கை... கிடைக்கும் இடம்: AVRA Ltd., Colombo.

Edited ... and Published by C. Umapathy, at Uma Printers,